
வால்மீகி - கம்பன் மாற்றங்கள்

பி.சி. சீதாபதி



கோவை கம்பன் கழக வெளியீடு

201

வான்மீகி — கம்பன்

மாற்றங்கள்

பாலகாண்டம்

பி. சி. சீதாபதி

வெளியீடு ;

கம்பன் கழகம்

கோயமுத்தூர் - 37.

வான்மீகி – கம்பன் மாற்றங்கள்
பாலகாண்டம்

வெளியீடு :

கம்பன் கழகம்
மணி ஃபீடர் பள்ளி
பாப்பநாயக்கன்பாளையம், கோயமுத்தூர் - 37

(11—2—1984 ஆம் தேதியன்று கோவையில் நடைபெற்ற கம்பன் விழாவில் வெளியிடப்பட்டது)

விலை : ரூபாய் பத்து

அச்சும், அமைப்பும் :

கஸ்தூரி பிரிண்டிங் பிரஸ், டாக்டர் நஞ்சப்பா சாலை, கோயமுத்தூர் - 18



அறிமுகம்

''படிகொண்ட கீர்த்தி இராமாயணம் என்னும் பக்தி வெள்ளம்'' என்று இராமகாதையைப் புகழ்ந்து பேசுவர் பெரியோர். இன்று நம்மிடையே இருக்கும் பலமொழி இராமாயணக் காப்பியங்களுக்கு மூலமாய் இருப்பது வால்மீகி முனிவர் வடமொழியில் இயற்றிய இராமாயணம்தான். அவருக்குப் பிறகு பல்வேறு புலவர்கள் தங்கள் தங்கள் காலத்திற்கேற்ப, பழக்கவழக்கங்களுக் கேற்ப, கருத்துக்களையும், சம்பவங்களையும் மாற்றம் செய்து தங்கள் இராமாயணத்தில் கொடுத்திருக்கிறார்கள். வான்மீகிக்குப் பிறகு பல ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்னர் கம்பன் தான் இராமகாதையைத் தமிழில் முதலில் எழுதினான். இராமாயண மொழிபெயர்ப்பின் அவசியத்தை கம்பன் உணர்ந் திருந்தான். யாவரும் எளிதில் புரிந்து கொள்ளும் வண்ணம், தன் கவிதைத் திறமையினால் ஒப்பும், மிக்கும் இல்லாத இராம காதையைத் தமிழில் செய்து, கவிச்சக்ரவர்த்தி என்னும் சிறப்பும் பெற்றான்.

இராமாயணப் பிரசங்கம் செய்யும் உபன்யாசகர்கள், வடமொழி வால்மீகி இராமாயணத்தையோ, தமிழில் கம்ப இராமாயணத்தையோதான் அதிகமாகச் சொல்லும் பழக்கம் தமிழ் நாட்டில் இருந்து கொண்டுவருகிறது. அவ்வப்பொழுது எவ்வாறு கம்பன் வான்மீகியிடமிருந்து மாறுபடுகிறான், மூலக்கதை எவ்வாறு உள்ளது என்பனவற்றை ஒப்பிட்டு உபன்யாசகர்கள் சொல்லுவது உண்டு. அப்பொழுதுதான் நமக்கும் இவ்விதமான மாற்றங்கள் இருக்கின்றன என்பது தெரியவருகிறது. இவைகளுக்குப் பின்னால்

வெளிவந்த பல இராமாயணங்களில் கதையமைப்பிலே மாற்றம், சம்பவங்களில் வேறுபாடுகள், சொல்லாமல் விட்ட செய்திகள் என்று பல மாறுபாடுகள் இருக்கின்றன. இவைகள் எல்லாம் காலத்தை யொட்டி மாற்றம் செய்தவைகளாகவே அமையப் பெற்றுள்ளன.

வான்மீகி இராமாயணத்தினின்றும் – கம்பன் சுமார் 800க்கும் அதிகமான இடங்களில் மாறுபட்டு இருக்கிறுன் என்று இரண்டையும் நன்கு அறிந்தவர்கள் கூறுகின்றுர்கள். எங்கு, ஏன் அந்த மாற்றங்களேக் கம்பன் செய்தான் என்று இது வரையிலும் யாரும் சர்க்கம் — படலம் வாராக நுணுகி ஆராய்ந்து சொன்னது கிடையாது : மேலும் இக்காலத்தில் சொற்பொழிவு செய்பவர்கள் பன்மொழிப்புலவர்கள் அல்லர். ஆகவே இம்மாதிரியான வான்மீகி – கம்பன் மாற்றங்கள் என்ற நூல் இருந்தால், பெரும் பயனுடையதாக இருப்பதோடு, மூலநூலுடன் மற்றையதை ஒப்பு நோக்கி ஆராய்வதன் மூலம், நூலே நன்ருக அனுபவிக்க முடியும், புரிந்து கொள்ளவும் முடியும் என்று பலரும் எண்ணினுர்கள். எனவே அனேவருக்கும் பயன்படத்தக்க வகையில் இந்நூலே, கோவைக் கம்பன் கழகத்தின் பதிப்பாக வெளியிடுவது என்று முடிவு செய்தோம். திரு. பி. சி. சீதாபதி அவர்கள் எழுதியுள்ள இந்நூலே, அமரர் கம்பன் அடிப்பொடி அவர்கள் முழுமையும் படித்துப் பார்த்து, பாராட்டி வெளிவருவதற்குப் பெரும் காரண கர்த்தராக இருந்தார்கள். பல இடங்களில் தக்க திருத்தங்களும் செய்து கொடுத்துள்ளார்கள். அவரது ஊக்கம் காரணமாகத்தான் வான்மீகி–கம்பன் மாற்றங்கள் என்ற நூலின் முதற் காண்டத்தை– பாலகாண்டத்தைக் கம்பன் கழகம் முதல் நூலாக வெளியிடுகிறது. கம்பன் அன்பர்களும், ரசிகர்களும், புலவர் பெருமக்களும் தங்கள் முழுமையான ஆதரவைக் கொடுக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறேம்.

கம்பன் புகழ் வாழ்க ! வளர்க !!

கோவை, }
11—2—1984 }

ஜி. கே. சுந்தரம்
தலேவர்
கம்பன் கழகம்

அணிந்துரை

என் அருமை நண்பர் திரு. சீதாபதி வள்ளுவரிடத்தும் கம்பனிடத்தும் அளவற்ற பக்தி பூண்டவர்; இலக்கிய ரசிகர். செல்வத்துள் செல்வமாம் கேள்விச் செல்வத்தை நிரம்ப உடையவர். கம்பன் விழாக்கள் என்றால் சீதாபதி முன்நிற்பார். ஆகவே கம்பனையும் வான்மீகியையும் ஒப்புநோக்க அவருக்குத் தகுதியிருக்கிறது.

கம்பனின் இராமாவதாரம் தனிச் சிறப்புடையது. வான்மீகியிடத்திருந்து ராமகதையை எடுத்துக்கொண்டான் என்பதில் ஐயமில்லை; அப்படியானால் வான்மீகத்தின் மொழி பெயர்ப்பு கம்பராமாயணம் என்று சொல்லமுடியாது. இல்லை வான்மீகத்தின் தழுவல் என்று கூறமுடியுமா? அப்படியும் சொல்ல முடியாது. ஆனாலும் ஆதிகவியை ஒட்டியே தன் கதையை அமைத்துக் கொண்டான் கம்பன். கம்பனையும் வான்மீகியையும் ஒப்பிட்டும் வேறுபல உலக மகாகவிகளை ஒப்பிட்டும் கம்பன் உலக மகாகவிகளுக் கெல்லாம் சக்கரவர்த்தி என்று நிரூபணம் செய்தார் மகரிஷி வ. வே. சு. அய்யர் அவர்கள். கம்பனையும் வான்மீகியையும் ஆறுமாத காலம் ஒப்புநோக்கி விமரிசனம் செய்ததாக அய்யர் அவர்கள் கூறுவார். அவருக்குப் பின் முறையான ஒப்புநோக்கு நூல் வெளிவந்ததாகத் தெரியவில்லை. அவ்வகையில் நண்பர் சீதாபதி இந்நூல் மூலம் இலக்கிய உலகுக்கு மாபெரும் சேவை செய்திருக்கிறார் என்றால் அதுமிகையாகாது. ஏனெனில் இன்றைய கம்பராமாயணப் பேச்சாளர்களுக்கு வான்மீகத்தைப் பற்றி அதிகம் தெரியாது. தெரிந்தவர் சிலர்; தெரியாதவர் பலர். கம்பனுக்கு கூறப் படும் பல சிறப்புக்கள் வான்மீகியைச் சேர்ந்தது, இதைப் பல கம்ப பக்தர்கள் அறிவதில்லை. வான்மீகியும் சாதாரண கவி அல்ல. அவரும் ஒரு மகாகவி "சில இடங்களில் கம்பன் வான்மீகியை வெல்ல முடியவில்லை. குறிப்பாக இயற்கை வர்ணனைகளில்,

சிறப்பாக ஆரண்ய வர்ணனைகளில் கம்பன் வான்மீகிக்கு ரொம்பவும் பின்தங்கியிருக்கிறான்'' என்று அறுதியிட்டுக் கூறுவார் பன்மொழி இலக்கிய மேதை வ. வே. சு. அய்யர் அவர்கள்.

திரு. சீதாபதியின் இந்நூல் இவ்விரு மகா கவிகளையும் விரிவாக ஆராய்ந்து முடிவு கூறுவதாக நான் சொல்லமாட்டேன். ஆனால் மூலநூலையும், வழிநூலையும் கற்று இன்பம் அடைய விழைபவர்களுக்கு இந்நூல் ஒரு வழிகாட்டி; இருளில் ஒளிதரும் நல்விளக்கு; கம்பன் சொல்லின் செல்வர்களுக்கு நற்றுணைவன்.

ஆசிரியர் இந்நூலை எழுத மிகுந்த சிரமம் எடுத்துக் கொண்டிருக்கிறார் என்பதை படிப்பவர்கள் உடனே அறிந்து கொள்ளுவார்கள். ஆசிரியருடைய முயற்சியை எவ்வளவு பாராட்டினாலும் தகும். இரண்டு பெரு நூல்களையும் அருகருகே வைத்து ஆய்ந்தால் அல்லது ஆசிரியர் எழுதிய முறையில் எழுத முடியாது. அமரர் கம்பனடிப் பொடியவர்களின் நல்லாசியைப் பெற்றபேறு இந்நூலுக்கு உண்டு.

இந்நூலை வெளியிட்ட கோவைக் கம்பன் கழகத்தினரை எவ்வளவு பாராட்டினாலும் தகும். ஆசிரியரின் சீரிய முயற்சிக்கு கம்பரசிக உலகம் பேராதரவு தரும் என்பதில் ஐயமில்லை.

'' ஸ்ரீராமமந்திரம் ''
கள்ளிப்பட்டி - *638 505*
11—2—1984

க. கு. கோதண்டராமன்

முன்னுரை

இந்நூலெழுதத் தோன்றிய காரணம் :

எனது ஞானத் தந்தையார், தம் 'சா. கணேசன்' என்ற பெயரினையே 'கம்பன் அடிப்பொடி' என்று மாற்றிக் கொண்டு விட்ட காரைக்குடி ஐயா அவர்கள் வித்திட ஆல்போல் விரிந்து பரந்து விழுதுகள் விட்டு ஆங்காங்கே கிளைகளாகிப் பெருகிக் கொண்டிருக்கின்ற கம்பன் கழக மேடைகளில், வான்மீகியினின்றும் கம்பன் பற்பல மாற்றங்களைச் செய்துள்ளான், நமது நாகரிகத்திற்கு, பழக்க வழக்கங்களுக்கு, பண்பாட்டிற்கு ஏற்ப, என்று சொல்லக் கேட்கின்றோம். அதற்கு எடுத்துக் காட்டுகளாக அனைவருமே கூறுவது, ''சீதையை இராவணன் குடிலோடு தூக்கிச் சென்றது; இராமனும் சீதையும் திருமணத்தின் முன்னம் கண்ணொடு கண்ணிணையால் நோக்கிக் கொண்டது' போன்ற ஒரு சில காட்சிகளே !

வான்மீகி–கம்பன் மாற்றங்கள் காட்டும் தொகுப்பு நூல் ஒன்றும் இதுவரை வெளிவந்ததாகத் தெரியவில்லை. திரு. வ. வே. சு. ஐயர், நாமக்கல் கவிஞர் ஆயவர்களின் கம்பராமாயணக் கட்டுரைகளில் ஆங்காங்கே ஒரு சில குறிப்பிடப் பட்டுள்ளன என்கின்றனர்; ஆனால், அந்நூல்களோ கிடைப்பதற் கரிதாக உள்ளன !

1980-ம் ஆண்டு மேத்திங்கள் பாண்டிச்சேரி கம்பன் விழாவில் பேருரை யாற்றும்பொழுது திரு, கம்பன் அடிப்பொடி அவர்கள், 'எனக்குத் தெரிந்த வரையில் வான்மீகியினின்றும் சுமார் எண்ணூறு மாற்றங்களைச் செய்துள்ளான், கம்பன்' எனக் குறிப்பிட்டார்கள். அஃது, ஏற்கனவே எனக்கு இருந்த ஆவலை—வான்மீகி, கம்பன் மாற்றங்களை வகையாய்க் காண வேண்டும் என்றிருந்த ஆவலை—மிகைப் படுத்தியது ! கம்பன் வழி கன்னித் தமிழுக்கு யானுற்ற வல்ல அருங்கடன் ஈதெனத் துணிந்தேன் !

அடிப்படை ஆதார நூல்கள்:

சென்னை 'லிப்கோ நிறுவனத்தார்' வெளியிட்டுள்ள ஸ்ரீ உ. வே. சி. ஆர். ஸ்ரீநிவாஸய்யங்கர் பி. ஏ., அவர்களின் மொழி பெயர்ப்பின் வான்மீகி ராமாயணமும், சென்னை கம்பன் கழகம் முதலில் வெளியிட்ட கம்பராமாயணப் பதிப்பும் என் ஆய்விற்கு அடிப்படை நூல்களாய் அமைந்தன.

நூல் முழுமை பெறக் கிடைத்த ஆசிகள்:

சுமார் பத்துத் தலைப்புக்களிலான மாற்றங்கள் முடிந்ததுமே திரு. கம்பன் அடிப்பொடி ஐயா அவர்கள், "பயனுள்ள பணி; தொடர்ந்து செய்யுங்கள்!' என்று ஊக்குவித்து ஆசி வழங்கினார்கள். பாலகாண்ட ஆய்வு முடிந்த பின், பெரும் பகுதியைப் படித்து விட்டு, கோபி-கள்ளிப்பட்டி திரு. க. கு. கோதண்டராம கவுண்டர் அவர்கள், 'சிறந்த பயனுள்ள பணி; தொடர்ந்து அனைத்துக் காண்டங்களுக்கும் எழுதுங்கள். மேடைப் பேச்சாளர்களுக்கெல்லாம் பேருதவி யளிக்க வல்லது; புத்தகமாகப் பின்னாளில் அச்சிட்டு விடலாம்' என்று ஊக்கமூட்டி உள்ளத்து ஆசியளித்தார்!

திரு. கம்பன் அடிப்பொடி ஐயா அவர்கள்:

காரைக்குடி கம்பன் கழக விழா நிகழ்ச்சிகள் பற்றிக் காரசாரமாக ஆய்வுரை விடுத்தாலும், அவற்றையும் போற்றி அதில் காணும் நுணுக்கங்களுக்காக என்னை வியந்து, எனது ஆய்வுக் கண்ணினை விரிவுபடுத்தினார் எனது ஞானத் தந்தையார் திரு. கம்பன் அடிப்பொடி ஐயா அவர்கள் . 1982-ஆம் ஆண்டு மேத்திங்களில் பாண்டிச்சேரியில் எனது கைப்பிரதியை வாங்கி, அதனை முழுமையாகப் பார்த்து தக்க திருத்தங்கள் பலவற்றையும் செய்துகொடுத்தார். இன்று அவர் நம்மிடையே இல்லை; அமரராகி விட்டார். அன்னாரின் பொன் அடி நினைந்து, தாழ்ந்து நன்றி நவில்கின்றேன்.

வாசகர்கள் :

இந்நூலைப் படித்துவிட்டு, இதில் காணும் குற்றங் குறைகளை எடுத்துக் காட்டிப் பிற காண்டங்களில் சிறியனேன் கைக் கொள்ள வேண்டிய மாற்றங்கள், முதலியன எழுதப் போகும் தமிழ் அறிஞர்களுக் கெல்லாம் என், முன் கூட்டிய நன்றி !

நூல் பதிப்பாளர்கள் :

என் எழுத்தையும் நூலாய் அச்சிலேற்றி என்னை ஊக்கு விக்கும் கோவை கம்பன் கழகத்திற்கும் குறிப்பாக அதன் தலைவர் பெருந்தகை திரு. ஜி. கே. சுந்தரம் அவர்களுக்கும் நன்றிகள் பல !

அச்சகத்தாரும் நண்பர்களும் :

இந்நூல் வெளிவருங்கால், தங்களது பல்வேறு பணிகளுக் கிடையேயும் உடனிருந்து, அச்சுத் தாள்களை ஒப்பு நோக்கி, திருத்தி, ஆலோசனைகள் சொல்லி ஒத்துழைத்த கோவை கம்பன் கழகத்தின் இரட்டையர்களான திரு நா. நஞ்சுண்டன். திரு. க. மீ. வெங்கடேசன் ஆகியோருக்கும் பொருளாளர் திரு. என். சின்னசாமி நாயுடு அவர்களுக்கும் என் நன்றி. ‘‘கம்பன் மலரை’’ சிறந்த முறையில் அச்சிட்டுக் கொணரும் கஸ்தூரி அச்சகத்தார், இந்நூலைச் சிறந்த முறையில் அச்சிட்டுக் கொடுத்து உதவியதற்கு என் நன்றியும் பாராட்டும். மேலும் இந்நூல் வெளிவரப் பல வகைகளிலும் என்னை ஊக்குவித்தும், துணைபுரிந்தும் நின்ற நண்பர்கள் அனைவருக்கும் எனது இதயங் கனிந்த நன்றி.

இறுதியாக, இறுதியேயற்ற இறைவன் எனக்கு இறுதியைக் கூட்டு விக்காது வாழவைத்து என் எழுத்தை வளர்ப் பதற்காக எல்லாம் வல்ல அவனுக்கு பக்திப் பரவசங்கலந்த நன்றி !

சேலம் 636 005
11-2-1984.

அன்புத் தொண்டன்,
பி. சி. சீதாபதி.

என்னை ஊக்குவித்து, பாராட்டி வளர்த்த

என் ஞானத்தந்தை அமரர்

கம்பன் அடிப்பொடி அவர்களுக்கு

இந்நூலை சமர்ப்பணம் செய்கிறேன்.

உ ள் ள ட க் க ம்

குறிப்பு : கம்பன் பாடல்களுக்கு எதிரில் குறிப்பிடப் பெற்றுள்ள எண்கள் சென்னே கம்பன் கழக இராமாயணப்பதிப்பின் பக்கமும், பாடல் எண்ணும் ஆகும்.

1. ஆதி சரிதம்

வான்மீகி

ஸர்க்கம் 1: [இந்த ஸர்க்கத்தின் துவக்கத்தில் நாரதர் வான்மீகி மஹரிஷியினிடம் வந்ததுவும், அவர், நாரதரிடம் தமக்கு வெகு காலமாய் இருந்துவந்த ஒரு ஸந்தேகத்தைக் கேட்டதும் (''இப்பொழுது இந்த லோகத்திலுள்ளவர்களுக்குள் ஸகல கல்யாண குணங்களும் பொருந்தினவர் யார்?......யுத்த ஸமயத்தில் யாருக்குக் கோபமுண்டானல் தேவாஸுரர்களும் நடுங்குகிறார்கள்?) குறிக்கப்பட்டுள்ளன. மீதிப் பகுதி முழுவதிலும் நாரதர் ராமாயணச் சரிதத்தை, சுருக்கமாக ஆனல் விளக்கமாகக் கூறியது இடம் பெற்றுள்ளது].

கம்பன்

தேவ பாடையின் இக்கதை செய்தவர்.........
.........பண்பு அரோ. பாயிரம்: 4/10

மாற்றம்

ராமனின் சரிதத்தை நாரதர் சொல்லக் கேட்டுக் கொண்டார், வான்மீகி.

கம்பனே, வான்மீகியின் கதைவழி இராமாயணத்தைத் தெரிந்து கொண்டான்.

ஆசிரியர் கருத்து

இராமனுக்குச் சமகாலத்தவராய் வான்மீகி வாழ்ந்திருந்ததாய்க் குறிப்பிடப்பட்டிருப்பதாலும், அந்த யுகத்தில் நாரதர் போன்ற தேவர்கள் மகரிஷிகளிடத்தில் வந்து சென்ற வாய்ப்புக்கள் இருந்ததாலும் வான்மீகிக்கு இராமனின் நேரிடைச் சரிதம் கிடைத்தது. கம்பனே இந்த யுகத்தவன்; எனவே, வடமொழிக் கதையைத் தான் சொல்வதாக எடுத்துக் காட்டும் மாற்றம் ஏற்புடைத்ததாகின்றது!

2. காவியத் தோற்றம்

வான்மீகி

ஸர்க்கம் 2: [இந்த ஸர்க்கம் முழுவதும் வான்மீகி மஹரிஷி ஸ்நானம் செய்யச் சென்ற தமஸா நதிக் கரையில் வேடன் ஒருவன், கூடிக் களித்திருந்த கிரௌஞ்ச பக்ஷிகளில் ஆண் பக்ஷியை அடித்து வீழ்த்த, பெண் பக்ஷி கதறும் பரிதாபத்தைக் கண்டு மஹரிஷி வேடனுக்குச் சாபமிட அந்தச் சாபமிட்ட வார்த்தைகளே செம்மையான ஸ்லோகமாய் ஒலித்தது என்றாலும் தம் வாயால் சாபமிட நேர்ந்த நிலைக்காக நினைந்து நினைந்து அவர் வருந்தியிருப்ப, பிரம்மா அவர்பால் வந்து, தானே சரஸ்வதியை அவர் நாவில் அமரச் செய்து அந்த ஸ்லோகத்தைச் சொல்வித்ததாகவும் அந்த ஸ்லோகமே ராமாயணக் காவியம் முழுமையும் பாடுதற்கான முன்னோடியாய் அமைந்துள்ளதென்றும் கூறியதையெல்லாம் வர்ணிக்கின்றது].

கம்பன்

பாடல் ஒன்றும் இல்லை.

மாற்றம்

(1) வடமொழியில் காவிய கர்த்தாவான வான்மீகியின் வாழ்க்கை நிகழ்ச்சிகளில் ஒன்று அமைந்துள்ளது.

கம்பன், அந்த ஆதிகவியின் வாழ்க்கை நிகழ்ச்சியை எடுத்துக் காட்டவில்லை.

ஆசிரியர் கருத்து

தான் பாடப்போவது இராமன் சரிதம் பற்றி ஒரு மூல காவியமேயன்றி வான்மீகக் காவிய மொழி பெயர்ப்பு அல்ல என்று உறுதிப் படுத்துவது போலே இஃது அமைந்துள்ளது!

வான்மீகி

ஸர்க்கம் 3: [இந்த ஸர்க்கத்தில் நாரதர் கூறிய வரலாற்றை விரிவாகத் தம் ஞான திருஷ்டியால் வான்மீகி மகரிஷி முழுமை யாய்க் கண்டதையும், காவியப் பகுதிகளான ஒவ்வொரு காண்டத் தின் சுருக்கத்தையும் காட்டப் பெற்றுள்ளன.]

கம்பன்

பாயிரம்: 4/10 (முதல் கட்டுரையில் காண்க)

மாற்றம்

(2) இராம சரிதம் முழுமையும் வான்மீகிக்கு ஞானப்பார்வையால் காண இயன்றது; கம்பனே, வான்மீகியின் வாக்கால் அமைந் ததையே பின்பற்றினுன்.

ஆசிரியர் கருத்து

மகரிஷிக்கும் கவிச் சக்கரவர்த்திக்கும் உள்ள வேறுபாட்டால் தோன்றியது, இம் மாற்றம்!

வான்மீகி

ஸர்க்கம் 4: [இந்த ஸர்க்கத்தில் வான்மீகி, தாம் பாடிய இராம சரிதையைக் குசலவர்கள் வாயிலாக நாடெல்லாம் பாடச்செய்தார்; இறுதியில் அவர்களை இராமனே அழைப்பித்து அந்தக் கதைப் பாடல்களைச் சுவைத்தார் என்றதனைப் படம் பிடிக்கின்றது.]

கம்பன்

பாடல் ஒன்றும் இல்லை

மாற்றம்

(3) மூல நூலிற்காணும் செய்தி கம்பனில் இடம் பெறவில்லை.

ஆசிரியர் கருத்து

கம்பன், வான்மீகியால் பாடப்பெற்ற கடைசிக் காண்ட மாகிய 'உத்தர காண்டத்தைப்' பாடாததால் வந்தது ஈது!

3. நதி. நாடு நகரம்.

வான்மீகி

ஸர்க்கம் 5: சரயூ நதியின் இரு கரையிலும் கோஸலமென்று ஒரு தேசம் உண்டு. அது வெகு விஸ்தாரமுள்ளது. அளவற்ற தன தான்யங்கள் உள்ளன. அதில் எண்ணிறந்த ஜனங்கள் எப்பொழுதும் கவலையற்று ஆனந்தமாகக் காலம் கழிக்கிறார்கள்.

கம்பன்

ஆசலம் புரி ஐம்பொறி வாளியும்
.........அணிகூறுவாம். ஆற்றுப்: 4/1

வாங்க அரும் பாதம் நான்கும் வகுத்த வான்மீகி என்பான்
.........யான் மொழிய லுற்றேன். நாட்டுப்: 8/1

மாற்றம்

(1) சரயூ நதியின் இரு கரைகளிலும் கோசல நாடு அமைந்திருந்தது என்று மட்டும் வான்மீகி குறிப்பிடுகின்றாரேயன்றி சரயூ நதிதீரத்தின் வர்ணனையொன்றும் பாடவில்லை. கோசல நாட்டின் பெரும்பரப்பு, தனதான்யம், மக்கட்பெருக்கம் ஆகியவற்றை ஒரே வாசகத்தில் பொதுவாகக் கூறியுள்ளார், வான்மீகி.

கம்பனோ, சரயூ நதிப் போக்கில் மழைவளம் பெய்து, வெள்ளப் பெருக்கின் வேகம் கூட்டி, அந்நதியின் தன்மையையும் போக்கையும் படம் பிடித்து ஆற்றுப்படலம் என்ற தலைப்பில் இருபது பாடல்களில் வர்ணிக்கின்றான். கோசலநாட்டு வளம் வழுத்தி, அந்நாட்டு மருதநில மாட்சியை மடுத்து, மாந்தர்தம் பொழுது போக்கினைப் புகன்று, கடல் வாணிகச் செழிப்பு செப்பி, உழவரின் உயரிய வாழ்க்கையை உரைத்து, செல்வப் பொலிவைப் புகழ்ந்து, நால் நில வளம் நாட்டி, மங்கையர் மாண்பு தெரிவித்து, அறச்சாலை காட்டி, நல்லன கொள்ளலும் அல்லன தள்ளலுமாகிய பண்பினைப் பகர்ந்து, பல்வகைப் புகைகள் பரப்பி, நங்கையர் அழகும் இயற்கை எழிலும் எடுத்துக் காட்டி, கலை வளர்ச்சியும் காட்சிப் பொருள்களும் மிகுத்து, வறுமை இன்மையும் வளப் பெருக்கமும் வளர்த்து, விழாவும் வேள்வியும் சுட்டி, ஆடவர் மகளிர் ஒழுக்கத்தால் அறம் நிலைபெறுதலை நிலை நிறுத்தி அறுபத்தொரு பாடல்களால் கோசல நாட்டை வர்ணித்துள்ளான்.

ஆசிரியர் கருத்து

இலக்கணம் தோன்றும் வகையில் வான்மீகி, தெய்வீக உணர்வால் — சக்தியால் – பாடினுர்; கம்பனே, தன் இலக்கியம் வேறுபல புதிய இலக்கணங்களைத் தோற்றுவிக்கும் வகையில் பாடியுள்ளான். எனவே ஆற்றுப்படலத்தைக் கம்பன் புதியதாய்ப் புகுத்தியுள்ளான்.

வான்மீகி

ஸர்க்கம் 5: அதில் அயோத்யை என்று ஒரு நகரமுண்டு......... .. இப்படி அழகு வாய்ந்து நிகரற்ற காந்தியுடன் அயோத்யை என்ற உத்தம நகரம் பூமியில் பிரஸித்தி பெற்றது.

கம்பன்

நகரப் படலம்: 17/1—30/75 = 75 பாடல்கள்.

மாற்றம்

(2) வான்மீகி அயோத்தியின் பெருமைகளைப்பற்றி ஓரளவிற்கு வர்ணித்துள்ளார்.

கம்பனே மிக விரிவான வர்ணனை தந்து வியந்துள்ளான்.

ஆசிரியர் கருத்து

வான்மீகி, நாட்டின் தலைநகர் போன்றவற்றின் அழகினில் ஆடம்பரத்தில் ஈடுபடாத முனிவர் என்பதால் வர்ணனை குறைந்திட கம்பனே, உலகியல் அறிந்த புலவனுனதால், வர்ணனைகள் மிகுதியாக இடம் பெற்றுள்ளன!

4. மன்னர்மன்னனும் மந்திரிகளும்

வான்மீகி

ஸ்ர்க்கம் 6 & 7: [ஸர்க்கம் ஆறில் பகவான் அவதரிக்கத் தகுதி வாய்ந்த புருஷனும், (தசரதன்) ஸர்க்கம் ஏழில், அவனுடைய ஆற்றல்மிக்க மந்திரிகளும், விளக்கப்படுகின்ருர்கள்.]

கம்பன்

அரசியற் படலம்: 30/1—30/12 = 12 பாடல்கள்.

[இப் பன்னிரண்டு பாடல்களால் கம்பன், தயரதனின் தனிப்பெருமை காட்டி, உலகமுழுதுடையான் என்பதை உணர்த்தி அவனின் குடைச்சிறப்பினே உயர்த்தி, தயரதன் அரசு செய்திறம் தேர்ந்து பாடியுள்ளான்.]

மாற்றம்

மந்திரிகளேப் பற்றி கம்பன் இங்கே ஒன்றும் பகரவில்லே.

ஆசிரியர் கருத்து

செயலில் ஈடுபடுத்தி மந்திரிகளின் சிறப்பினே உயர்த்திக் காட்டலே சீரியது என்று கருதி, இங்கே ஒன்றும் அவர்களேப் பற்றிப் பாடாது, அயோத்தியாகாண்டம் மந்திரப்படலத்தே அவர்களே, வான்மீகியினும் அதிகமாகவேப் புகழ்ந்து பாடியுள்ளான்!

5. பிள்ளைப் பேறு

வான்மீகி

ஸர்க்கம் 8 : (பிள்ளைப்பேறு உண்டாதற்கு) இதற்கு இடையூருக இருக்கும் பாபங்களைப் போக்கக்கூடிய உபாயம் அசுவமேதமே என்று (தசரதன்) மந்திரிகளிடத்தில் சொல்ல அவர்களும் அதை அங்கீகரித்தார்கள். பிறகு, அரசன், 'சுமந்திரரே! என் புரோஹிதரையும் ஆசார்யர்களையும் சீக்கிரமாக அழைத்து வாரும்' என்ருர். அவர் அதிவேகமாகச் சென்று புரோஹிதரான வஸிஷ்டரையும் வேத வேதாங்கங்களில் கரைகண்ட ஸீயக்ஞர், வாமதேவர், ஜாபாலி, காச்யபர் முதலியவர்களையும் மற்ற பிராம்மணுேத்தமர்களையும் அழைத்து வந்தார். தர்மவாஞன தசரதர் அவர்களை விதிப்படி பூஜித்து, 'பிராம்மண சிரேஷ்டர்களே! என் வம்சத்தை விருத்தி செய்வதற்குப் புத்திரன் இல்லாமல் புலம்பும் எனக்கு இந்த ராஜ்யமும் தனமும் அதிகாரமும் இருந்து என்ன சுகம்? புத்திரோத்பத்தியைத் தடுக்கும் பாபங்களைப்போக்க அசுவமேதமே தகுந்த உபாயமென்று எண்ணுகிறேன். என் இஷ்டத்தை எவ்விதம் பூர்த்திசெய்து கொள்ளலாமென்று விசாரியுங்கள்' என்ருர்.

இப்படித் தர்மத்தையும் அர்த்தத்தையும் ஒத்து மதுரமாக அரசன் சொன்ன வார்த்தைகளை அந்த உத்தமப் பிராம்மணர்கள் மிகவும் கொண்டாடி, ''மஹாராஜ! தர்ம காரியத்தில் தங்களுக்குச் சிரத்தை உண்டானபடியால் இந்த அசுவமேதத்தால் நிச்சயமாகப் புத்திரர்களை அடைவீர்கள். யாகஸாமக்ரியைகளைச் சேர்த்து அசுவமேதக் குதிரையைப் பூமிப்பிரதக்ஷிணம் செய்ய அனுப்பலாம்'' என்ருர்கள்.

தசரதன் அளவற்ற ஸந்தோஷத்தால் மலர்ந்த கண்களுடன் ''மந்திரிகளே! வஸிஷ்ட மகரிஷியின் உத்தரவுப்படி யாகஸாமக்ரியைகளை ஸம்பாதிக்க வேண்டும்'' என்ருர்.

கம்பன்

ஆயவன், ஒரு பகல், அயனையே நிகர்.........
.........பிறவும், வேறும், நீ; திரு அவதார: 32/1

எம் குலத் தலைவர்கள், இரவி தன்னினும்.........
.........இனிதின் ஓம்பினேன். திரு அவதார : 32/2

அறுபதினாயிரம் ஆண்டும் மாண்டு உற,.........
.........உண்டு அரோ. திரு அவதார : 32/3

அருந்தவ முனிவரும், அந்தணாளரும்,.........
.........என் அகத்தை'' என்றனன்.
திரு அவதார : 32/4

ஈது, முன்நிகழ்ந்த வண்ணம் எனமுனி,.........
.........சிந்தைநோய் தீரும்' என்றான்.
திரு அவதார : 36/29

மாற்றம்

1. பிள்ளைப்பேறு இன்மையால் தன் வம்சத்தை விருத்தி செய்ய இயலவில்லையே என்பதற்கு வான்மீகியின் தசரதன் முக்கியத்துவம் கொடுக்கிறான்.

கம்பனின் தயரதனோ, இரவி தன்னினும் சிறப்புற்ற தன் குல முன்னோர்களின் வழியில் நின்று வரம்பு இல்லாத வையகத்தை தான் வசிட்டனின் அருளினால் காத்ததைப் போன்றே காத்து, குறைவின்றி வாழ்ந்த அருந்தவ முனிவர்களும் அந்தணர்களும் தன் பின் துயர்உறுதவகைத்தாய் புரப்போன் இல்லாமற் போவாரே எனப் பிறர்க்குக் குறைவிலா வாழ்வு தொடர்வதற்கு முக்கியத்துவம் கொடுக்கின்றான்.

ஆசிரியர் கருத்து

தன்னல அடிப்படையைக் காட்டிலும் பொதுநல அடிப்படையில் எழுந்தது தயரதனுக்குப் பிள்ளைப்பேற்றின் ஆவல் என்பதே சாலச்சிறந்தது எனக் கருதி, கம்பன் இம்மாற்றத்தை ஏற்றுள்ளான்.

மாற்றம்

2. அசுவமேதம் செய்தல் வேண்டும் எனத் தானே முடிவு எடுத்துப் பின் மந்திரிகளின் ஒப்புதல் பெறுகின்றான்; வசிஷ்டரைப்

புரோகிதராகக் கொள்கின்ருன், வர்ன்மீகியின் தசரதன், வசிஷ்டருக்கு அங்கு, பேசும் வாய்ப்பே இல்லே.

கம்பனின் தயரதனுக்கோ வசிஷ்டர்தான் இந்த அசுவமேத யாக உபாயத்தையே அறிவிக்கின்ருர்.

ஆசிரியர் கருத்து

மன்னன் தயரதனுக்கே இந்த அசுவமேதயாக உபாயம் தெரியும் என்ருல் பன்னெடுங் காலமாய் (அறுபதினுயிரம் ஆண்டுகளாய்) அவன் புத்திரன் இல்லாமல் ஏன் புலம்பிக்கொண்டு இருக்கவேண்டும்? முன்னமேயே அந்த உபாயத்தைக் கையாள முற்பட்டிருக்கக்கூடாதோ? எனவேதான், முக்காலமும் உணர வல்ல முனிபுங்கவர் வாயிலாக மன்னன் உபதேசம் பெறும் வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளான் கம்பன்! இத்துணேஆண்டுகளாக மனத்திலேயே தான் கொண்டிருந்த பரோபகார அடிப்படையின் குறையைப் பக்குவமாய்த் தயரதன் பல தலேமுறைகளாய்த் தன் குலத்தின் குருவாய்த் திகழும் வசிட்டரிடம் இப்போதுதான் எடுத்துரைக்க, அவர் இவ்வுபாயத்தைத் தம் ஞானப்பார்வையின் காரணத்தால் உபதேசித்தார்! இம்முறையே சீரிதன்ருே!

மாற்றம்

3. 'தர்ம காரியத்தில் தங்களுக்குச் சிரத்தை உண்டான படியால் இந்த அசுவமேதத்தால் நிச்சயமாகப் புத்திரர்களேப் பெறுவீர்கள்' என்று பிராம்மணுேத்தமர்கள் சொன்ஞர்கள், வான்மீகியின்படி.

இந்தக் கருத்திற்குக் கம்பன் இடம் கொடுக்கவில்லே.

ஆசிரியர் கருத்து

பிராம்மணுேத்தமர்கள் குறிப்பிட்டது சரியென்ருல், இதுகாறும் தயரதனுக்குத் தர்ம காரியத்தில் சிரத்தை உண்டாக வில்லேயா? இல்லே, தர்மகாரியங்களேக் கடனுக்குச் செய்யும் — சிரத்தை இன்றி செய்யும் — போக்கில் இருந்தாஞ?

இந்த ஐயத்திற்கு இடம் கொடுக்கக்கூடாது என்று கருதியே 'அறுபதினுயிரம் ஆண்டும் மாண்டுற (சிறப்புற — சிறப்பு மிளிர்வது சிரத்தையோடு காரியங்களைச் செய்யும் பொழுதுதான்)' என்றும், அருந்தவ முனிவரும், அந்தணாளரும், வருந்துதல் இன்றியே வாழ்வின் வைகினர் (சிரத்தையோடு அவன் காத்ததால் தான் 'அனைவரும் வருந்துதல் இன்றியே' என ஏகாரத்தால் தெளிவு காட்டியுள்ளார் !) என்றும் கம்பன் பாடிவைத்தான் !

ஆக, ஒரு சக்கரவர்த்திக்கு, நியாயமாக உண்டாக வேண்டிய அறவோர், அந்தணர், மக்கள் முதலியவர் நலம்பேணும் குறிக்கோளிற்கும், ஞானவழிகாண ஞாலங்காக்கும் மன்னனைவிட முனிவரற்கேயும் முக்கியத்துவம் காட்டவும், தன் மனக்குறையை எடுத்துக்கூறும் போழ்தில் தவறியும் அவன்பால் பண்புக்குறை காண முற்படலாகாது என்பதற்காகவும் இம் மாற்றங்களைக் கையாண்டுள்ளான் கவிச் சக்கரவர்த்தி கம்பன் எனக் காண்கின்றோம் !

6. ரிஷ்யசிருங்கர் வரவு

வான்மீகி

ஸர்க்கம் 9: தசரதருக்கு ஸாரதியும் மந்திரியுமான ஸுமந்திரர் ஒரு நாள் அவரிடத்தில் ரஹஸ்யமாக வந்து, ''மஹாராஜ! பிராம்மண சிரேஷ்டர் தங்களிடத்தில் இப்பொழுது சொன்ன விஷயங்களை மூன்றுகாலங்களை அறிந்த ஸனத்குமாரர் சொல்லக் கேட்டிருக்கிறேன்.

(இவ்வாறு தொடங்கி, ரிஷ்யசிருங்கர் வர, ரோமபதன் நாட்டில் மழை பெய்த வரலாற்றை ஸுமந்திரன் தசரதனுக்குக் கூறுகின்றான். அந்த வரலாற்றில் பின்வருமாறும் கூறுகின்றான்.)

''அந்த ரிஷியே (ரிஷ்யசிருங்கர்) தசரதனுக்குப் புத்திரன் உண்டாகும் உபாயத்தைச் சொல்வார் என்று ஸனத்குமாரர் சொன்னார்; அதைத் தாங்களுக்கு நான் தெரிவித்தேன்'' என்றான். மேலும் சொல்கின்றான் :-

ஸர்க்கம் 10: ''புரோஹிதர்களும் மந்திரிகளும் அரசனை வணங்கி (ரோமபத மஹாராஜனை) நாங்கள் சொல்லுகிறபடி செய்தால் காரியம் நிச்சயமாய்க் கைகூடும். அந்த (ரிஷ்யசிருங்கர்) முனி காட்டிலேயே பிறந்து வளர்ந்தவர். நித்ய கர்மங்களிலும், வேதாத்யயனத்திலும பிதாவுக்குப் பணிவிடை செய்வதிலும் ஆசை வைத்தவர். ஸ்திரீகளின் ஸ்வரூபத்தையும் லக்ஷணங்களையும் இந்திரிய ஸுகங்களையும் கொஞ்சமும் அறியாதவர். ருசியுள்ள பக்ஷணங்களாலும், வாசனைத் திரவியங்களாலும், மதுரமான பாட்டாலும், அழகுள்ள ஸ்த்ரீகளாலும் பிராணிகளின் மனத்தைக் கவரக்கூடிய இந்திரிய ஸுகங்களாலும் மிருதுவான தேக ஸ்பரிசத்தாலும் அப்படிப்பட்டவரை மயக்கி, இங்கே அழைத்து வருகிறோம். இப்படிச் செய்ய நிச்சயித்து அழகுள்ள வேசிகளுக்கு வேண்டிய வஸ்திரங்களையும், ஆபரணங்களையும், தனத்தையும் வெகுமானமாய்க் கொடுத்தனுப்புங்கள். அவர்கள் எப்படியாவது அந்த ரிஷியை அழைத்து வருவார்கள்'' என்றார்கள்.

அரசன் (ரோமபதன்) 'அவர்களுக்குத் தகுந்தபடி நீங்களே எச்சரிக்கை செய்து அனுப்புங்கள்' என்றார். அந்தப் பிராம்மணர்கள்

வேசியருடன் நேரில் பேசமாட்டோம் என்று சொல்லிவிட, மன்னன் மந்திரிகளுக்கு உத்தரவிட, அவர்கள் அவ்விலைமாதரைத் தருவித்து வேண்டியவரையில் வெகுமதி செய்து அனுப்பினார்கள்.

(விலைமாதர்களின் செயல்களையும் அவர்கள் ரிஷ்ய சிருங்கரைச் சந்தித்தது பற்றியும் கூறி வரும்பொழுது ஸுமந்திரன் வாயிலாகக் கீழ்க்கண்டவாறு புலப்படுகின்றது.)

ஒரு நாள் தெய்வச் செயலாய் அந்தப் பெண்கள் இருக்குமிடத்திற்கு வந்தார் (ரிஷ்யசிருங்கர்). தான் அதுவரையில் பார்க்காத ரூபமுள்ள அந்தப்பெண்களை நோக்கி ரிஷ்யசிருங்கர் 'நான் விபண்டகருடைய புத்திரன். என் பெயர் ரிஷ்யசிருங்கர். அழகான கண்களையுடையவர்களே! எனக்கு தவம், ஜபம், ஹோமம், வேதாத்யயனம் முதலியவைகளில் கொஞ்சம் பயிற்சி உண்டு. எங்கள் ஆசிரமம் ஸமீபத்தில் இருக்கிறது. அங்கே வந்தால் விதிப்படி உங்களுக்குப் பூஜை செய்கிறேன்' என்றார்.

கம்பன்

மாசுஅறு சுரர்களோடு மற்றுளோர் தமையும் ஈன்ற
.........திருவருள் புனைந்த மைந்தன்
திருஅவதார: 36/31

வருகலை பிறவும், நீதி மனுநெறி வரம்பும், வாய்மை
.........உயர்தவன் வருதல்வேண்டும்.
திரு அவதார: 36/32

பாந்தலின் மகுடகோடி பரித்தபார்.........
.........தனையர்கள் உளர்ஆம் என்றான்.
திரு அவதார: 36/33

'ஓத நெடுங்கடல் ஆடை உலகினில்வாழ்
.........வணக்கம் செய்தார்.
திரு அவதார: 37/37

அருந்தவன் தந்தையை அற்றம் நோக்கியே,
.........இனைய செய்தார். திரு அவதார: 38/40

அருக்கியம் முதலினோடு ஆசனம் கொடுத்து,
.. ..புரையுள் புக்கனர். திரு அவதார; 38/41

திருந்து இழையவர், சிலதினங்கள் தீர்ந்துழி,
.........என அருந்தினன் அரோ!

திரு அவதார: 38/42

இன்னன் பல்பகல் இறந்தபின், திரு
........அவரோடு ஏகினன்!

திரு அவதார: 38/43

மாற்றம்

1. வான்மீகத்தில், ரிஷ்யசிருங்கர் வரவால் உரோமபதன் நாட்டில் மழைபெய்த வரலாற்றைத் தசரதனிடம் அவனுடைய தேரோட்டியும் மந்திரியுமான சுமந்திரன் கூறுகின்றான்; அதுவும், சனத்குமாரர் சொல்லக் கேட்டதாய்க் கூறுகின்றான்.

கம்பனிலோ, முக்காலமும் உணர வல்ல முனிபுங்கவரான வசிட்டரே தயரதனிடம் அவ் வரலாற்றைக் கூறுகின்றார்.

ஆசிரியர் கருத்து

சுமந்திரன், வசிட்டர் இருவரையும் ஒப்புநோக்கின் முன்னம் ஒருவர் கதையாகச் சொல்லக் கேட்டதைச் சந்தர்ப்பத்தில் நினைவுபடுத்திக் கூறுவதினும், தாமே ஞானக்கண்ணால் உணர்ந்து உரைப்பதே சிறப்புடைத்தாம் அன்றோ!

மேலும், தசரதனுக்குப் புத்திரர் தோன்றும் உபாயத்தை அந்த ரிஷ்யசிருங்கரே சொல்வார் என்று சனத்குமாரர் சொல்வதாகச் சுமந்திரன் - உலகியல் உணர்வோடுவரும் பொருள் உரைக்க வல்ல ஒரு மந்திரி—வாயிலாகச் சொல்வதினும், ஞான உணர்வோடு முனிபுங்கவர் வாயிலாக நேரடியாகவே சொல்வித்தல் சிறந்தது. அஃதன்றி, முனிவரானதால் வசிட்டர் தேவ ரகசியங்களை விளக்கிக் கூறாமல், வினையின் பயனை ஓர்ந்து வழிவகையாக மட்டும் தசரதனிடம் 'கலைக்கோட்டு முனிவரால் வேள்வி முழுமை பெற்றால், பிள்ளைகள் உண்டாவர்'' என்று கூறுகின்றார்!

ஆகவே 'சொல்வார், சொல் பொருள், சொற்பயன்' ஆயகண்ணோட்டங்களில் மதியூக மந்திரியினும், ஞானவிழி முனிவரே ஏற்றவர் என்ற பாங்கால் ரிஷ்யசிருங்கர் வரலாற்றை வசிட்டர் வாயிலாகச் சொல்வித்துள்ளான் கம்பன்!

மாற்றம்

2. ரோமபதன் பிராம்மணர்களிடம், ''வேசியர்களுக்குத் தகுந்தபடி நீங்களே எச்சரிக்கைசெய்து அனுப்புங்கள்'' என்றார். அந்தப் பிராம்மணர்கள் வேசியருடன் நேரில் பேசமாட்டோமென்று சொல்லிட, மன்னன் மந்திரிகளுக்கு உத்திரவிட, அவர்கள் அவ் விலைமாதரைத் தருவித்து வேண்டியவரையில் வெகுமதி செய்து அனுப்பினர். இது வான்மீகம்.

இப் பணிக்கு வேசியர் தாமே முன்வந்ததாகக் கம்பன் காட்டுகின்றான்!

ஆசிரியர் கருத்து

ரிஷ்யசிருங்கரை அழைத்துவர வேசியரை அனுப்பும் உபாயத்தைச் சொல்லும் பிராம்மணர்கள், நாங்கள் அவர்களுடன் பேசுதல் பாபம் என்ற மனோநிலையில் பேசுகின்றனர். அப்படிப் பட்டவர்கள் – அவ்வளவு ஒழுக்கம் பார்ப்பவர்கள் - வாயிலாக தவறியும் தீயஎண்ணங்களை, தீயவழிவகைகளை மட்டும் சொல்விக் கலாமோ! ஆம். வேசியரை அனுப்பி ஒழுக்க சீலரான ரிஷ்ய சிருங்கரின் பிரம்மச்சர்யத்திற்கு இழுக்கு உண்டாகச் செய்யும் வண்ணம் உபதேசித்தது தீயதே ஆமன்றோ! எனவே, பிராம்மணர் களையும் புரோஹிதர்களையும் இந்த இக்கட்டில் மாட்டிவிடாமல், வேசியர் இப்பணிக்குத் தாமே முன்வந்ததாகக் கம்பன் காட்டு கின்றான்.

ஆனல், மன்னர் முன் வேசியர் எப்படித் தோன்றினர் திடீரென என்று நினைக்கத்தான் தோன்றும்! மழையின்மையால் பட்டதுயர் பொதுமக்கள் அனைவர்க்கும் பொருந்தியதால் ரோமபத மன்னன் பொதுஜன சபைகூட்டியே ஆலோசனைகள் நடத்தினன்; அச்சபையில் வேசியரும் அங்கு அமர்ந்திருந்தனர்; அவர்களுள் சிலர் தாமே முந்துற வந்தனர் என்பதைக் காட்டும் குறிப்பாகவே, 'மாதர் எழுந்து' என்னும் சொற்றொடரைப் பெய்துள்ளான் என்று உணரும் போழ்து, ஐயம் தொய்வுற்றுப் போகின்றது!

மாற்றம்

3. தெய்வாதீனமாக ரிஷ்யசிருங்கர் அப்பெண்டிர் (வேசியர்) இருக்கும் இடம் வந்தார் என்பது வான்மீகியின் கூற்று.

ரிஷ்யசிருங்கரின் தந்தையார் காசிபன், மகனைத் தனித்து விட்டுச் செல்லும் காலம் காத்திருந்து, காலம் அறிந்து ரிஷ்ய சிருங்கரின் பன்னசாலைக்கு, முனிவர் வேடம்பூண்ட அப்பெண்டிர் வந்து போந்தனர் எனக் காட்டுகின்றான், கம்பன்.

ஆசிரியர் கருத்து

ரிஷ்யசிருங்கரை எப்படியும் மயக்கித் தம் நாட்டிற்கு அழைத்து வரும் குறிக்கோளோடு சென்ற பெண்டிர், அவரைக் காணவும் சாகசங்களைக் காட்டவும் முயலாமலேயா இருப்பர்! தெய்வாதீனமாக ரிஷ்யசிருங்கர் அப்பெண்டிர் இருக்குமிடம் வந்தார் என வான்மீகி குறிப்பிடுகின்றாரே! அவ்வாறு அவர் சொல்லவில்லையென்றால் அப்பெண்டிர் வீணே திரும்பியிருப்பரோ?

இடன் அறிந்து, கலைக்கோட்டு முனிவர் இருக்கும் இடத்திற்கு ஒரு யோசனை தூரத்திலே, வந்த பெண்டிர் பன்னசாலை அமைத்தனர். ரிஷ்யசிருங்கரின் தந்தையார் தன் மகனைத் தனித்து விட்டுச்சென்ற நேரம் தெரிந்து அவரின் பன்னசாலைக்குப் போயினர். 'அழிவதூஉம் ஆவதூஉம் ஆகி வழிபயக்கும் ஊதியமும் சூழ்ந்து செயல்' என்னும் திருக்குறட் கோட்பாட்டின் வகையில் நின்று, தாம் இருக்கும் இடம் எய்திட வேண்டுமென அம் முனிவரை வேண்டினர். இதுவே, கம்பன் காட்டும் காட்சி.

எண்ணித் துணிந்து சென்ற பெண்டிர், செய்வானைநாடி, வினைநாடிக் காலத்தோடு எய்த உணர்ந்து செய்வர் என்பதைக் காட்டி, எண்ணிய எண்ணியாங்கு எய்துவர் அவர்கள் திண்ணியராய் நின்றமையால் என்பதையும் தெளிவித்து நிற்கும் மாற்றம் பெற்றகாட்சி, தெய்வாதீனத்திற்குக் காத்திருக்கும் நிலை காட்டி, வேசியரின் பண்பினிற்கு ஒவ்வாத நிலைமையைக் காட்டும் காட்சியைவிடச் சீரிதன்றோ!

7. உரோமபதனும் தயரதனும்

வான்மீகி

ஸர்க்கம் 11: ரோமபதர் தன் பிரியமித்திரன் (தசரதன் வந்ததால் எல்லையற்ற மகிழ்ச்சியடைந்து, அவரை மிகவும் மரியாதையாக உபசரித்து, அவர், தனக்கும் தசரதருக்கும் உள்ள ஸ்நேகத்தையும் பூர்வீக ஸம்பந்தத்தையும் அம் முனிவருக்குத் (ரிஷ்யசிருங்கருக்கு) தெரிவித்தார். அதையறிந்த மகரிஷி, தன் மாமனாரை விசேஷமாக உபசரித்தார்.

இப்படி ஆதரவுடன் பூஜிக்கப்பட்டு ஏழெட்டு நாட்கள் வரையில் தசரதர் அங்கிருந்து, பிறகு ''மித்திர! சாந்தையையும் ரிஷ்யசிருங்கரையும் என்னுடன் அனுப்பவேண்டும்; அவர்களால் ஒரு பெரியகாரியம் எனக்கு ஆகவேண்டியிருக்கிறது'' என்றார்.

ரோமபதர் அதற்குச் சம்மதித்து அம்முனிவரிடத்திற்குச் சென்று ''சுவாமி தாங்களும் சாந்தையும் அயோத்திக்குப் போய், தசரதருக்கு ஒரு பெரிய உபகாரம் செய்யவேண்டும்'' என்று பிரார்த்தித்தார். அந்த ரிஷி அதை ஒப்புக்கொண்டார். பிறகு அவ்வரசர்கள் ஆலிங்கனம் செய்து, பிரீதியுடன் கைகூப்பி உத்தரவு பெற்றுக் கொண்டார்கள்.

தசரதர் அதிவேகமாகச் செல்லக்கூடிய தூதர்களை அழைத்து ''நீங்கள் அயோத்யைக்குப் போய் எங்களுடைய வரவைத் தெரிவித்து நகரத்தைச் சுத்தம் செய்து, ஜலம் தெளித்து, தூபங்களாலும் மாலைகளாலும், த்வஜங்களாலும் தோரணங் களாலும் அலங்கரிக்கச் சொல்லுங்கள்'' என்று அனுப்பினார். அயோத்யாவாஸிகள் அப்படியே செய்ய, தசரதர் மகரிஷியை முன்னிட்டுக்கொண்டு. சங்கம், துந்துபி, பேரிகை முதலிய வாத்திய கோஷங்களுடன் பட்டணத்தில் பிரவேசித்தார்

கம்பன்

கொழுந்து ஓடிப்படர் கீர்த்திக் கோவேந்தன்
.... அரசை எதிர்கோள் எண்ணி.

திரு அவதார: 40/58

எதிர்கொள்வான் வருகின்ற வய வேந்தன்
........களிப்பின் மிக்கான்.

திரு அவதார: 41/59

'யான்செய் மாதவமோ! இவ்வுலகம்
........உரவுத் தோளான்,

திரு அவதார: 41/60

ஆடகப் பொன்சுடர் இமைக்கும் அணிமாடச்
.........சுரர்நாடு ஈந்தான்.

திரு அவதார: 41/61

செவ்வி, நறுஞ்சாந்து அளித்து, தேர்வேந்தன்
........அயோத்தி சேர்ந்தான்.

திரு அவதார: 41/62

மாற்றம்

1 தசரதன் ரோமபதனின் 'பிரிய மித்திரன்' எனப்படுகின்ருன் வான்மீகத்தில்.

கம்பனே ஏதும் முன்னைய நட்புறவைக் காட்டாது மாமன்னன்-மன்னன் என்ற தொடர்பினில் மட்டும் காட்டுகின்ருன்.

ஆசிரியர் கருத்து

ஏற்கனவே அன்புள்ள நண்பனுய் இருந்திருந்தால் அந்த ரோமபதனுக்கே மருமகனுய் அமைந்துவிட்ட ரிஷ்யசிருங்கர் பற்றிய சரிதம் தசரதனுக்கு அதுநாள்வரை தெரியாமல் வசிஷ்டர் (அல்லது) சுமந்திரன் சொல்லித்தான் தெரியுமோ!

எனவேதான் கம்பன், அவ்விருவரிடையேயும் ஏதும் முன்னைய நட்புறவைக் காட்டவில்லை. அதனுலேயே, மாமன்னன் வரவினை அறிந்து வழியிலேயே எதிர்கொண்டான்; அடியில் வீழ்ந்து வணங்கினுன்; மகிழ்வோடு தன் நகருக்குள் அழைத்து வந்தான் எனப்பாடுகின்ருன். அவன், அடியில் வீழ்ந்து தொழுதலைக்காட்டித் தன் கருத்தை உறுதிப்படுத்துகின்ருன் கம்பன்.

மாற்றம்

2 தசரதன் ஏழெட்டு நாட்கள் ரோமபதன் நாட்டில் தங்கி யிருந்தான் என்கிறார், வான்மீகி.

கம்பன் காட்சியின்படி தசரதன் தான்வந்த காரணத்தை உரோமபதனிடம் கூறி, உடனே தேர் ஏறிச் சேனையோடும் அயோத்தி சேர்ந்தான் எனக் காண்கின்றோம்.

ஆசிரியர் கருத்து

தசரதன் ஏழெட்டு நாட்கள் தங்கியிருந்த பின்னர்தான், தான் வந்த காரியத்தைக்கூறி, சாந்தையையும் ரிஷ்யசிருங்கரையும் அனுப்பக் கேட்கின்றான். அப்பொழுதும்கூட 'அவர்களால் ஒரு பெரிய காரியம் எனக்கு ஆகவேண்டியிருக்கிறது! என்றுதான் தசரதன் கூறுகின்றான்! இந்த அளவிற்கு மட்டும் கூறிக் கேட்டு இருப்பானே, அன்புடைய நண்பனாய் இருந்திருப்பின்! அவனும் முழுக்காரணம் தெரியாத நிலையில் முனிசிரேஷ்டரான ரிஷ்ய சிருங்கரிடம் சிபாரிசு செய்திருப்பானா? முனிவருக்கு அவ்வடிப்படைக் காரணத்தைத் தெளிவுபடுத்தவில்லை என்றாலும் ஏழெட்டு நாட்கள் தங்கியிருந்தபின், குடும்பப் பேச்சுக்கள்வர, தான் வந்ததன் அடிப்படைக் காரணத்தைத் தசரதன் கூறாமல் இருந்திருக்க முடியுமா?

எனவேதான் கம்பன் காட்சி மாறுபடுகின்றது! நகரை யடைந்து தக்க முறையில் தயரதனை உபசரித்து விநயத்துடன் "தாங்கள் எழுந்தருளிய காரணம் யாதோ?" எனக்கேட்கின்றான், உரோமபதன். தயரதனே, தன்நாட்டு ஆலோசனைச் சபையில் நடந்தேறிய அனைத்தையும் கூறுகின்றான். இதனைக் காட்டியே 'நிகழ்ந்த பரிசு அரசர்பிரான் கழன்றான்' எனப்பாடுகின்றான் கம்பன். அத்துணையும் கூறினான் என்பதாலேயே 'கலைக்கோட்டு முனிவரை என் நாட்டிற்கு அனுப்புக' எனும் வேண்டுகோள் விடுக்கும் அவசியமோ, தனிப்பாடல் வரிகளோ இல்லாது போயிற்று!

மாற்றம்

3 தசரதன் தூதுவர்களை முன்னம் அயோத்திக்குத் திருப்பி அனுப்பினான் என்பது வான்மீகத்தில் காண்பது.

கம்பனில் இந்நிகழ்ச்சி இடம் பெறவில்லை.

ஆசிரியர் கருத்து

தசரதன் உரோமபதன் நாட்டில் ஏழெட்டு நாட்கள் தங்கினதாக வான்மீகி கூறியதால், தூதுவர்களைத் தன் நாட்டிற்கு முன்கூட்டித்திருப்பி அனுப்பவேண்டிய அவசியம் ஏற்பட்டது. ஆனால், கம்பனின் கூற்றுப்படி, தயரதன் உடனே நாடுதிரும்பியதால் தூதுவரை முன்னம் அனுப்பும் அவசியம் இல்லாததாயிற்று.

ஆகவே, தயரதன் வந்த மனோநிலை, நாட்டு நிலை, மேற்கொண்ட காரியம் இவற்றை அனுசரித்துக் கம்பன் காட்சிகளை மாற்றினான்—வான்மீகியின் தசரதன் வந்தவிடத்தில் விருந்துண்டு நாட்கள் கழிக்க !

8. அசுவமேதம்

வான்மீகி

ஸர்க்கம் 12, 13 & 14: (அசுவமேதயாகம் பற்றி மூன்று முழு ஸர்க்கங்கள் பாடப்பெற்றுள்ளன. அதன் இறுதியில் கூறப்பெற்று உள்ளதாவது :-) ''பிறகு அவர் ரிஷ்யசிருங்கரைக் கைகூப்பி வணங்கி அளவற்ற திருப்தியுடன் 'ஸ்வாமி! எனக்குப் புத்திரன் உண்டாகும்படி அனுக்கிரகிக்க வேண்டும்' என்று பிரார்த்தித்தார் (தசரதன்). அந்த முனிவர் 'அரசனே! கவலைவேண்டாம். நான்கு புத்திரர்கள் பிறந்து உமது வம்சத்தை விளங்கச் செய்வார்கள், தகுந்த உபாயம் செய்கிறேன்' என்று ஒப்புக்கொண்டார்''.

கம்பன்

என்றன பற்பல இனிமைகூறி,.........
.........இயம்புவாய்' என்ருன்.

திரு அவதார: 44/80

உலப்பு இல் பல்ஆண்டு எலாம் உறுகண் இன்றியே
.........இனி நல்க வேண்டுமால்.

திரு அவதார: 44/81

என்றலும், 'அரச! நீ இரங்கல்;.........
.........நீஇயற்றுதற்கு எழுக, ஈண்டு' என்ருன்.

திரு அவதார: 45/82

மாற்றம்

1 அசுவமேதயாகம் பற்றிய விரிவான விளக்கங்களும், வழிமுறைகளும் வான்மீகியால் வர்ணிக்கப்பட்டுள்ளன.

கம்பனிலோ அவை விரிவாக இல்லை என்பது மட்டுமல்ல, மிகமிகச் சுருக்கமாகக் குறிப்பால்தான் உணர்த்தப்பட்டுள்ளன.

ஆசிரியர் கருத்து

அசுவமேதயாகம் நடைபெற்றதைக் கலைக்கோட்டு முனிவரின் கேள்வியில் குறிப்பாகக் காட்டியுள்ளான் கம்பன்!

ஆம், 'என்னை அழைத்தது நன்மைசேர் அரிமகம் (அசுவமேத யாகம்) நடத்த எண்ணியோ ?' எனக் கேட்கின்றான் தசரதன். அது மட்டு மல்ல; 'இனி என்னும் சொல் இதனைக் காட்டி நிற்கின்றது ! என் பிள்ளையில்லாக் குறையைத் தீர்க்கும்வழியும் அருளவேண்டும்' என்று வேண்டிக்கொள்ளும் பாங்கில் விடையிறுக்கின்றான்.

இங்கே, இனியொன்றும் நமக்குப் புலப்படுகின்றது ! உரோமபதன், ரிஷ்யசிருங்கரை அயோத்திக்கு ஏகும் வண்ணம் வேண்டிக் கொண்டபோழ்து காரணம் ஒன்றும் கூறாமல் வேண்டவில்லை; அசுவமேதம் பற்றி எடுத்துக்கூறியே வேண்டி உள்ளான் என்பதேயாகும். அதனால்தான் 'அரிமகம் நடத்த எண்ணியோ?' என்கின்றான்.

மாற்றம்

2 வான்மீகியின் ரிஷ்யசிருங்கர் ஆரம்பத்திலேயே, 'உனக்கு நான்கு புத்திரர்கள் பிறப்பார்கள்' என்று தசரதனிடம் திட்டவட்டமாகக் கூறுகின்றார்.

கம்பனின் கலைக்கோட்டு முனிவரோ, 'வன்திறல் மைந்தரை அளிக்கும் பெரிய யாகம்செய்' என்று மட்டும் அருளினார்.

ஆசிரியர் கருத்து

திருமாலின் நான்கு அம்சங்கள், நான்கு புத்திரர்களாகப் பிறப்பதோ — திருமால், ஆதிசேஷன், சங்கு, சக்கரம் ஆகிய நான்கும் பிள்ளைகளாய் அவதரிப்பதோ தேவரகசியம். தேவ ரகசியத்தை மாமுனிவர்களேயானாலும் வெளியிடக்கூடாது — தேவையும் இல்லை — என்று கருதி, பிறக்கும் பிள்ளைகளின் எண்ணிக்கையைக் கம்பன் கலைக்கோட்டு முனிவர் கூற்றில் காட்டவில்லை போலும் !

9. தேவரகசியம்

வான்மீகி

ஸர்க்கம் 15, 16 & 17 : (இம் மூன்று ஸர்க்கங்களில், 'தேவர்கள் மஹா விஷ்ணுவைப் பிரார்த்தித்தது', 'புத்திரகாமேஷ்டி', 'தேவர் களுடைய அவதாரம்' ஆயவை விஸ்தாரமாகப் பகரப்படுகின்றன.) (16-ம் ஸர்க்கத்தின் ஒரு பிரிவு :-) "மஹாராஜா, தனக்கு நான்கு புத்திரர்கள் பிறக்கவேண்டுமென்று, அந்தப் பாயஸத்தில் பாதியைக் கௌஸல்யைக்கும், நாலிலொரு பாகத்தை ஸுமத்திரைக்கும், எட்டிலொரு பாகத்தைக் கைகேயிக்கும் கொடுத்தார். மிகுந்த எட்டிலொன்றை, யோசித்து ஸுமித்திரைக்கே கொடுத்தார். இப்படி அவர் விபாகம் செய்ததை மஹிஷிகள் மெச்சி, பாயஸத்தை வெகுப்பிரீதியுடன் பெற்றுக் கொண்டு புஜித்து, அக்னியையும், சூரியனையும்போல் காந்தியுள்ள கர்ப்பங்களைத் தரித்தார்கள்.

கம்பன்

முகமலர் ஒளிதர மொய்த்து,.........
.........வழங்கினன் அரோ.

திரு அவதார : 45/85

ஆயிடை, கனலின்நின்று,.........
.........பூதம் ஒன்று எழுந்தது—ஏந்தியே.

திரு அவதார : 45/86

வைத்தது தரைமிசை,.........
.........அளித்தியால் என்றான்.

திரு அவதார : 45/87

மாமுனி அருள்வழி,.........
.........சங்கம் ஆர்த்து எழ.

திரு அவதார : 45/88

கைகயன் தனையைதன் கரத்தும்,.........
.........கோசல மன்னர் மன்னனே.

திரு அவதார : 45/89

நமித்திரர் நடுக்குறு நலம்கொள் மொய்ம்புடை
.........தமரொடு ஆர்ப்பவே.

திரு அவதார : 45/90

பின்னும், அப்பெருந்தகை, ...
.........வலமும், துள்ளவே.

திரு அவதார : 46/91

வாங்கிய துயருடை மன்னன் பின்னரும்
.........நேமி வேந்தனே.

திரு அவதார : 47/99

தெரிவையர் மூவரும், சிறிதுநாள் ....
.........மதியமோடு ஒப்பத் தோன்றினர்.

திரு அவதார : 48/100

மாற்றம்

1 ரிஷ்யசிருங்கர் தசரதனிடம், ''அரசனே! கவலை வேண்டாம். நான்கு புத்திரர்கள் பிறந்து உமது வம்சத்தை விளங்கச் செய்வார்கள்; தகுந்த உபாயம் செய்கிறேன்'' என்று ஒப்புக் கொண்டபின், 'தேவர்கள் மகா விஷ்ணுவைப் பிரார்த்தித்தது, புத்திரகாமேஷ்டி யாகம், தேவர்களுடைய அவதாரம்' ஆயவை விரிவாகச் சொல்லப்படுகின்றன வான்மீகத்தில். அந்த விவரத்தில், 'தர்மங்களைப் பூரணமாய் அறிந்து, யாசகர்களுக்கு வேண்டிய வரையில் கொடுக்கும் அயோத்யாதிபதியான தசரதர் மகரிஷிகளைப் போன்றவர். ஹரீமகளிர்களிடத்தில், தாங்கள் நான்கு அம்சங்களாய் அவதரித்து மனுஷ்ய ரூபத்துடன் துஷ்ட ராக்ஷஸர்களைக் கொல்ல வேண்டும். தங்களைத்தவிர வேறு கதி எங்களுக்கு இல்லை' என்று திருமாலுக்கு வழி வகைகளைச் சொல்லிக் கொடுத்ததாகவும் வருகின்றது !

கம்பனிலோ, ''தேவர்கள் மகா விஷ்ணுவை வேண்டிக் கொள்ள, அவரும் பூலோகத்தில் அவதரித்து ஆவன செய்வதாய் ஒப்புக்கொண்ட காட்சி, வசிட்டர் ஞானப் பார்வையில் முன்னமேயே காட்டப்பட்டு அம்முனிவர் அதனை மனத்தில் இரகசியமாய்க் கொண்டார்; அதன் விளைவாய் இப்பொழுது திருமால் தயரதன்பால் அவதாரம் செய்யப்போவதை உணர்ந்தார். ஆனால்,

பொதுவில் பிள்ளைப்பேற்று வேள்வி இயற்றல் வேண்டும் என்று மட்டும் கூறினர்'' எனக் காண்கின்றோம். நான்கு பிள்ளைகள் என்ற கணக்கெல்லாம் இங்கில்லை; அத்தோடு திருமால் — திருமாலின் அம்சங்கள் — அவதரிக்கப்போவதாகவும் சொல்லப்படவில்லை.

ஆசிரியர் கருத்து

இத்துணை இரகசியங்களையும் தசரதன் தெரிந்து கொண்டு விட்டானேயானல், கதையில் விறுவிறுப்பு இராது என்பது மட்டும் அல்ல; இராமன் பிரிவால் பெருந்துயர்ப்பட்டுப் பின்னல் மாண்டான் தசரதன் என்னும்போழ்து அவன்பால் நமக்கு இரக்கம் உண்டாகாது! ''தனக்குப் பிறந்துள்ளவர்கள் திருமாலின் அம்சங்கள் என்று தெரிந்திருந்தும் இக்கதிக்கு ஆளாயினன் என்றல் அவனுடைய பக்திக்குறைவும், நம்பிக்கையின்மையும்தான் என்னே?'' என்று அருவறுக்கத்தான் தோன்றும்!

மாற்றம்

2 வான்மீகியின் தசரதன், தனக்கு நான்கு புத்திரர்கள் பிறக்க வேண்டுமென்ற எண்ணத்தோடேயே பாயசத்தை, அரை—கால்—அரைக்கால்—அரைக்கால் என நான்கு கூறுகளாகப் பங்கிட்டு மூன்று அரசிகளுக்குத் தந்ததாகச் சொல்லப்பட்டிருக்கின்றது.

கம்பனின் தயரதனே மூன்று மனைவியர்க்கும் பகிர்ந்தளித்தான்; பிதிர்ந்து வீழ்ந்ததையும் சுமத்திரைக்குக் கொடுத்தான்.

ஆசிரியர் கருத்து

இந்த வேறுபாட்டின் அடிப்படைக்காரணம் தேவரகசியம் ரிஷ்யசிருங்கரால் வான்மீகியின் தசரதனுக்குத் தெரிவிக்கப்பட்டிருந்ததுதான். கம்பனின் தயரதனுக்கோ தேவரகசியம் சொல்லப்படத் தேவையில்லாதாயிற்று.

குலம் தொடரவோ, நாடு காக்கவோ ஏது காரணம் பற்றியோ தசரதன் பிள்ளைப் பேற்றினை விரும்பினலும் அதற்கு நான்கு என்ற கணக்கு அவன்மட்டிலும் தேவையற்றதொன்று. எனவேதான், மூலத்தின் கருத்தாகிய நான்கம்ச அவதாரத்தைக் கம்பன் மறக்கவில்லையென்றலும், அதனை வெளிப்படையாக்கி அதற்காகவே பாயசத்தை நான்காகப் பகிர்ந்து கொடுத்தான் என்று கம்பன் கூருது விடுத்தான்!

மாற்றம்

3 " மஹிஷிகள் மெச்சி, பாயஸத்தைப் புஜித்துக் கர்ப்பங்களைத் தரித்தார்கள் " என்று வான்மீகத்தில் உள்ளது.

"வேள்வியெல்லாம் முடிந்த பின்றை ஒவ்வொருவரையும் தக்க மரியாதைகளுடன் அனுப்பி வைத்துவிட்டுத்தான் தனிமை பெற்றான். (தயரதன்); சிறிதுநாள் சென்றபின் அரசியர் கருவுற்று வயாவும் வருத்தமும் பெற்றனர்" எனக் கம்பன் கூறுகின்றான்.

ஆசிரியர் கருத்து

எப்படி இராமன் திருமாலின் அவதாரமேயானாலும் மனித உருவம் கொண்டதற்கு இணங்கப் பழக்க வழக்கங்கள் நடைமுறை முதலியவற்றை ஏற்று நடந்தானோ அப்படியே தோற்றமும் உலகியல் முறையிலேயே அமைந்ததாய்க்காட்டலே சீரியது. வான்மீகியின் சொல்லின்படி, தசரதன் ஏதோ ஒப்புக்கு - அந்த மஹிஷிகளின் கணவன் என்ற முறைமையால் – இராமனுக்குத் தந்தையாகக் காட்சியளிக்கின்றானே தவிர உலகியல் நியதிப் படியிலான தந்தையாகத் தோன்றவில்லை.

இந்த எண்ணத்திற்கே இடமில்லாமல் கம்பன், நாகரிக மாகத் தயரதனை நிறுத்துகின்றான்! 'வேள்வி முடிந்தபின் தனிமை பெற்றான்' என்றவன் சிறிது நாள் சென்றபின் அரசியர் கருவுற்று வயாவும் வருத்தமும் பெற்றனர் என இடைவெளி காட்டாமல் காட்டித் தம்பதியர்கள் இணைந்தமையையும், தெய்விகப் பாயசம் அந்த இணைப்பில் அருள் பொழிந்ததையும் அழகாக—மறைமுகமாக —எடுத்துக் காட்டுகின்றான் !

ஆகவே, தேவ ரகசியத்தை ரகசியமாகவே கொண்டு, முதலில் பிள்ளைப் பேற்றிற்கு ஏங்கிய அடிப்படைக் காரணத்திற் கொப்ப எண்ணிக்கையைக் கூறாமல், மனித உருவம் தோன்றுவதற் கான உலகியல் அமைப்போடு ஒத்துப்போக, கம்பன் இம்மாற்றங் களைச் செய்துள்ளான் என்று தெரிகின்றோம்.

10. மனைவியர் மூவர் முறைமை என்னே?

வான்மீகி

ஸர்க்கம் 16: அந்தப் பாயஸத்தில் பாதியைக் கௌஸல்யைக்கும் நாலிலொரு பாகத்தை ஸுமித்திரைக்கும் எட்டிலொரு பாகத்தைக் கைகேயிக்கும் கொடுத்தார். மிகுந்த எட்டிலொன்றைக் யோசித்து ஸுமித்திரைக்கே கொடுத்தார். இப்படி அவர் விபாகம் செய்ததை மஹிஷிகள் மெச்சி, பாயஸத்தை வெகுப் பிரீதியுடன் பெற்றுக் கொண்டு புஜித்து, அக்னியையும் சூரியனையும் போல் காந்தியுள்ள கர்ப்பங்களைத் தரித்தார்கள்.

கம்பன்

திரு அவதார: 46/87—91: (கட்டுரை 5இல் பாடல்களைக் காண்க)

மாற்றம்

வான்மீகியின்படி, தசரதனின் மூன்று பட்டமஹிஷிகள் கோசலை, சுமித்ரை, கைகேயி என்ற வரிசை பெறுகின்றனர்.

கம்பன் அவர்களை, கோசலை - கைகேயி - சுமித்திரை என முறை மாற்றியுள்ளான்,

ஆசிரியர் கருத்து

தயரதன், திருவருட் பாயசத்தை மூன்று மனைவியர்க்கும் அடுத்தடுத்து அளித்தான்; அவர்களும் உண்டனர். அதே போல் மனைவியர் மூவரும் அடுத்தடுத்துப் பிள்ளைகள் பெற்றனர்; அவ்வாறு பிரசவங்களைக் குறிப்பிடும் பொழுது கோசலைக்கு இராமன், கைகேயிக்குப் பரதன், சுமித்திரைக்கு லக்ஷ்மணன் - சத்ருக்னன் தோன்றினர் என வான்மீகியே வரிசைப் படுத்துகின்றார். இராமனின் பின்னோடே பிறந்தவன் பரதன் என்பது கதைப் போக்கிற்கும் தேவைப்படுகின்றது! லக்ஷ்மண - சத்ருக்னரின் பின் தோன்றியவனாகப் பரதனை அமைத்திருந்தால் பின்னாளில் இராமனைக்

காட்டிற்கனுப்பிப் பரதனுக்குப் பட்டம் சூட்ட வேண்டுமென்ற கைகேயியின் கோரிக்கை முழுதும் முறையற்றதாகிவிடும், மூத்தோர் மூவரை விலக்கிக் கடைப்பிள்ளைக்கு ஆட்சியா என்ற காரணத்தால்!

ஆக, இராமனின் பின்னர் பரதன் பிறக்கவேண்டும் என்ருல் பாயசப் பகுதியைக் கோசலேயின் பின் கைகேயி உண்டிருக்க வேண்டும். அவள் மூன்றும் மனேவியாய் இருந்துகொண்டு வரிசை முறைப்படி பிரசாதத்தைப் பெற்று உண்பதில் இரண்டாம் இடத்தைப் பெறமுடியாது. எனவே, முறைதவருமல் இருக்கும் வண்ணமும், சுமித்திரையின் புதல்வர்கள் இராமனேயும், பரதனேயும் மூத்தோராய்ப் பெற்று உறுதுணேயராய் நின்றிடும் சூழ்நிலே தோன்றும் வண்ணமும் கம்பன் கைகேயியை இரண்டாம் மனேவி நிலேயில் காட்டுகின்ருன்.

11. நால்வர் வளர்ச்சி

வான்மீகி

ஸர்க்கம் 18: அவர்கள் (ராம, லக்ஷ்மண, பரத, சத்ருக்னராகிய நால்வர்) சாஸ்திரங்களைக் கற்று, ஞானத்தை அடைந்ததால் நற்குணங்கள் பொருந்தி, ஒருவேளை அஜாக்கிரதையால் கெட்ட காரியங்களில் மனது சென்றாலும் அதனால் வெட்கமடைந்து, எல்லா விஷயங்களையும் அறிந்தவர்களென்ற கீர்த்தியையும், லௌகிக காரியங்களில் திறமையையும், வருங்காலத்தை அறியும் சக்தியையும், கண்ணைப் பறிக்கும் தேஜஸையும், உடையவர்களாய் இருந்ததால் தசரதர் லோகாதிபதியான சதுர்முகனைப் போல் பரம ஸந்தோஷமடைந்தார்.

கம்பன்

அமிர்து உகு குதலையொடு அணிநடை பயிலா,
.........குறைவு அற வளர்நாள்.

திரு அவதார : 51/123

இப்பரிசு அணிநகர் உறையும் யாவரும்,
.........முதல்வன் வைகுறும்.

திரு அவதார : 53/134

மாற்றம்

திருமாலின் நான்கு அம்சங்களே இராமன் முதலாய நால்வராய் அவதரித்துள்ளன என்றெல்லாம் நம்பச்செய்யும் வான்மீகி அந்த அறமூர்த்திகளின் பெருமைகளையெல்லாம் பாடினாரேனும், 'அஜாக்கிரதையால் கெட்ட காரியங்களில் மனது சென்றாலும்' எனக் குறிப்பிடுவதால் சத்குணப் புருஷர்கள்பால் சற்றே களங்கத்தை — களங்கத்தின் சாயலை — கற்பிக்கின்றார்!

கம்பனோ, இருள் நீங்கவரும் சூரியன் போலவும், ஒலி உருவில் வளர்கின்ற நான்மறை போலவும், பூமாதேவியின் குறைகள் நீங்க அவர்கள் வளர்ந்ததாய்க் காட்டுகின்றான்.

ஆசிரியர் கருத்து

வான்மீகியைப் போல் சந்தேகப்படும் அளவிற்கான குற்றமும்கூட அற்றவர்களாய் அவர்கள் வளர்ந்தனர் என்பதைக் காட்டவே, நகரமக்கள் அனைவரும் அவர்தம் மெய்க்கீர்த்தியைப் பாட, வளர்ந்தார்கள் என்றான் கம்பன். மேலும், மூத்தோனாகிய இராமனின் அடியொற்றியே இளையர் மூவரும் வாழ்ந்தனர் எனவும் பாடுகின்றான்.

சாதாரண காவிய நாயகர்கள்தம் குறைகளையே கழறுதல் கூடாது என்றால் அவதாரபுருஷர்களைப் பற்றியா குறைகாண்பது என்ற பாங்கில் வந்த மாற்றம் ஈது!

12. விசுவாமித்திரனின் வெகுளி

வான்மீகி

ஸர்க்கம் 18 : *(1)* பிறகு தசரதர் ஒருநாள் புரோஹிதரையும் பந்துக்களையும் வருவித்துத் தன் புத்திரர்களுக்கு மணம் செய்ய வேண்டியதைப் பற்றி ஆலோசித்துக் கொண்டிருக்கையில் மஹா தேஜஸ்வியான விசுவாமித்திர மஹாமுனி, அவரைப் பார்க்க விரும்பி வந்தார்.

(2) அவர்பால் தசரதர், ''க்ஷேமமாய் வந்தீர்களா? என் சந்தோஷத்திற்கு எல்லையில்லை. தங்களுடைய இஷ்டத்தை எப்படி நிறைவேற்ற வேண்டும்? தங்களைவிட உத்தமமான பாத்திரம் எனக்குக் கிடைக்குமோ? ...... என்னை உத்தேசித்து இங்கே வந்த காரியத்தைச் சொல்ல வேண்டும். தங்களுடைய ஆக்ஞையை நிறைவேற்றித் தங்களால் அனுக்கிரஹம் பெற விரும்புகிறேன். தாங்கள் எண்ணி வந்த காரியம் எதுவானாலும் யோசிக்கக்கூடாது. குறைவில்லாமல் முடிக்கிறேன். தாங்கள் எனக்குத் தெய்வமல்லவா? தங்களுடைய வரவால் எனக்கு விசேஷ க்ஷேமமும் நிகரற்ற தர்மமும் கிடைத்திருக்கின்றன'' என்றார்.

ஸர்க்கம் 19 : *(3)* சில பலன்களை உத்தேசித்து நான் ஒரு யாகம் செய்ய ஆரம்பித்தேன். அது முடியும் ஸமயத்தில் ஸுபாஹு, மாரீசனென்ற இரண்டு ராக்ஷஸர்கள் அங்கே வந்து மாம்ஸத்தையும் ரத்தத்தையும் அக்னி குண்டத்தில் வர்ஷித்து யாகத்தைக் கெடுத்து விட்டார்கள். அவர்களோ மஹாவீரர்கள்; யுத்தங்களில் தேர்ந்தவர்கள்; நினைத்த ரூபங்களை எடுக்கக் கூடியவர்கள். இப்படிப் பல தடவை நடந்து என் சிரமமெல்லாம் வீணாகி, உத்ஸாகம் குறைந்து அவ்விடத்தை விட்டு வந்தேன். யாக காலத்தில் சபிக்கக் கூடாதென்று ஏற்பட்டிருப்பதால் அவர்களை நானே சிக்ஷிக்க முடியவில்லை.

மறுபடியும் யாகம் செய்யப் போகிறேன். அதை ரக்ஷிக்க உமது மூத்த புத்திரனான ராமனை என்னுடன் அனுப்பும். அவன் சிறு வயதுள்ளவனானாலும் மஹாசூரன் ......என்றெல்லாம் விசுவாமித்திர மாமுனி தசரதரிடம் கூறினார்.

''என் யாகத்திற்காகப் பத்து தினங்கள் மாத்திரம் செந்தாமரைக் கண்ணனை ராகவனை என்னுடன் அனுப்பும்'' என்று கேட்டார்.

ஸர்க்கம் 20: *(4)* அதைக்கேட்ட தசரதர் இடிவிழுந்ததைப்போல் நடுங்கி, ''மஹரிஷே! அந்தத் துஷ்டனுடன் யுத்தம் செய்ய என்னாலேயே முடியாது. ஸகல காரியங்களையும் அறிந்த தாங்கள் என் குழந்தையிடத்தில் கிருபை செய்ய வேண்டும்........'' (என்றெல்லாம் மன்றாடினார்) என்றார்.

ராஜசிரேஷ்டரான தசரதர் விசுவாமித்திரருடைய வார்த்தைகளைக் கேட்டு ஒரு முகூர்த்தம் வரையில் மூர்ச்சையடைந்தார். பிறகு பிரக்ஞை வந்து ''மஹரிஷே! மலர்ந்த செந்தாமரையைப் போன்ற திருக்கண்களுள்ள என் ராமனுக்கு இன்னும் பதினாறுவயது முடியவில்லையே......'' என்றார்.

ஸர்க்கம் 21: இப்படிப் புத்திர ஸ்நேஹத்தால் மனந்தளர்ந்து தசரதர் பிரலாபிப்பதைக் கேட்டு (இராமனை விசுவாமித்திரனுடன் அனுப்ப முடியாது என்று சொல்லக்கேட்டு), 'அரசரே! நான் ஏதாவது வலுவில் வேண்டினேனா? எதைக்கேட்டாலும் உடனே கொடுப்பதாய் அடிக்கடி பிரதிக்ஞை செய்தவர்நீரே. கேட்கும்படிக் கட்டாயப்படுத்தி என்னைக் கேட்கச் சொன்னதும் நீரே. செய்த பிரதிக்ஞையை இப்பொழுது தவிர்க்கப்பார்க்கிறவரும் நீரே...... செய்த பிரதிக்ஞையைப் பொய்யாக்கி, பந்துக்களுடன் ஸுகமாய் வஸித்துக் கொண்டிரும்'' என்று அங்கிருந்து போகப்புறப்பட்டார்.

''இப்படிச் செய்கிறேனென்று ஒருவன் சொல்லி, அதை முடிக்காவிட்டால் அவன் செய்யும் தான தர்மங்களும் யாக யக்ஞங்களும் ஜபஹோம தர்ப்பணங்களும் தவமும் நாசமடையும் அல்லவா?'' என்றார் வசிட்டர்.

கம்பன்

(1) மடங்கல்போல் மொய்ம்பினான் முன்னர், ...
........முனிவன் தோன்றினான்.

கையடை : 544

(2) ‘நிலம்செய் தவம் என்றுஉணரின்,.........
.........என்று இனிது கூற, முனி கூறும்.

கையடை : 54/7

என் அனைய முனிவரரும் இமையவரும்
.........புலவு வேலோய்.

கையடை : 54/8

இன்தளிர்க் கற்பக நறுந்தேன்.........
.........அரச!' என்றான்.

கையடை : 54/9

உரைசெய்யும் அளவில்,.........
.........பின்மொழியும் முனிவன், ஆங்கே!

கையடை : 55/10

(3) ‘தருவனத்துள் யான்இயற்றும் தகைவேள்விக்கு
.........உனையச் சொன்னான்.

கையடை : 55/11

எண்இலா அருந்தவத்தோன் இயம்பியசொல்
.........கால வேலான்.

கையடை : 55/12

(4) தொடை ஊற்றின் தேன்துளிக்கும் நறுந்தாரான்
.........பெருவேள்விக்கு எழுக!' என்றான்.

கையடை : 56/13

மாற்றம்

1 தன்புத்திரர்களுக்குத் திருமணம் செய்வதற்கான ஆலோசனைகளில் ஈடுபட்டிருந்தபோது விசுவாமித்திரன் தசரதனின் சபைக்கு வந்ததாக வான்மீகத்தில் வருகின்றது.

கம்பனில், தயரதன் மணிமண்டபத்தே வீற்றிருந்த நிலையில் முனிவர் வந்துற்றார்!

ஆசிரியர் கருத்து

தன் புத்திரர்களுக்குத் திருமணம் செய்ய எண்ணிக் கொண்டிருந்த தயரதனிடம், விசுவாமித்திரன் இராமனைத் தன்னுடன் யாகம் காக்க வனத்திற்கு அனுப்பும்படி கேட்ட பொழுது, 'இராமன் பதினறு வயதுகூட நிரம்பாதவன்; அவனுல் அரக்கரை எதிர்த்துப் போரிட முடியாது' என்றெல்லாம் தசரதன் கூறுகின்முன்! அப்படியானுல் தக்க வயது அடையுமுன் திருமணம் செய்ய எண்ணினுர்களா? இல்லை, அந்நாளில் அவர்களின் நாகரிகப்படி பால்ய விவாகம் நடைபெற்று வந்தனவா?

இந்த முன்னுக்குப்பின் முரணுன பேச்சிற்கோ, பால்ய விவாக பிரச்சனைக்கோ இடமின்றி, கம்பன், மணி மண்டபத்தே தயரதன் ஆலோசித்திருந்த செய்தி ஏதென்றே சொல்லாது விடுத்தான்.

மாற்றம்

2 தன்னை நாடிவந்த விசுவாமித்திர முனிவரிடம் தசரதன், தானே வலிய அவருடைய தேவைகள் எதுவானுலும் தான் நிறைவேற்றுவதாக உறுதிமொழி தந்து பேசுகின்முன். அவர், இராமனைத் தன்னுடன் அனுப்பும்படி கேட்கின்முர். அதற்கு மனம் ஒப்பாத தசரதன் ஏதேதோ கூறி மழுப்புகின்முன். அவர் ஆத்திரம் அடைகின்முர்! நீயாக வலிந்து கூறிய வாக்குறுதிகளை நிறைவேற்ருமல் பொய்யனுகப் போகின்முயா? என்றெல்லாம் அவன் வாக்குறுதிகளை வைத்தே அவனைச் சினக்கின்முர். பேச்சுக்கிடையில், 'அரசரே! நான் உம்மை ஏதாவது வலுவில் வேண்டினேனு?' எனக்கேட்டார். இது வான்மீகம்.

கம்பன் காட்சியில், வந்த விசுவாமித்திரர் தயரதனைப் போற்றிப் புகழ்ந்த தன்மையால் - அவர் எதையோ தன்னிடம் எதிர்பார்க்கின்முர் என்பதைப் புரிந்து கொண்டு, 'இனிச் செய்வது அருளுக' என்று மட்டும் கேட்டு நின்முனே ஒழிய, எதையும் நிறைவேற்றுவதாய் உறுதிமொழி கூறவில்லை. விசுவாமித்திரரே அவனுடைய உதவி நாடி, கரிய செம்மல் ஒருவனுகிய இராமனைத் தன்னுடன் அனுப்பக் கேட்கின்முர்.

ஆசிரியர் கருத்து

தன் வேள்வியைக்காக்க இராமனை அழைத்துச் செல்லும் நோக்கத்துடனேயே வந்த விசுவாமித்திரர், 'நான் எதையும் நின்பால் கேட்டேனா?' எனத் தயரதனைக் கேட்பதில் அர்த்தமே யில்லை; மன்னன் அவ்வாறு வாக்குறுதிகளைக் கொடுக்காவிட்டால் வந்த வழியே ஒன்றும் கேளாமல், திரும்பிப் போயிருப்பாரோ! அதனாலேயே தயரதன், ''இனிச் செய்வது அருளக'' என்று விநய மாகக் கேட்கும் மாற்றத்தை நுழைத்தான் கம்பன்!

அவனாக உதவி செய்ய முன் வந்தானோ, அவராக உதவி கேட்டாரோ? வேண்டுவது என்ன என்று சற்றேனும் அறியும் முன்னே சத்திய வர்க்குகளைச் சாற்றிவிட்டுப் பின் தயங்குவானேன்? அதனையே அடிப்படையாகக் கொண்டு விசுவாமித்திரர் மட்டும் அல்ல வசிஷ்டரும் தசரதன் போக்கில் குறைகண்டு பேசுவானேன்? இதனைப் படிப்போர் தசரதனைப்பற்றி ஒரு தவறான எண்ணத்தை ஏற்கும் நிலை ஏற்படுவானேன்?

அதனாலேயே கம்பன் தயரதனின் விநய வேண்டுகோளில் ஏதும் உறுதிமொழி போன்ற சொற்களை அமைக்காது, மாமன்னனின் பண்பினைத் தெரிவிக்கும் இக்கட்டத்தில் மாற்றம் செய்துள்ளான்.

மாற்றம்

3-1 இராமனைத் தன்னுடன் அனுப்பக் கேட்கும் வான்மீகியின் விசுவாமித்திரர், தானியற்றிய வேள்விகளுக்கு ஏற்பட்ட இடையூறுகள், அவ்விடையூறுகளை இயற்றிய அரக்கர்களின் கொடுமைகள் ஆகியவற்றை வெகுவாக விளக்கிப் பின் இராமனைக் காவலுக்குக் கேட்கின்றார்.

கம்பனின் விசுவாமித்திரரோ, 'யான் செய்யும் வேள்விக்கு அரக்கரின் இடையூற்றைக் காக்க, இராமனை அனுப்புக' என்று, அதிகமான விளக்கங்களைக் கூறாமல் சூழ்நிலைக் காட்சிகளைப் படம் பிடித்துக் காட்டாமல் - 'இராமனை அனுப்புக' என்ற சொற்கள் மட்டும் முக்கியத்துவம் பெறும் வகையில் கேட்கின்றார்.

ஆசிரியர் கருத்து

இருவரின் காட்சிகளிலும், 'இராமனை அனுப்புக' என்று விசுவாமித்திரர் கேட்ட உடனேயே, தயரதன் பெருந்துயர்ப் பட்டான்—ஏன், வான்மீகியின் தசரதன் மூர்ச்சையாய் வீழ்ந்தான் —எனப்பார்க்கின்றோம். அந்த அளவிற்கு உள்ளத்தில் அடி விழ வேண்டுமென்றால், அந்த வேண்டுகோள் சொற்களின் வேகம், அச் சொற்கள் உண்டாக்கும் உணர்ச்சியின் வேகம் - மிகுந்திருத்தல் வேண்டும். முன்னடியே கோரச்சண்டைக் காட்சியின் வர்ணனைகள் மிகுந்திருந்து விட்டால், சொல்வேகம் - உணர்ச்சிவேகம்-குன்றி விடும். ஆக, அந்த வேகத்தன்மை குன்றாமல் இருக்க, இந்த மனோ தத்துவ முறையிலான மாற்றத்தைக் கம்பன் ஏற்படுத்தியுள்ளான்.

மாற்றம்

3-2 வான்மீகியின் விசுவாமித்திரன் முடிவில், இராமனைப் பத்து நாட்கள் தன்னுடன் அனுப்பும்படி நாட் கணக்கைக் கூறிக் கேட்கின்றான். கம்பனில் அவ்வாறு நாட்கணக்கொன்றும் கூறப் படவில்லை.

ஆசிரியர் கருத்து

'பத்து தினங்கள் மாத்திரம்' என்று கூறிக் கூட்டிச்சென்ற விசுவாமித்திரர், வேள்வி முடிந்தபின் இராமனை மிதிலைக்கு யாருடைய அனுமதியின் பேரில் அழைத்துச் சென்றார்? இல்லை, அந்தப் பத்து நாட்களுக்குள்ளேயே வேள்வி முடிந்து, மிதிலை சென்று வில்லொடித்த காட்சிகள் எல்லாம் முடிந்து விட்டனவா! நிச்சயமாக அங்ஙன் முடிந்திருக்க முடியாது. எனவே, விசுவாமித்திரர் தானே குறிப்பிட்டுக் கேட்ட நாட்கெடுவினைத் தாண்டிய குற்றத்திற்குள்ளாவார்! அக்குற்றம் தோன்றாவண்ணம், கம்பன், நாட்கணக்கைக் குறிப்பிடாது விடுத்தான்.

மாற்றம்

சுபாகு, மாரீசன் ஆய அரக்கர்களின் தொல்லைகளையும் மாயங்களையும் வான்மீகியின் விசுவாமித்திரர் விளக்கியவுடன் பேராற்றல் பெற்ற தசரதனே இடி விழுந்ததைப்போல் நடுங்கி, 'மஹரிஷே! அந்தத் துஷ்டனுடன் யுத்தம் செய்ய என்னாலேயே முடியாது' என்றெல்லாம் கோழையாகப் பேசுகின்றான்.

கம்பனின் தயரதனே வீர கர்ஜனை செய்து, 'எவர் செய்யும் இடையூற்றிற்கும் இடையூருய் நின்று வேள்வி காப்பேன்' எனும் பாங்கில் உறுதியாய் நிற்கின்ருன்.

ஆசிரியர் கருத்து

இராமனை விசுவாமித்திரருடன் அனுப்ப முடியாது என்று கூறும் நிலையில் தயரதனும் அரக்கர்க்கஞ்சித் 'தன்ஞலேயே அவர் களை எதிர்க்க இயலாது' என்று சொல்லும் சொல் மாமன்னனின் பேராற்றலுக்கு இழுக்கு; சொன்னசொல்லை மாற்ற நினைப்போனுக்கு ஏளனம் நேரும். நாடிவந்த மாமுனிக்கு ஏமாற்றம். ஆக, இந்த இழுக்கும், ஏளனமும், ஏமாற்றமும் தோன்றுதல் ஆகாது என்ற மனேதத்துவ அடிப்படையில் கம்பன், வீர முழக்கச் சபதமாய்த் தயரதன் வாயிலாக அக்காட்சியில் மாற்றம் காட்டியுள்ளான்.

13. தனயரைத் தந்தான் தயரதன்

வான்மீகி

ஸர்க்கம் 21: வசிஷ்டருடைய வார்த்தைகளால் அரசனுடைய சித்தம் தெளிந்தது; முகம் மலர்ந்தது; கௌசிகருடன் ராமனை அனுப்ப நிச்சயித்தார்.

ஸர்க்கம் 22: வசிஷ்டர் இப்படிச் சொன்னவுடன் தசரதர் ஸந்தோஷத்தால் முகமலர்ந்து ராமலக்ஷ்மணர்களை வரவழைத்தார், கௌஸல்யையும் தசரதரும் வசிஷ்டரும் அவர்களுக்கு ஸகல மங்களங்களும் உண்டாகும்படி வேத மந்திரங்களை ஜபித்து ரக்ஷைகளைக் கட்டி ஆசீர்வாதம் செய்தார்கள். பிறகு தன் அருமைக் குழந்தையான ராமனைத் தசரதர் இறுகத் தழுவி, உச்சி மோந்து ஸந்தோஷமாய் விசுவாமித்திரரிடம் ஒப்புவித்தார்.

கௌசிகர் முன்னே சென்றார். வயது நிரம்பாத பாலனானாலும் அபார கீர்த்தி வாய்ந்த ஸ்ரீராமன் அவருக்குப்பின் சென்றார். லக்ஷ்மணன் வில்லும் கையுமாய் அவரைப் பின்தொடர்ந்தார்.

கம்பன்

குருவின் வாசகம் கொண்டு, கொற்றவன்
.........அறிவின் உம்பரான்.

கையடை : 56/17

வந்த நம்பியைத் தம்பி தன்னொடும்
.........தந்தனென்; இயைந்த செய்க!' என்றான்.

கையடை : 57/18

மாற்றம்

1 வசிஷ்டர் இராமனை அனுப்பும்படி எடுத்துக் கூறினார். அதனை தசரதனும் ஏற்றுக் கொண்டான். இந்த சமயத்தில் தசரதனின் முகம் மலர்ந்தது என்பது வான்மீகியின் கூற்று.

'குருவான வசிஷ்டரின் பேச்சுக்களை ஏற்றுக் கொண்டு இராமனை வரவழைத்தான் தயரதன்' என்று மட்டும் கம்பன் கூறுகின்றானேயன்றி அகம் மலர்ந்ததாகவோ, முகம் மலர்ந்ததாகவோ காட்டவில்லை.

ஆசிரியர் கருத்து

இராமனை அனுப்ப விசுவாமித்திரர் கேட்டவுடனேயே மூர்ச்சித்து வீழ்ந்தான் தசரதன். பிறகு, நினைவுவர, தான் சொல்லிய வார்த்தைகளையும் மறந்து, விசுவாமித்திர மாமுனியின் சினத்தின் விளைவுகளையும் நினைந்து பாராது, 'இராமனை அனுப்ப மாட்டேன்' என்று சொல்லி நின்றான். விசுவாமித்திரனாலும், வசிஷ்டராலும் நிந்தனைக்கு ஆளானான். பிறகு, வசிஷ்டர் இராமனை அனுப்பும்படி எடுத்துக் கூறினார். அதனை தசரதன் முடிவில் ஏற்றுக் கொண்டான்.

இந்த சமயத்தில் தசரதனின் முகம் மலர்ந்தது என்பது வான்மீகியின் காட்சி.

பிரிவின் எண்ணத்தால் எதிர்மறை முடிவோடு வேதனை உச்ச கட்டத்தில் இருப்பவர்களுக்கு எடுத்துரைக்கத் தக்கவர் எடுத்துரைத்தால் மனம் ஆறுதல் - சமாதானம் - பெறுமே யன்றி, வேதனை தணியுமேயன்றி, உடனுக்குடன் சந்தோஷம் மேலிட்டு அதன் விளைவாய் முகமலர்ச்சி முதலியன தோன்றா என்பதே மனோதத்துவ முறையிலான உண்மை!

எனவேதான், 'குருவான வசிஷ்டரின் பேச்சுக்களை ஏற்றுக் கொண்டு இராமனை வரவழைத்தான் என்று மட்டும் கம்பன் கூறு கின்றானேயன்றி அகம், முகம் மலர்ந்ததாகவெல்லாம் கூறவில்லை.

அப்படியானால், வேதனையோடு விசுவாமித்திரருக்குத் துணையனுப்பலாமா எனக் கேட்கத் தோன்றும். வேதனையிருந்தால் வாயடைக்கும்; ஒன்றுமே பேசாது வேண்டா வெறுப்பாய் அனுப்பு வதுபோல் நடந்து கொள்வார்கள். ஆனால், தசரதனோ, 'நம்பியை யும் தம்பியையும் முனிவருக்குக் காட்டி நல்ல தந்தை நீ, தாய் நீ' என்றெல்லாம் எடுத்துரைத்து ஒப்படைக்கின்றான் பிரிவின் துயர் தொனித்தும் தொனிக்காமலும்!

ஆக, இம்மாற்றம் குணசித்திர பாகுபாட்டின் அடிப்படை யில் கம்பனால் கையாளப்பட்டுள்ளது!

மாற்றம்

2 வசிஷ்டர் பேச்சைக் கேட்டு விசுவாமித்திரனுடன் இராமனை அனுப்ப முடிவு செய்த வான்மீகியின் தசரதன், இராம

இலக்ஷ்மணர் இருவரையுமே வரவழைத்தான். ஆனுல், ரகைஷகளைக் கட்டி, இறுகத் தழுவி, உச்சி மோந்து, விசுவாமித்திரரிடம் ஒப்பு வித்தது இராமனைத்தான் !

கம்பனின் தயரதனே வசிட்டரின் பேச்சைக் கேட்டபின் 'திருவின் கேள்வனைக் கொணர்மின்' என்று இராமனைக் குறிப் பிட்டுக் கூறினுன். ஆனுல் முடிவில் அவனுடைய தயரதன், 'நம்பியைத் தம்பி தன்னெடும் முனிவருக்குக் காட்டி, நீயே இவர் களுக்குத் தந்தையும், தாயும்' எனக்கூறி நின்ருன்.

ஆசிரியர் கருத்து

இராமனும் இலக்குவனும் இணை பிரியாது இருந்தனர் என்பதுவும் இராமன் செல்லுமிடமெங்கும் இலக்குவனும் செல் வான் என்பதுவும் வான்மீகி, கம்பன் இருவரும் அறிந்ததே. ஆனுல், விசுவாமித்திரனிடம் பிள்ளையரை ஒப்படைத்த பாங்கில் இருவ ரிடையும் மேலே கண்ட மாற்றத்தைப் பார்க்கின்ருேம்.

வான்மீகியின் தசரதன் இராமனைத்தான் விசுவாமித்திர ரிடம் ஒப்புவித்தான் என்ருலும், விசுவாமித்திரரின் பின்னுல் இராமன்போக, அவன் பின்னுல் இலக்குவன் வில்லேந்திப் போனுன் என்று வருவதால் இராமனைப் பிரியாத காரணத்தால் இலக்கு வனும் காட்டிற்குப் போனுன் என்ருகின்றதேயன்றி, தசரதன் சிறியவனுன இலக்குவனையும் முனிவரிடம் ஒப்படைத்தான் என்ருகவில்லை.

கம்பனின் தயரதனே இராமனைக் குறிப்பிட்டுக் கூப்பிட் டனுப்பினுலும் அவனுடனேயே இலக்குவனும் வந்திடுவான் என் பதை அறிவான்; அதேபோல் இலக்குவனும் வந்திட்டான் !

ஆனுல், முனிவரிடம் ஒப்படைக்கும் காரியத்திலேயும், இங்ஙன் அவர்கள் பிரியாத்தன்மையின் அடிப்படையில் முனிவர் கேட்ட இராமனை மட்டுமின்றி இலக்குவனையும் சேர்த்து தயரதன் இருவரையும் முனிவரிடம் காட்டி இருவர்க்கும் 'தந்தை, தாய் நீ' எனக்கூறி ஒப்படைத்தான்.

ஆக, பண்பின் முறைகாட்டும் நெறிநின்று கம்பன் இம் மாற்றம் ஏற்றுள்ளான் !

14. பலே, அதிபலே

வான்மீகி

ஸர்க்கம் 22: ஒன்றரை யோஜனேதூரம் சென்று ஸரயூவின் தென்கரைக்கு வந்தவுடன் கௌசிகர், ''இந்த ராஜகுமாரர்கள் வெகுதூரம் நடந்து வழக்கமில்லாதவர்கள்; காலம் தவருமல் புசிப்பவர்கள்; சிறுவர்கள்; வெகுதூரம் நடந்திருக்கின்ருர்கள்; போஜனவேளே நெருங்கிவிட்டது. பசி, தாகம், சிரமம், தாபம் முதலியவை இல்லாமல் இவர்களேச் செய்யவேண்டும்'' என்று இனிமையான குரலுடன், ''ராம! குழந்தாய்! தர்மசிந்தை யுள்ளவனே! தாமதமில்லாமல் ஆசமனம் செய். பலே, அதிபலே என்ற வித்யைகளேப் பெற்றுக்கொள். அவைகளே ஜபித்தால் பசி, தாகம், தேகசிரமம், தாபம், ரூபவிகாரம் முதலிய கெடுதிகள் நேராது. அஜாக்கிரதையாகயிருந்தாலும், அசுத்தனுயிருந்தாலும், தூங்கினுலும் ராக்ஷஸர்களாலும், உபத்திரவம் நேராது. புஜபலம், ஸாமர்த்தியம், அழகு, ஸௌபாக்கியம், திறமை, வஸ்துக்களின் உண்மையை அறிவது, நிச்சயிப்பது, தடையில்லாமல் பதில் சொல்வது முதலிய உத்தம குணங்களில் மூவுலகத்திலும் உனக்கு இணேயானவன் இரான். இந்த வித்யைகள் பிரஹ்மாவால் ஸிருஷ்டிக்கப்பட்டவை; ஸகல ஞானமும் உண்டாகுமிடம்; அழியாத கீர்த்தியைக் கொடுக்கக் கூடியவை; தபோ பலத்தால் ஸம்பாதிக்கப்பட்டவை இவைகளேத் தரிக்கக்கூடிய பலகுணங்கள் உன்னிடத்தில் விளங்குகின்றன. உண்மையில் உன்னுலேயே உண்டாக்கப்பட்டவை; இவைகளே நீயே பெறத்தகுந்தவன்; நீ என்னிடத்திலிருந்து, இவைகளேப் பெற்ற பிறகு பலவிதமாய் வளரும். ஆகையால் சீக்கிரமாய் இவைகளேப் பெற்றுக்கொள்'' என்ருர்.

மஹா பராக்கிரமசாலியான ராமன் ஆசமனம் செய்து சுத்தராய் மலர்ந்த முகத்துடன், பிரஹ்மக்ஞானியான விசுவா மித்திரரிடமிருந்து அந்த வித்யைகளே உபதேசம் பெற்று, ஆயிரம் கிரணங்களுள்ள ஸூரியன் சரத் காலத்தில் விளங்குவதுபோல் பிரகாசித்தார்.

கம்பன்

எரிந்து எழு கொடுஞ்சுரம் இனையது எய்தலும்,
.........என மனத்தின் நோக்கினுன்.

தாடகை வதை : 60/17

நோக்கினன் அவர்முகம்; நோக்க, நோக்குடைக்
.........அவை அவர்உள்ளத்து உள்ளினுர்.

தாடகை வதை : 60/18

உள்ளிய காலையின் ஊழித் தீயையும்
.........முனிவனை வணங்கிக் கூறுவான்!

தாடகை வதை : 60/19

மாற்றம்

1 வான்மீகத்தில் அயோத்திநகர் கடந்து ஒன்றரை யோசனை தூரத்தில் சரயூ நதிக்கரையிலேயே பலை, அதிபலை என்ற மந்திரங்கள் உபதேசிக்கப்படுகின்றன. இராம இலக்குவர்களுக்குப் பசி, தாகம், சிரமம், தாபம் இல்லாதிருக்கச் செய்வதற்காகவே விசுவாமித்திரர் இம் மந்திரங்களை இராமனுக்கு உபதேசிக்க முடிவுற்ருர்.

கம்பனில் அம் மந்திரங்கள் சரயூநதியைத் தாண்டிச் சென்று காமன் ஆசிரமத்தில் தங்கி ஓய்வெடுத்து, மறுநாள் புறப்பட்டு பாலைவனத்தில் நுழைந்தபின் உபதேசிக்கப்படுகின்றன. அந்தப் பாலைவனத்தின் எல்லையற்ற வெம்மையைச் சிறுவர் இருவரும் தாங்க முடியாது என்ற காரணத்தால் அதனைத் தாங்கும் வல்லமை தரவல்ல அம் மந்திரங்கள் உபதேசிக்கப்படுகின்றன.

ஆசிரியர் கருத்து

முனிவருடன் குழந்தைகள் புறப்படவேண்டிய சூழ்நிலை உண்டாகிவிட்டது என்ற போழ்தில், வழியில் தேவைக்கென அன்ன ஆகாரங்கள் எடுத்துச் செல்லக்கூடிய அளவிற்காகிலும் அனுப்பப்பட்டிருக்கும், சக்கரவர்த்தியின் அரண்மனையிலிருந்து. எனவே, ஒன்றரை யோசனைதூரம் சென்றவுடனேயே பசி தோன்றினும் அது தெரியாதிருக்கும்வண்ணம் மந்திர உபதேசம் தேவையில்லை. அப்படியொன்றும் அவர்கள் எடுத்துச் செல்லவில்லை

என்று கொண்டாலும் கூட, நடந்த தூரத்தையும் அப்போழ்து அடைந்திருக்கக் கூடிய சரயூ நதிக்கரையையும் எண்ணுங்கால் அப்போதைக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய பசி, தாகம், களைப்புதீர அந்நதியின் நன்னீரே சாலும்.

மேலும், அவர்கள் அடுத்து புக இருப்பதுவோ காமன் ஆசிரமம். அதற்குள்ளாக நதிக்கரையில் தங்கவேண்டிய அத்தியாவசியம் இருந்திருக்காது.

எனவேதான், கம்பன் அம்மந்திரங்களை அந்தச் சூழ்நிலையில் உபதேசிக்கப் பட்டவையாய்க் கூறாமல், தாங்கமுடியாத வெம்மை கொண்ட பாலை நிலச்சூழலில் உபதேசிக்கப் பட்டவையாய்க் கூறியுள்ளான்; அதுவும், பசிதாகம் போக்க் அல்ல, பாலையின் வெம்மைக் கொடுமையைத் தாங்கும் பொருட்டு!

பின்னாளில், இராம இலக்குவர்கள் காடு, மலையென அலைந்து திரிந்த போழ்தும்கூட, அவர்களுக்கு வழிநடைப் பயணத்தின் துயரோ களைப்போ தோன்றியதாய்த் தெரியவில்லை; ஆனால், இராமனுக்கே தாகம் எடுக்க, தண்ணீர் கொண்டுவரச் சென்ற இளையவன் அயோமுகி என்ற அரக்கியிடம் அகப்பட்டுக் கொண்ட காட்சி மட்டும் காண்கின்றோம்.

ஆக, அம் மந்திரங்களின் அதிகத்தேவையின் அடிப்படையைக் காரணமாகக் கொண்டு கம்பன் இந்த மாற்றத்தைப் புகுத்தியுள்ளான்.

மாற்றம்

2 மந்திரங்களை வான்மீகியின் விசுவாமித்திரர் உபதேசிக்க எண்ணியது முதல், அவை உபதேசிக்கப்பட்ட கடைசிநேரம் வரை இராமன் ஒருவனையே முனிவர் ஏற்கின்றார்.

கம்பனின் விசுவாமித்திரரோ இராம இலக்குவர் இருவரையும் ஒரு நிலையில் வைத்தே அம் மந்திரங்களை உபதேசிக்கின்றார்.

ஆசிரியர் கருத்து

வான்மீகத்தில். இலக்குவனைப் பற்றிய குறிப்பே இல்லை, இம் மந்திரங்கள் பற்றிய செய்தியில். அவனுக்கும் இம்மந்திர உபதேசம் கொடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. என்னதான் இலக்குவன் இராமனுடனேயே இருப்பான் என்றுகொண்டாலும் இத்தகைய உபதேசங்கள் அவரவர்க்குத் தனித்தனியே தரப்பட வேண்டியவை அல்லவா? அப்பொழுதுதானே மந்திரங்கள் உபதேசிக்கப்பட்ட காரணம் எதுவானாலும் இலக்குவனும் அதன் பலனை அனுபவிக்கக்கூடும்!

எனவேதான் அவ்விருவரையும் ஒருநிலையில் வைத்தே அம்மந்திர உபதேசத்தை இருவரும் தனித்தனியே எய்துவதாகச் சொற்களைப் பெய்துள்ளான். 'இவர் பெரிது அளவு இவ்வாற்றலை பொருந்தினர் ஆயினும், பூவின் மெல்லியர், வருந்துவர்' என்றும் 'நோக்கினன் அவர்முகம், கோக் குமரரும் அடிகுறுக, அவை அவர் உள்ளத்து உன்னினர்' என்றும் பன்மையிலேயேப் பாடியுள்ளான், கம்பன்.

ஆக, மந்திரஉபதேசத்தின் தேவை இருவருக்குமே உண்டு என்பதை உணர்ந்து அதற்கேற்ப இம் மாற்றத்தைக் கைக் கொண்டுள்ளான், கம்பன்!

15. இன்னமும் உறங்குதியோ இராமா!

வான்மீகி

ஸர்க்கம் 23: விடியற்காலையில் கௌசிகர் எழுந்து, ராஜகுமாரர்களை எழுப்ப அவர்கள் தூங்குமிடத்திற்கு வந்தார். ஸுகமாய் நித்திரை செய்யும் ராமனுடைய திருமுக மண்டலத்தின் காந்தியைப் பார்த்தார். .... "நித்திரை சமயத்தில் உன் ஸௌந்தரியத்தைப் பார்த்து மகிழ்ந்தேன். விழித்த பிறகு விளங்கும் லாவண்யத்தைப்பார்க்க விரும்புகின்றேன். மேலும், ஸர்வேசுவரனான நீ ஸகல தர்மங்களையும் ஏற்படுத்தி ஜீவ கோடிகளை அனுஷ்டிக்கச் செய்கிறாய். நீயும் செய்து காட்ட வேண்டுமல்லவா? அவைகளைக் காலத்தில் நீயே செய்யாவிட்டால் பிறருக்கு சிரத்தையிராது. காலை ஸந்தியாவந்தனம் முதலிய நித்திய கர்மங்களைச் செய்ய எழுந்திருக்க வேண்டும்" என்றார்.

.... வெகு கம்பீரமாய் முனிவர் இப்படிச் சொல்ல ராஜகுமாரர்கள் நித்திரை தெளிந்து, ஸ்நானம் செய்து, அர்க்யம் காயத்ரீ ஜபம் முதலிய காலைக்கிரியைகளை முடித்தார்கள்.

கம்பன்

என்று, அவ்அந்தணன் இயம்பலும், வியந்து,.........
.........ஓர் சுடு சுரம் குறுகினர்.

தாடகை வதை: 58/4

மாற்றம்

வான்மீகியின் விசுவாமித்திரர் உறங்கிக் கொண்டிருந்த இராம இலக்குவரை, "நீயும் (நீ ஏற்படுத்திய தர்மங்களை) செய்து காட்ட வேண்டுமல்லவா? அவைகளைக் காலத்தில் நீயே செய்யாவிட்டால் பிறருக்கு சிரத்தையிராது" என்று கூறி எழுப்புகின்றார்.

"உறங்கியெழுந்து சென்றனர்" என்று கம்பன் கவிக் கூற்றாக அமைத்து நிற்கின்றான்.

ஆசிரியர் கருத்து

ஒரு காவிய நாயகனின் அன்றாடச் செயல்களை இயற்கையான நிகழ்ச்சிகளை—உண்ணுதல் உறங்குதல் முதலாயவற்றை—வர்ணித்தல் இலக்கிய மரபில் ஒதுக்கப்பட்டவை.

இராம இலக்குவர்கள் விசுவாமித்திரருடன் புறப்பட்டு வந்த பிறகு மேற்கொண்ட முதலுறக்கமே சரயூ நதிக்கரையில் தான் எனத் தெரிகின்றது! ஒன்றரை யோஜனை தூரம் நடந்து வந்த களைப்பும், இயற்கைச் சூழலின் இதமும் அவர்களை நெடு நேரம் உறங்க வைத்து விட்டதாகவே கொள்வோம். அந்த உறக்கத்திலிருந்து இராம இலக்குவர்களை எழுப்பும் செய்கைக்கு முக்கியத்துவம் தந்து வார்த்தைகளை வளர்க்க வேண்டுமா? அப்படியே ஏதேனும் சொல்லியெழுப்பும் காட்சியாக அமைக்க வேண்டுமாயினும் இராமனிடம் — காவிய நாயகனிடம், இல்லை யில்லை, விசுவாமித்திரர் இராமன் உறங்கும் பொழுதே கண்டு ஆனந்தித்த முகப்பொலிவு மிளிர்ந்த திருமாலினிடம்—குறைகண்டு குறிப்பிட்டுக் காட்டும் பாங்கிலா சொற்கள் அமைதல் வேண்டும்? "நீயும் செய்து காட்ட வேண்டுமல்லவா? அவைகளைக் காலத்தில் நீயே செய்யாவிட்டால் பிறருக்கு சிரத்தையிராது" என்றெல்லாம் விசுவாமித்திரர் எச்சரிப்பதைப் பார்த்தால் இராம இலக்குவர்கள் வசிட்டரின் மேற்பார்வையில் இருந்த போழ்து காலைக் கிரியைகளை ஒன்றும் அறிந்து கொள்ளாதவர்கள் போலேயும், அறிந்திருப்பினும் வேளாவேளையில் அவற்றை ஆற்றுதது போலவும் அன்றோ தொனிக்கின்றது! இராமன் திருமாலின் அவதாரமென்பது இந்த முனிவருக்குத்தான் தெரியுமேயன்றி உலகம் முழுவதற்குமா தெரிந்துவிட்டது? 'நீயே செய்யாவிட்டால்...' என்றெல்லாம் ஏன் தெளிவுறுத்த வேண்டும்?

இராமன் திருமாலின் அவதாரமென்பதை உணர்ந்திருந்த விசுவாமித்திரர் அவனுக்குத் திருப்பள்ளியெழுச்சி பாடி எழுப்பினர் என்றது போன்ற வர்ணனைக் குறிப்பு மட்டும் கொண்டிருந்தா லாவது அவருடைய பக்தியைக் காட்டியதாய் இருக்கும்.

இத்துணையையும் எண்ணிப் பார்த்தான் கம்பன். தன் காவியத்தலைவனின் அன்றாட வாழ்க்கைச் செயல்களைக் குறிப்பிட வேண்டாம் எனக் கருதியும், உத்தம புருஷனைக் குறைகூறும் வகையிலான வார்த்தைகளால் எழுப்ப வேண்டாம் என்று கருதி யும் தன் காவியத்தில் உறக்கக் காட்சிக்கு இடம் கொடாது "உறங்கியெழுந்து சென்றனர்; ஒரு பாலைவனத்தை அடைந்தனர்" எனப்பாடி முடித்து விட்டான்.

16. தாடகையின் வரலாறு

வான்மீகி

ஸர்க்கம் 25: ஸுகேது வென்ற யக்ஷன் வெகுகாலம் புத்திரனில்லாமல் வருந்தி, கடுந் தவத்தாலும் சுத்தமான நடத்தையாலும் பக்தியாலும், வீரியத்தாலும் பிரஹ்மாவைத் திருப்தி செய்து, அவருடைய அனுக்ரஹத்தால் தாடகையென்ற பெண்மணியையும் அவளுக்கு ஆயிரம் யானை பலத்தையும் வரமாகப் பெற்றான். ஆனால், புத்திரனை அளிக்கவில்லை. அவளுக்கு யௌவனம் வந்து ரூப லாவண்யத்தில் நிகரற்று விளங்க, ஜம்பனுடைய மகனான ஸுந்தனுக்கு அவளைப் பாரியையாய் ஸுகேது கொடுத்தான். அவளுக்குப் பிறந்த மாரீசன் ஒருவராலும் எதிர்க்க முடியாதவன்; பிற்காலத்தில் சாபத்தால் ராக்ஷஸத் தன்மையை அடைந்தான். அகஸ்தியருடைய சாபத்தால் ஸுந்தன் கொல்லப்பட்ட பொழுது தாடகையும் மாரீசனும் பழிவாங்க விரும்பி, கர்ஜித்துக்கொண்டு விழுங்க அதிவேகமாய் ஓடிவந்தார்கள். அதைக்கண்ட அகஸ்தியர் கோபத்துடன், ''நீ இந்த யக்ஷ தேகத்தை விட்டு ராக்ஷஸர்களின் விகாரமான சரீரத்தை எடுக்கக் கடவாய்; நீயும் உன் மகனும் மனுஷ்யர்களைத் தின்றுகொண்டு ராக்ஷஸர்களாவீர்கள்'' என்றார். உடனே, அவர்களுக்கு அந்தப் பயங்கரமான ரூபம் கிடைத்தது. அகஸ்தியரை ஒன்றும் செய்யமுடியாமல் அவர் வஸிக்கும் தேசத்தை மாத்திரம் அழித்து அங்குள்ள பிராணிகளிடத்தில் தன் கோபத்தைச் செலுத்துகிறாள்.

கம்பன்

என்றலும், இராமனைநோக்கி, 'இன்உயிர்
.........உறுதிகேள்' என.

தாடகை வதை: 61/21

'மண் உருத்து எடுப்பினும்,.........
பெண் உருக் கொண்டெனத் திரியும் பெற்றியாள்.

தாடகை வதை: 61/22

'பெருவரை இரண்டொடும்,.........
.........தோற்றத்தள் மேனி மானுமே.

தாடகை வதை: 61/23

சூடக அரவுஉறழ் சூலக் கையினள்;
.........அச்சழக்கி நாமமே.

தாடகை வதை : 61/24

உளப்பரும் பிணிப்பரு உலோபம்.........
.........மருத வைப்பு அழித்து மாற்றினான்.

தாடகை வதை : 61/25

இலங்கை அரசன்பணி அமைந்து,.........
.........நனிகொன்று திரிகின்றாள்.

தாடகை வதை : 61/26

முன்உலகு அளித்து முறைநின்ற உயிர்எல்லாம்
.........அனைத்தையும் வயிற்றின் இடும்' என்றான்.

தாடகை வதை : 62/27

மாற்றம்

வான்மீகி, அகஸ்தியரால் தாடகை சபிக்கப்பட்ட வரலாற்றை முழுதுமாயும் தெளிவாயும் கூறியுள்ளார்.

கம்பனோ, அவ் வரலாற்றைக் குறிப்பாகக்கூட காட்டவில்லை!

ஆசிரியர் கருத்து

தாடகையின் தோற்றத்திலேயும், பலத்திலேயும், வன்மையிலேயும் வான்மீகியின் வர்ணனைகளோடு கம்பன் வர்ணனைகளும் ஒப்ப உள்ளன. ஆனாலும் மேலே குறிப்பிட்ட மாற்றமும் அமைந்துள்ளது.

ஸுகேது தவமிருந்து பெற்ற பெண்மணியாய்த் தோன்றியவள் என்பதால் தாடகை பிறவிச் சூழ்நிலையால் நல்லவள். உருவ அழகினால் மிக்கவள். அப்பேற்பட்டவளுக்கு ஆயிரம் யானை பலம் வந்தது எப்படி? அவளாக, தவமிருந்து வேண்டிப் பெற்றாளா! பிரம்மா அத்தனை பலத்தை ஒரு பெண்பால் ஏன் புகுத்தினான்? தன் கணவனுக்கு ஏது காரணம் பற்றியேனும் அவன்பால் குறையிருப்பினும் கூட தீங்கு நேர்ந்தால் அத்தீங் கிழைத்தாரைக் கோபித்து, சபித்து நிற்றலே எந்தச் சாதாரண

பெண்ணிற்கும் உண்டான தன்மையல்லவா ! அப்படியிருக்க, தன் கணவனையே கொன்றுவிட்ட அகத்தியரைச் சினந்து அவர்மேல் தன் மகனைத் துணையாகக் கொண்டு பாய்தல் இயற்கையாய் துன்பப்பட்டவர் செய்திடும் சாதாரண செய்கை தானே ! அதிலும் அவளுக்கு ஆயிரம் யானை பலம் அமைந்திருந்ததென்றால் கேட்கவா வேண்டும் !

இந்த மனோநிலையும், சினச் சூழ்நிலையும் அமைந்த போழ்து அனைத்தும் அறிந்த அகத்தியர் அவளின் பலத்தைக் குறைக்கச் சபித்திருக்க வேண்டும் ; அல்லது அவர்களால் தனக்கு ஏதும் ஊறு விளையா வண்ணம் தன் தவத்தின் பயனை முன் நிறுத்திக் கொண்டிருக்க வேண்டும்.

அதனை விடுத்து யக்ஷப் பெண்மணியை - தன்னால் விதவை யாக்கப்பட்ட பெண்ணை - அரக்கியாக மாறும்படி சபித்ததேனோ? அரக்கியாவதோடு, 'நீயும் உன் மகனும் மனுஷ்யர்களைத்தின்று கொண்டிருக்கக் கடவீர்' என்று வேறு திட்டவட்டமாகக் கூறியதும் ஏனோ? அந்த சாபத்தின் பயனாய் அன்றோ அவள் இந்த வனத்தில் வசித்துக் கொண்டு அனைவரையும் வதை செய்கின்றாள் ! இதனில், அவளுடைய சுயமான பிழையில்லையே! எனவே, இவளின் கொடூர குணத்தை மட்டும் மாற்றிடலாம் என்று இராமன் கருதித் தாடகையை வதைக்காமல் அவனுடைய பெருங்குணத்தால்—அருட்தன்மையால் — விட்டிடக்கூடும் என்கின்ற நியாயத்தை உணர்ந்தான்; கம்பன். இந்த தர்ம சங்கடத்திற்கே ஈண்டு இடம் கொடுக்கவேண்டாம் என்று கருதினான். அதனால் அகஸ்தியரால் அடையப்பெற்ற சாப வரலாற்றைக் கூறாமல் விடுத்திட்டான்.

என்றாலும், படிப்பவர்க்குத் தாடகையின் பேரில் ஒரு வெறுப்புணர்ச்சி தோன்ற வேண்டுமே, கதைப்போக்கினில், என்று சிந்தித்தான். அவளை இராவணனுடைய ஆள் எனக் குறிப்பிட்டுக் காட்டி, தாடகையின்மேல் நமக்கு ஒருவித காழ்ப்புணர்ச்சியை உண்டாக்கி விட்டான் !

ஆக, இம்மாற்றம் கதைப்போக்கினை — கதைப்போக்கின் வேகத்தை — குறைக்காமல் மனோதத்துவத்திற்குப் பொருந்த, நடைமுறை சூழ்நிலைக்கொப்ப ஏற்றுக் கொண்ட தேவையான நல்லதொரு மாற்றமாய் நிற்கின்றது !

17. பெண்ணைக் கொல்வதா?

வான்மீகி

ஸர்க்கம் 25: ''அஸ்திர சஸ்திரங்களைக் கற்று, தகுந்த சூரனிடத்தில் முதல் முதல் அவைகளை உபயோகிக்காமல், கேவலம் ஒரு ஸ்த்ரீயிடத்தில் உபயோகிப்பதில் என்ன கீர்த்தி? மேலும், க்ஷத்திரியன் ஸ்த்ரீயைக் கொல்வது மஹா பாபமல்லவா என்று தயங்காதே. நான்கு வர்ணத்தார்களின் க்ஷேமத்திற்காக அரசர்கள் இவ்விதமான காரியங்களைச் செய்யவேண்டியிருக்கும். பிரஜைகளையும் ஸாதுக்களையும் ரக்ஷிக்க அவர்கள் கொடிய காரியங்களையும் அபவாதங்கள் வரக்கூடிய செய்கைகளையும் பாபங்களையும் செய்தே தீரவேண்டும். ராஜ்ய பாரத்தை ஒப்புக்கொண்டவர்கள் இப்பழமையான தர்மத்தையே நடத்தி வருகிறார்கள். மேலும். இவளைக் கொல்வது அதர்மமல்ல. இவளிடத்தில் தர்மமே கிடையாது. முன்பு தானவ ராஜனான விரோசனனுடைய புத்திரி மந்தரை, பூமியை அழிக்க ஆரம்பித்தாள். அதற்காக இந்திரன் அவளைக் கொல்ல வில்லையா? பிருகு மஹரிஷியின் பார்யையும் சுக்ராசாரியாருடைய தாயுமான க்யாதி இந்திரனைக் கொல்ல முயன்ற பொழுது, விஷ்ணு அவளைச் சக்கரத்தால் நாசம் செய்யவில்லையா? இன்னும் பல மஹா தர்மாத்மாக்களும் புருஷ சிரேஷ்டர்களுமான ராஜகுமாரர்கள், அதர்மத்தையே செய்துவந்த ஸ்திரீகளைக் கொன்றிருக்கிறார்கள்'' என்றார் விசுவாமித்திரர்.

ஸர்க்கம் 26: இப்படி ஆழ்ந்த அர்த்தங்களுடன் விசேஷ தைரியத்தைக் கொடுக்கும் வார்த்தைகளை கௌசிகர் சொல்ல, தாசரதி அவரைக் கைகூப்பி வணங்கி, ''குருநாத! என்னைத் தங்களுடன் அனுப்பினபொழுது, முனிசிரேஷ்டருடைய ஆக்ஞையைத் தடை சொல்லாமல், ஸந்தேகப்படாமல் உடனே கீழ்ப்படிய வேண்டும் என்று வசிஷ்டர் முதலியவர்களுக்கு எதிரில் என் பிதா உத்தரவு செய்திருக்கிறார். அது எனக்குப் பிரமாணம். மேலும், குசிக வம்சத்தில் பிறந்த பிரஹ்ம ஞானியான தாங்கள் சொல்லும் வார்த்தையிலும் பாப ஸம்பந்தமுண்டோ? கேவலம் புண்யமாயும் ஸகல புருஷார்த்தங்களுக்கும் ஒத்துமிருக்கும் பசுக்களுக்கும் பிராம்மணர்களுக்கும் இந்தத் தேசங்களுக்கும் பரம க்ஷேமத்தை உண்டு பண்ணவேண்டி ஸ்த்ரீ வதம் செய்ய நிச்சயித்தேன்'' என்று கோதண்டத்தை வளைத்து நாணோசை செய்தார்.

தாடகை ஓசைகேட்ட இடத்தை நோக்கி ஓடி வந்தாள். ராகவன், 'லக்ஷ்மணா! இவளுடைய சரீரமும், முகமும் எவ்வளவு விகாரமாயும் அளவுக்கு மிஞ்சியும் இருக்கின்றன. மாயா பலத் திற்கோ எல்லையில்லை. ஸ்தைரியமில்லாதவர்கள் இவளைப் பார்த்த உடன் ஹிருதயம் வெடித்து இறப்பார்கள். இவளை ஜயிப்பது எளிதல்ல. துஷ்டையானாலும் பெண்ணாகையால் இவளைக் கொல்ல மனம் வரவில்லை. காது மூக்குகளை அறுத்து, கைகால்களை வெட்டி, ஆகாசத்தில் ஸஞ்சரிக்கும் சக்தியையும் பிறரை ஜயிக்கும் பலத்தை யும் அழித்து, இங்கே வராமல் திருப்பிவிடுகிறேன். இந்தத் தேசங் களுக்கு நேர்ந்த கஷ்டமும் நீங்கும்; குருவின் ஆக்ஞையும் நிறை வேறும்; ஸ்த்ரீயைக் கொன்ற தோஷமும் தொடராது. அந்தக் காரியம் சூரர்களுக்குத் தகாது'' என்றார்.

அவள் (தாடகை) பலவிதமாகத் தோன்றித் திடீரென்று மறைந்து, மாயையால் அவர்களை மயக்கி, கல்மாரி பொழிந்து கோரமாய் இரைந்துகொண்டு எங்கும் ஸஞ்சரித்தாள். எப்புறத் திலும் கல்மழை பெய்யக் கண்டு, கௌஸிகர் இவளைக் கொல்லத் தகுந்த காரணம் இப்பொழுதே நேர்ந்ததென்று, 'ராம! இந்தப் பாவியிடத்தில் நீ இரக்கம் வைத்தது போதும். இவளோ பரம துஷ்டை; யாகங்களைக் கெடுக்கிறவள்; ஸந்தியா காலத்தில் ராக்ஷஸர்களை ஜயிக்க முடியாது. இவளுடைய பலம் மாயையால் வரவர வளர்கிறது. ஸந்தியா காலத்திற்கு முன் இவளைக் கொல்ல வேண்டும் என்று எச்சரித்தார். ஒரு திவ்யாஸ்திரத்தால் ராமன் அவளை மார்பில் துளைக்க, அவள் கீழே விழுந்து உயிரை விட்டாள்.

கம்பன்

கைவரை எனத் தகைய.........
.........நெருப்பு எரிய வந்ததென, வந்தாள்.

தாடகை வதை : 62/29

மேகம் அவை இற்று உக விழித்தனள்;.........
.........எறிவென்' என்று எதிர் அழன்றாள்.

தாடகை வதை : 63,35

அண்ணல் முனிவற்கு அது கருத்து... ...
.........பெருந்தகை நினைந்தான்.

தாடகை வதை : 63/36

வெறிந்த செம்மயிர் வெள் எயிற்ருள்.........
.........நான்மறை அந்தணன் கூறுவான்;

தாடகை வதை : 63/37

'தீது என்றுள்ளவை யாவையும் செய்து,.........
.........மணிப் பூணிஞய்!

தாடகை வதை : 63/38

'நாண்மையே உடையார்ப் பிழைத்தால்.........
... ...அது ஆரிடை வைகுமே?

தாடகை வதை : 63/39

'மன்னும் பல்உயிர் வாரி,.........
.........எளிமையின் பாலதே!

தாடகை வதை : 64,43

ஈறுஇல் நல்அறம் பார்த்து.........
.........எதிர் அந்தணன் கூறிஞன்.

தாடகை வதை : 64 44

ஐயன் அங்கு அது கேட்டு, ...
.........அறம் செய்யும் ஆறு' என்ருன்.

தாடகை வதை :64 45

மாற்றம்

இராமன், விசுவாமித்திரரின் ஆணைக்குக் கட்டுப்பட்டுத் தான் தாடகையைக் கொன்ருனேயன்றித் தன்னிச்சையாகவும் அல்ல, முழுமனத்தோடும் அல்ல என்பதை வான்மீகி — கம்பன் இருவருமே வெளிப்படுத்துவதில் வேற்றுமை இல்லை. ஆனுல், அதற்கான காலம், சூழ்நிலை, சொல்முறை, இராமன் தன்னுடைய உள் மனத்தின் உண்மை உணர்வை எடுத்துரைத்தல் ஆகியவற்றில் மாற்றங்களைக் காண்கின்ருேம்.

1 விசுவாமித்திரரும் இராமனும் தாடகை பற்றி உரையாடி, ஒரு முடிவை இராமன் எடுத்துக்கொண்டபின் கோதண்டத்தை வளைத்து நாணேசை செய்தான். இந்தச் சத்தத்தைக் கேட்டு, சினந்து ஓடிவந்தாள், வான்மீகியின் தாடகை.

இராமன், 'தாடகை எங்குள்ளாள்?' என விசுவாமித்திரரைக் கேட்கின்றான். இந்த மலையில்தான் அவள் இருப்பது என்று முனிவர் கூறி முடிக்கும் முன்பே, நெருப்பு மலைவந்ததென அங்கு நின்றாள், கம்பனின் தாடகை.

ஆசிரியர் கருத்து

'துஷ்டையானாலும் பெண்ணானதால் இவளைக் கொல்ல மனம் வரவில்லை' என்று பின்னடி சொல்லக் கூடிய, சாந்த சுபாவமுள்ள, இராமன், தூண்டிவிடத் தாடகை சினந்து வந்தாள் (வில்லோசை கேட்டு) என்று கூறுவதைக் காட்டிலும், அவள் தன் இயற்கையான சினம் பொங்க, தன் எல்லைக்குள் வந்தவர்களை எதிர்த்து வந்தனள் எனக் கூறலே இருவர்தம் இயற்கைக் குணங்களுக்கும் ஒத்தது எனக்கருதி இம் மாற்றத்தைக் கம்பன் செய்துள்ளான்.

மாற்றம்

2 தாடகையின் வரலாற்றைச் சொல்லிக்கொண்டு வரும் பொழுதே, அவள் இவர்களின் முன்னால் வருதற்கு முன்னதாகவே, இராமன் பெண்ணைக் கொல்லத் தயங்குவான் என அனுமானித்துக் கொண்டு, அவளைப் பெண் என்பதால் கொல்லாமல் விடக்கூடாது என்றெல்லாம் தூபம் போடுகின்றார், வான்மீகியின் விசுவாமித்திரர்.

தாடகை, சினச் சொற்களுடன் முன்தோன்றியும், இராமன் அவளைக் கொல்ல அம்பெய்யாது நிற்கின்றான்! அப்போழ்து 'அவளைப் பெண்என்று கருதக்கூடாது; ஆண்மை மிகுந்த கொடியவள் அவளைத் தயங்காது கொன்றுவிடு' என ஆணைபிறப்பிக்கின்றான் கம்பனின் விசுவாமித்திரர்.

ஆசிரியர் கருத்து

போர்ச்சூழல் தோன்றும் முன்பே, அனுமானத்தால் பொதுவாக நெறிமுறைக்கு முரணான ஒன்றைச் சொல்லி தெம்பேற்றுவதினும், போர்ச்சூழலில் மனம் பேதலித்த நிலையில் உள்ளபோழ்து' ஆணையிடும் முறையில் எடுத்துச்சொல்லி செயல்படுத்தச் செய்வதே வீரியத்தையூட்டும் என்னும் மனோதத்துவ அடிப்படையில் இம் மாற்றத்தைப் புகுத்தியுள்ளான் கம்பன்!

மாற்றம்

3 தீயபெண்ணைக் கொல்லுதல் தவறல்ல என்று நிரூபிப்பதற்காகப் பல பெண்கள் கொல்லப்பட்ட, முன் நிகழ்ச்சிகளை எடுத்துக் காட்டுகின்றார், வான்மீகியின் விசுவாமித்திரர்.

கம்பனின் விசுவாமித்திரரோ, முன் நிகழ்ச்சி எதனையும் ஆதாரமாகக் காட்டவில்லை.

ஆசிரியர் கருத்து

வான்மீகத்தில் காட்டப் பெறும் பெண்கொலைகள் தெய்வத்தாலும், தேவர்களாலும், மன்னர்களாலும் நடத்தப் பெற்றவை. இந்த மூன்று நிலைகள் ஒன்றிலும் அமையாதவன் இராமன்; திருமாலின் அவதாரமென்றாலும், இராமன் தன்னைத் தான் அவ்வாறு உணராதவன்—அல்லது, உணர்ந்ததை வெளிக் காட்டிக் கொள்ளாதவன்; சக்கரவர்த்தியின் மகன் என்றாலும் இளவரசுப் பட்டமும் கட்டப்படாதவன்!

ஆகவே, அம் முந்நிலையரின் முன் மாதிரிகள் இராமன், பெண்ணைக் கொல்வதற்கு நேராக ஒவ்வாதன என விட்டிட்டான், கம்பன்!

மாற்றம்

4 தாடகையைக் காணும் முன்பே விசுவாமித்திரரின், விசேஷ தைரியத்தைக் கொடுக்கும் வார்த்தைகளைக் கேட்டே, 'ஸ்த்ரீவதம் செய்ய நிச்சயத்தேன்' என்று முனிவரிடம் உறுதிகூறி, கோதண்டத்தை வளைத்து நாணேற்றினான், வான்மீகியின் ராமன். ஆனால், அவள் எதிர்ப்பட்டவுடன், 'துஷ்டையானாலும் பெண்ணானகயால் இவளைக் கொல்ல மனம் வரவில்லை' என்கின்றான், முன்னுக்குப் பின் முரண்படும்படி! அதுவும், யாரிடம் கூறுகின்றான்? தன் தம்பி இலக்குவனிடம்!

கம்பன் இந்தக் காட்சிகளை அமைக்கவில்லை.

ஆசிரியர் கருத்து

இந்த, முன்னுக்குப் பின் முரணும் தன்மையையோ, பெரியவர்களிடத்து வாக்குறுதி கொடுத்துவிட்டு அதனை மீறுவதற்

குரிய சமாதானங்களைத் தன்னினும் சிறியவர்களிடத்தில் விளக்கித் தப்பிக்கப் பார்க்கும் தெளிவின்மையையோ ஒரு காவிய நாயகனின் பெரும் பண்புகளுக்கு இழுக்குண்டாக்கும் எனக்கருதிக் கம்பன் அக்காட்சிகளை விட்டிட்டான்!

மாற்றம்

5 வான்மீகியின் விசுவாமித்திரர், 'ஸந்தியா காலத்தில் ராக்ஷஸர்களைக் கொல்ல முடியாது; எனவே, தாடகையை ஸந்தியா காலத்திற்கு முன்பே கொல்' என எச்சரித்தார்' இராமனை.

கம்பனின் விசுவாமித்திரர், 'கோறி' என ஆணை யிட்டாரேயென்றாலும், காலத்தின் காரணம் ஒன்றும் கூறவில்லை.

ஆசிரியர் கருத்து

இராமன் திருமாலின் அவதாரமென்றபின் — அவனும் தாடகையைக் கொல்வதென்று முடிவெடுத்தபின்—அச்செயலுக்கு எக்காரணம் கொண்டும் இயலாமை உண்டாகக்கூடும் என்ற வகையில் மற்றவர்களோடு ஒப்புநோக்கிப் பேசுதல் அவ்வளவு சீரியதாகவும், தேவையானதாகவும் கம்பனுக்குத் தோன்றவில்லை. எனவே, காலம் காட்டி, அதன் காரணம் காட்டிநின்ற வான்மீகி யினின்றும் மாறுபட்டு நின்றிட்டான்!

18 மாதவனின் மந்திராஸ்திரங்களும் மாவலியின் மனவலியும்

வான்மீகி

ஸர்க்கம் 27, 28: இவ்விரு ஸர்க்கங்கள் முழுமையிலும் பலவித அஸ்திரங்களையும், உபஸம்ஹாரங்களையும் வெகு விரிவாக எழுதிச் செல்கின்றார், வான்மீகி,

கம்பன்

வேள்வி: 66/1-3 இராமன், தெய்வ படைக்கலங்கள் பெற்றமையைக் கம்பன், மூன்று பாடல்களின் சில வரிகளில் சொல்லி முடித்து விடுகின்றான்.

மாற்றம்

அஸ்திரங்களின் தன்மையை வெகு அதிகமாக விளக்கு கின்றார், வான்மீகி.

கம்பர், தெய்வப் படைக்கலங்கள் பற்றிச் சுருக்கமாகக் குறிப்பிடுகின்றார்,

ஆசிரியர் கருத்து

ஆம்; அத்துணை அஸ்திரங்களின் பெயர்களையும். பயன் களையும். அவற்றைப் பிரயோகிக்கும் முறைகளையும் எழுதுவதால் படிப்போர் என்ன நுணுக்கங்களைப் புரிந்துகொண்டு விடமுடியும்; வீணில் அதனை விளக்குவதைக் காட்டிலும் மக்களுக்குத் தேவை யான அறிவுரைகள் வழங்க வல்ல அடுத்த பிரிவாகிய மாவலியின் வரலாற்றில் அதிக நெறிமுறை விளக்கம் தரலாம் என்று கருதி மாதவன் விசுவாமித்திரர் ஒப்படைத்த பல மந்திர அஸ்திரங்களை அதிகம் வளர்க்காது விட்டிட்டான், கம்பன்.

வான்மீகி

ஸர்க்கம் 29 : அப்படியே ஹரி அதிதியிடத்தில் வாமனராகப் பிறந்து, பலி யாகம் செய்யுமிடத்திற்குப் போய், மூன்றடி நிலத்தை வேண்டிப் பெற்றார். இரண்டடிகளால் மூவுலகையும் அளந்து, மூன்றாவதற்கு இடமில்லாமல் அவனைச் சிறையில் வைத்து, திரிலோகங்களையும் இந்திரனுடைய வசத்தில் ஒப்புவித்து ஸகல பிராணிகளுக்கும் பரம மங்களத்தைச் செய்தார்.

கம்பன்

வேள்வி : 69/20—71/37 :(18 பாடல்கள்)

மாற்றம்

1 மாவலி, குறளனுக்குத் தானம் தரமுற்படவும், வெள்ளி (சுக்கிரன்) அதனைத் தடுக்கவும், ஆனால் மாவலி மனஉறுதியுடன் தானம் செய்ததையும் வான்மீகி விரிவாக விளக்கவில்லை.

கம்பனோ, இந்தப் பதினெட்டு பாடல்களிலேயும் மாவலியின் கொடைத்தன்மை முதலியவற்றை வெகுவாய் புகழ்கின்றான். குறளனாய் வந்தவன் திருமால் என்பதையுணர்ந்த வெள்ளி, மூவடி மண் கேட்ட வாமனனுக்குத் தானம் தருவதைத் தடுக்கின்றான். அவன் எண்ணுவது உண்மையானால், 'தன் கை மேலிருந்து தானம் கொடுக்கத் திருமாலின் கை தாழ்ந்து அதனைப் பெறும் நிலையினும் தனக்குப் பெருமை தருவது வேறொன்று உண்டோ? எனத் தன் மன வலிமை காட்டி, குறுக்கிட்டவனைப் பழித்து, தானம் தர முற்படுகின்றான் என்ற நிகழ்ச்சிகளையெல்லாம், வான்மீகி சொல்லா ,திருப்பவும் கம்பன் சொல்லி விளக்குகின்றான் !

ஆசிரியர் கருத்து

அறம் வளர்க்கும் பாங்கினை வலியுறுத்தி, நிலைநாட்ட தக்க தருணம் ஈதென்றதால் கம்பன் இக்கதை விளக்க மாற்றம் மேற்கொண்டுள்ளான் !

மாற்றம்

2 வாமனனாய் வந்த திருமாலுக்கு மூன்றாம் அடியை வைக்க இடம் இல்லாமல் மாவலியைச் சிறையில் வைத்ததாக வான்மீகம் கூறுகின்றது.

மூன்றாம் அடிக்கு அலகு இலாது, அவ்வடிக்கு அன்பன் மெய் (முடி) நீட்டினான் என்கின்றான், கம்பன்.

ஆசிரியர் கருத்து

தேவர்களின் வேண்டுதலால் வஞ்சனையாக வந்தாரேனும், திருமால் தன் அருட்தன்மையில் மாறுவாரோ? தனக்கே, நிறைந்த மனவலி கொண்டு பிறர் தடுத்தும் தானம் தந்திட்ட தர்ம நெறியாளனை, நன்றியில்லாத் தன்மையோடு தண்டிப்பாரோ? எனவேதான், தன் திருவடி தீண்டுகையால் (தீக்ஷையால்) மாவலிக்கு மாலவன் மோட்சம் அளித்தான் எனப்படுகின்ற வகையிலான கதையமைப்பை வைத்தான், கம்பன்!

அன்றியும் மாவலி பிரகலாதனின் பேரன். நரசிம்மாவதாரத்தில் பிரகலாதனிடம் ''கொல்வோம். இனி உன்குலத்தோரைக் குற்றங்கள் எல்லையிலாதன செய்தாரேனும்'' என்று வாக்குக் கொடுத்தமையையும் இங்கு சிந்திக்கவேண்டும்.

19. வேள்வி காத்தான்

வான்மீகி

ஸர்க்கம் 30: உசிதமான காலத்திலும் இடத்திலும் பேசும் திறமையுள்ள வீரர்கள், 'முனிசிரேஷ்ட! ராக்ஷஸர்கள் எப்பொழுது வருவார்கள்? எப்பொழுது நாங்கள் ஜாக்கிரதையாய் ரக்ஷிக்க வேண்டும்? அந்தக்காலம் தாண்டக்கூடாதல்லவா' என்ருர்கள். யுத்தாவேசத்தால் பரபரப்புள்ள ராஜகுமாரர்களைப் பார்த்து அங்கிருந்த ரிஷிகள் மகிழ்ந்து, கொண்டாடி, 'இன்றுமுதல் ஆறு இரவும் பகலும் நீங்கள் யாகத்தை ரக்ஷிக்கவேண்டும். உங்களுடைய குரு யாக தீக்ஷை பெற்றதால் பேசமாட்டார்' என்ருர்கள்.

ராஜபுத்திரர்கள் ரக்ஷிக்கின்ருர்கள் என்ற தைரியத்தால் ரிஷிகள் பயமின்றி ஆஹுதிகளைக் கொடுத்து ராக்ஷஸர்கள் நெருங்காமலிருக்க, ரக்ஷோக்ன மந்திரங்களை ஜபித்தார்கள். அதனுல் ஸுபாஹு மாரீசர்கள் யாகசாலைக்குள் வர முடியாமல், ஆகாசத்தில் நின்று பெரிய மேகங்களைப்போல் கர்ஜித்து மாயா பலத்தால் கொழுப்படைந்து ரத்தமாரி பொழிந்தார்கள்.

கம்பன்

காத்தனர் திரிகின்ற காளை வீரரில்
.........அருங்குணத்தினுய் வருவது என்று?' என்ருன்.

வேள்வி: 72/41

வார்த்தை மாறு உரைத்திலன்......
.........அசனி அஞ்சவே.

வேள்வி: 72/42

கண்ட அக்குமரனும்,.........
.........என, தொழுது சொல்லினுன்.

வேள்வி: 73/47

'தூமவேல் அரக்கர் தம்.........
.........ஓர் கூடம் ஆக்கினுன்.

வேள்வி: 73/48

மாற்றம்

1 இராமனின் வேள்விக்கு பிற முனிவர்கள் பதில் சொல்கின்றார்கள், விசுவாமித்திரர் மௌனம் மேற்கொண்டுள்ளார் என்பதைச் சுட்டிக் காட்டுகிறது, வான்மீகம்.

கம்பனிலோ, இராமனே புரிந்து கொள்கின்றான், விசுவாமித்திரர் விடையிறுக்காமையால்.

ஆசிரியர் கருத்து

சந்தர்ப்பச் சூழ்நிலைகளைக் காணும் போழ்து இச் சிறு மாற்றம் ஏன் என்பது புலப்படவில்லை.

மாற்றம்

2 யாகசாலைக்கு மேலே ஆகாசத்தில் இருந்த வண்ணம் சுபாகு, மாரீசர்கள் இரத்த மாரி பொழிந்தார்கள், வான்மீகத்தில்

கம்பனிலோ, அவ்வாறு காட்டப்படவில்லை. அது மட்டுமல்லாமல், அரக்கர்களை அம்பெய்து வீழ்த்தினால் அவர்களுடைய கொழுப்பும், குருதியும் வேள்விச் சாலைக்குள் வீழுமேயென்று இராமன் சரங்களாலேயே முதலில் கூடாரம் அமைத்து விடுகின்றான்.

ஆசிரியர் கருத்து

எந்தக் காரணத்தால் தம் வேள்விச் சாலை கறைபட்டுத் தன் வேள்வி தடைப்படுகின்றது என விசுவாமித்திரர் மனம் நொந்து இராமனை வேள்வி காக்க அழைத்து வந்தாரோ அதே செயல் — வேள்விச் சாலையை அரக்கர் குருதி முதலியன கொண்டு அசுத்தம் செய்த அதே செயல் — இராமன் காக்கும் பொழுதும் முதலில் நடந்திடப் பின் இராம இலக்குவர்கள் அவ்வரக்கர்களைக் கொன்று மாய்ப்பதில் பயன் என்னே? வேள்விச்சாலை இப்பொழுதும் கறைப்பட்டுத்தானே போகின்றது! எனவேதான் இராமன் காவலில் வேள்விச் சாலையின் தூய்மை காக்கப் பெற்றது என்பதற்கு மாறான நிகழ்ச்சி இருக்கக் கூடாது என்று தெளிந்து கம்பன் இம் மாற்றத்தை செய்துள்ளான்.

20. மிதிலைப்பயணம்

வான்மீகி

ஸர்க்கம் 31 : ராமலக்ஷ்மணர்கள் தங்களுடைய காரியம் நிறை வேறினதால் ஸந்தோஷித்து, அன்றிரவு அங்கே தங்கிக் காலையில் எழுந்து நித்திய கர்மங்களை முடித்து, கௌசிகரும் மற்ற ரிஷிகளும் இருக்குமிடத்திற்கு வந்தார்கள். கொழுந்து விட்டெரியும் அக்னியைப்போல் ஜ்வலிக்கும் அம் முனிவரை வணங்கி, 'ஸ்வாமி! இதோ தங்களுடைய வேலைக்காரர்கள் வந்திருக்கிறோம். வேண்டி யதைச் செய்யும்படி கட்டளையிடலாம். என்ன உத்திரவு? என்று மதுரமாயும் பெருந்தன்மையுடனும் சொன்னார்கள்.

அங்குள்ள ரிஷிகள் கௌசிகருடைய அனுமதி பெற்று, "பரம தர்மவானான ஜனகர் ஒரு யாகம் செய்கிறார். பகவத் கைங் கரியமாயும் பலாபேக்ஷையின்றியும் அது செய்யப்படுவதால் பலன்களை விரும்பும் நித்திய கர்மங்களைக் காட்டிலும் மேலானது. ஆகையால் அதைப் பார்க்கப்போகிறோம். நரசிரேஷ்ட! நீயும் எங்களுடன் வந்தால் அவ்விடத்திலுள்ள அற்புதமான வில்லைப் பார்க்கலாம். ஜனகருடைய முன்னோர்களில் ஒருவருக்கு யாகத்தில் தேவர்களால் அது கொடுக்கப்பட்டது. வெகு பிரகாசமுள்ளது. அளவற்ற பலமுள்ளது. பார்க்கப் பயங்கரமானது. தேவ கந்தர்வ அஸுர ராக்ஷஸர்களும் அதை நாணேற்ற முடியவில்லை. மனுஷ்யர் களைப் பற்றிச் சொல்லவாவேண்டும்? அதன் வீரியத்தை அறிய வந்த மஹா பலவான்களான ராஜ புத்திரர்களும் அதை வளைக்க முடிய வில்லை. அங்கே போனால் ஜனகருடைய அற்புதமான யாகத்தையும் உத்தமமான வில்லையும் நீ பார்க்கலாம். தேவர்களால் யாக பலனாகக் கொடுக்கப்பட்ட அந்த வில், கந்த புஷ்ப, தூப தீப நைவேத்தியங்களால் விசேஷமாகப் பூஜிக்கப்படுகிறது" என்றார்கள்.

பிறகு கௌசிகர் ராம லக்ஷ்மணர்களையும் மற்ற ரிஷிகளை யும் அழைத்துக்கொண்டு அங்கிருந்து புறப்பட்டார்......... மற்ற ரிஷிகள் அக்னிஹோத்திர சாமான்களை வண்டியில் ஏற்றிக் கொண்டு போனார்கள். கௌசிகரிடமிருந்த பக்தியால் அங்கிருந்த மிருகங்களும் பக்ஷிகளும் வெகுதூரம் அவருடன் போயின. அவர், அவைகளை நிறுத்தி, திரும்பிப் போகச்சொல்லி, அஸ்தமனம் வரை யில் நடந்து சோண நதிக்கரையில் தங்கினார்கள். ஸ்நானம் ஸந்தியா

வந்தனம் ஜபம் அக்னி ஹோத்திரம் முதலிய நித்திய கர்மங்களை முடித்து, கௌசிகரை முன்னிட்டு நதிக்கரையில் உட்கார்ந்தார்கள். ராஜபுத்திரர்கள் அவர்களை வணங்கிக் கௌசிகருக்கு எதிரில் உட்கார்ந்தார்கள்.

கம்பன்

என்று கூறியபின்னர், அவ் எழில்.........
.........பணி என்கொல்? பணி' என இசைத்தான்.
வேள்வி; 75/57

'அரிய யான்சொலின், ஐய!.........
.........காண்டும் நாம், எழுக!' என்று, போனார்.
வேள்வி: 75/58

மாற்றம்

1 அடுத்து செய்ய வேண்டியது என்ன என்று கேட்டுத் தன் குருவான விசுவாமித்திரரின் அன்புக் கட்டளைக்குக் காத்திருக்கும் இராமனுக்கு விசுவாமித்திரரின் அனுமதி பெற்று மற்ற முனிவர்கள் பதில் சொல்லுகிறார்கள், வான்மீகத்தில்

கம்பனில், இராமனுக்கு விசுவாமித்திரரே நேரடியாக பதில் கூறுகின்றார்.

ஆசிரியர் கருத்து

வேள்விகாத்த பெருமையைப் புகழ்ந்து, இராமனை அவன் தன் குருவான விசுவாமித்திரரிடம் கேட்ட கேள்விக்கு அவரே பதில் கூறுவதுதான் பொருத்தமாகும்; பிறர் பதில்கூற முன் வருவது அவ்வளவு பெருமையானதல்ல, இராமனைக் கருதும் பொழுது என நினைந்தான் கம்பன்.

எனவே, பண்பாட்டின் அடிப்படையில் கம்பன் இம் மாற்றத்தைப் புகுத்தியது ஏற்புடைத்து.

மாற்றம்

2 இராமனிடம் முனிவர்கள் சனகரிடம் உள்ள வில்லைப் பற்றி வெகுவாக, உணர்ச்சி பூர்வமாக வர்ணிக்கின்றார்கள், வான்மீகத்தில்.

கம்பனிலோ, வில்லைப் பற்றிய சிறிய குறிப்புக்கூட இல்லை.

ஆசிரியர் கருத்து

மிதிலையை எண்ணும்போழ்தே, எண்ணற்ற பெருமைகளைக் கொண்ட சனகரின் வில்லைப் பற்றி இவ்வளவு தூரம் விளக்கம் தந்துவிட்டால் வில்லின் பெருமை மிகுந்து நிற்க, இராமனின் பெருமை சிறுத்து காணப்படக்கூடும் என்று கருதினன் கம்பன்! மறைமுகமாக வைத்திருந்து, மிதிலையில் யாகசாலையில் வில்பற்றிய பேச்சுவர, எவராலும் எடுக்கக்கூட முடியாத அதனை இராமன் தூக்கி நாணேற்றினன் என்று செப்பினல் — அந்தத் திடீர்ச்செய்தி—இராமனின் பெருமையை வில்லின் பெருமைக்கும் மேலாக உயர்த்திக்காட்டும் என உணர்ந்தான், கம்பன். ஆகவே, மிதிலைப் பயணத்தை இரண்டு பாடல்களுள்—நான்கு பா் வரிகளுள் அடக்கிவிட்டான்.

எனவே, இம் மாற்றம் இடமும் காலமும் கருதிச் செய்யப்பட்டதொன்ருகும்!

21. மிதிலைவரை மிகைக் கதைகள்

வான்மீகி

ஸர்க்கம் 32: குச நாபர்,
ஸர்க்கம் 33: பிரஹ்மதத்தர்,
ஸர்க்கம் 34: விசுவாமித்திர வம்சம்,
ஸர்க்கம் 35: கங்கை,
ஸர்க்கம் 36 & 37; ஸ்கந்த் ஜனனம்,
ஸர்க்கம் 38: ஸகரன்,
ஸர்க்கம் 39: ஸகரனுடைய யாகம்,
ஸர்க்கம் 40: ஸகர புத்திரர்கள் அழிக்கப்பட்டது,
ஸர்க்கம் 41: அம்சுமான்,
ஸர்க்கம் 42: திலீபன் — பகீரதன்,
ஸர்க்கம் 43: கங்கை பூமிக்கு வந்தது,
ஸர்க்கம் 44: ஸகர புத்திரர்கள் உத்தம கதியை அடைந்தது,
ஸர்க்கம் 45: ஸமுத்திர மதனம்,
ஸர்க்கம் 46 & 47: மருத்துக்களின் உற்பத்தி,

கம்பன்

அகலிகைப் படலம்: 76/4, 5

மாற்றம்

பதினறு சர்க்கங்களில் விசுவாமித்திரர் வாயிலாக வான்மீகி பல்வேறு புராண வரலாற்றுக் கதைகளை நீட்டிச் சொல்கின்முர்.

கம்பன் இரண்டே பாடல்களில், கங்கையைக் கண்டமையை மட்டும் காட்டுகின்முன்.

ஆசிரியர் கருத்து

தான் பாடுதற்கு முனைந்த இராமகாதையின் போக்கிற்கு அப்புராண வரலாற்றுக் கதைகள் ஏதும் தொடர்பின்றி இருத்தலான், அவற்றை மிகையென விடுத்திட்டான்; கம்பன்.

22. அகலிகை

வான்மீகி

ஸர்க்கம் 48: போகும் வழியில் அந்நகரத்திற்கு சமீபத்தில் ஒரு ஆசிரமம் சூன்யமாயிருக்கக்கண்டு ராமன், 'ஸ்வாமி!......... இது இது யாருடையது?' என்றார்.

ஞானத்திலும் ஆசாரத்திலும் மேலான கௌதமர், தம் பாரியை அஹல்யையுடன் இங்கே வெகுகாலம் வஸித்தார். ஒரு நாள் அவர் வீட்டிலில்லாத ஸமயம் பார்த்துத் தேவராஜன் அவருடைய ரூபம் தரித்து அங்கேவந்து 'அஹல்யே! ஆசைக்கு வசப்பட்டவர்கள் ஸ்திரீகளுக்கு ருதுகாலம் வரும் வரையில் எதிர் பார்க்க முடியுமா? உன் அழகாலும் லாவண்யத்தாலும் மயங்கி னேன். உன்னை அனுபவிக்க விரும்புகிறேன்' என்றான். 'கௌதமர் ஒரு நாளும் இப்படிப் பேசினது இல்லை; இவ்விதமாய்ச் செய்ய விரும்பினதும் இல்லை; இந்திரனைத் தவிர மற்றவர் இங்கே வர முடியது. அவன் என்னிடத்தில் நெடுநாளாய் ஆசை வைத்திருக் கிறான் என்று கேள்விப்பட்டிருக்கின்றேன். ஆகையால் கௌதம ரூபத்தைத் தரித்து வந்திருப்பவன் இந்திரனே' என்று அறிந்தாள் அழகே ரூபமெடுத்து வந்த எண்ணிறந்த அப்ஸரசுகளுக்கு நாதனான தேவராஜன் அவர்களை அலக்ஷ்யம் செய்து தன்னை மேலாக எண்ணி ஆசை வைத்ததால், கர்வமடைந்து, புத்திமயங்கி, அவனிடத்தில் ஆசை வைத்தாள். பிறகு தன்னிஷ்டம் நிறைவேறினதால் ஸந்தோஷமடைந்து இந்திரனைப் பார்த்து, "உன் சிநேகத்தால் மிகவும் ஆனந்தமடைந்தேன். மஹரிஷி வருவதற்கு முன் இங்கிருந்து புறப்பட்டுப் போ. உனக்கும் எனக்கும் இதனால் யாதொரு கெடுதியும் நேராமல் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்" என்றாள்

கௌதமர் எங்கு வந்துவிடுவாரோ என்று பரபரப்புடன் அதிவேகமாய்ப் போய்க் கொண்டிருக்கையில் அந்த மஹா தபஸ்வியே வரக்கண்டான். இந்திரனுக்கு நடுக்கமெடுத்தது; காந்தி குறைந்தது. தேவராஜனைக்கண்டு அந்தத் தபோநிதி அடங்காக் கோபம்கொண்டு, 'துர்ப்புத்தி பிடித்தவனே! என் ரூபத்தைத் தரித்து, செய்யக்கூடாத இந்தப் பாபத்தைச் செய்ததால் உனக்கு அதற்கு ஆதாரமான விருக்ஷணங்கள் போகக் கடவது' என்று சபித்தார். உடனே அப்படியாயிற்று

பிறகு கௌதமர் அஹல்யையைப்பார்த்து, 'நீ காற்றைத் தவிர ஆஹாரமின்றி சாம்பலில் படுத்துக் கொண்டு ஒருவருடைய கண்ணிற்கும் தெரியாமல் இங்கே பல வருஷங்கள் வரையில் இருக்கக்கடவாய். இக்ஷ்வாகு வம்சத்தரசனுன தசரத குமாரன் ஸ்ரீ ராமச்சந்திரன் இந்தக் கோரமான வனத்திற்கு வருவார், அவருக்கு அதிதி பூஜை செய். உன் பாபங்கள் விலகும். நிஜ ரூபத்தை அடைந்து என்னுடன் சேர்வாய் லோபம், மோஹம் தீர்ந்து ஸந்தோஷத்துடன் என் பார்யையாக இருக்க யோக்யதை பெறுவாய்' என்று கற்பிழந்தவருக்கு நியமிக்கப்பட்ட பிராயச் சித்தத்தைச் சாபரூபமாகச் சொல்லி, அதற்குப் பரிஹாரத்தையும் தெரிவித்து, இந்த ஆசிரமத்தை விட்டு ஸித்த சாரணர்கள் வஸிக்கும் வெகு புண்ணிய ஸ்தலமான ஹிமயமலைச் சிகரத்தில் தவம் செய்யப் போனுர்.

ஸர்க்கம் 49: மஹரிஷியின் சாபத்தால் இந்திரன் விருக்ஷணமற்றுப் பயத்தால் நடுங்கி, முகம்வாடி, அக்னி முதலிய தேவர்களிடத் திற்குச்சென்று, 'கௌதமருடைய தவத்தைக் கெடுக்க கோப மூட்டிச் சபிக்கும்படி செய்யச் சொன்னீர்கள். உங்களுடைய காரிய மாகவே நான் போய் அவருடைய தவத்தைக் குறைத்தேன். அதனுல் விருக்ஷணங்களை இழந்தேன், அவருடைய பாரியையான அஹல்யை கோரமான கதியை அடைந்தாள். தேவர்களே! உங்களுக்காக இவ்வளவு சிரமப்பட்டு ஆபத்தை அடைந்த என்னை விருக்ஷணங்களுள்ளவனுக செய்ய வேண்டும்' என்ருன்.

அக்னி முதலிய தேவர்களும், ரிஷிகளும் பித்ருக்களிடத் திற்கு வந்து, 'நம் அரசன் கௌதமருடைய சாபத்தால் விருக்ஷணமற்ருன். தங்களுக்கு யாகத்தில் கொடுக்கப்படும் ஆட்டின் விருக்ஷணங்களை அவனுக்குக் கொடுங்கள். விருஷண மில்லாத ஆடுகளால் உங்களுக்கு விசேஷ திருப்தியுண்டாகட்டும். அவைகளைக் கொடுக்கும் யஜமானர்களுக்கும் க்ஷேமம் உண்டா கட்டும்' என்ருர்கள். அப்படியே பிதிரு தேவதைகள் ஆட்டின் விருஷணத்தை இந்திரனுக்குக் கொடுத்தார்கள். கௌதமருடைய தபோ பலத்தால் இந்திரனுக்கு அன்று முதல் 'மேஷ விருக்ஷணன்' என்ற பெயர் கிடைத்தது பிதிரு தேவதைகள் விருக்ஷணமில்லாத ஆடுகளை அங்கீகரித்து யாகம் செய்கிறவர்களுக்குப் பூரண பலத்தைக் கொடுத்து வருகிருர்கள். ராம! அந்தப் புண்ணி

யாத்துமாவான கௌதமருடைய ஆசிரமத்திற்குப் போவோம், வா. கோரமான சாபத்திலிருந்து அஹல்யையை விடுவிக்கக் கடவாய்' என்றார்.

அப்படியே ராமலக்ஷ்மணர்கள் அந்த மஹரிஷியை முன்னிட்டுக் கொண்டு ஆசிரமத்தில் பிரவேசித்தார்கள். அஹல்யை அநேக வருஷங்களாய் அனுஷ்டித்த கடும் தவத்தால் நிகரற்ற காந்தி பொருந்தித் தேவாஸுரர்களும் பார்க்க முடியாத திவ்விய ரூபத்துடன் விளங்கினாள். பிரஹ்மாவின் மாயா சக்தியால் வெகு சிரமப்பட்டு சிருஷ்டிக்கப்பட்டவள். பனியாலும் மேகங்களாலும் மறைக்கப்பட்ட பூர்ண சந்திரனைப்போல், மரங்களும் கொடிகளும் இலைகளும் அவளை மறைத்துக் கொண்டிருந்தன. புகையால் சூழப்பட்ட அக்னிக் கொழுந்தைப் போலும், ஜலத்தின் நடுவில் பிரதி பிம்பித்த சூரியகாந்தியைப்போலும் விளங்கினாள். அந்த அஹல்யை கௌதமருடைய சாபத்தால் ராமன் வரும் வரையில் மூன்று லோகங்களிலும் உள்ளவர்களுக்குக் காணப்படாமலிருந்தாள். ராமர் வந்த பிறகு சாப விமோசனமடைந்து அவர்களுக்குக் காணப்பட்டாள். ராமலக்ஷ்மணர்கள் அவளுடைய பாதங்களில் நமஸ்கரித்தார்கள். அஹல்யையும் கௌதமருடைய வார்த்தையை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு, அர்க்யபாத்யம் முதலியவைகளைக் கொடுத்து அவர்களுக்கு விதிப்படி அதிதி பூஜை செய்தாள். ராமன் அதை அங்கீகரித்தார். தவத்தால் சுத்தியடைந்து கௌதமரோடு சேர்ந்த அஹல்யையைத் தேவர்கள் கொண்டாடிப் பூஜித்தார்கள். கௌதமர் ராமனுடைய வரவை ஞான திருஷ்டியால் அறிந்து, அவ்விடம் வந்து அஹல்யையுடன் ராமனை விதிப்படி பூஜித்து, அங்கே வெகுகாலம் தவம் செய்து கொண்டிருந்தார், ராமன் அவர்களுடைய பூஜையைப் பெற்றுக் கொண்டு மஹரிஷிகளுடன் மிதிலையை நோக்கிச் சென்றார்.

கம்பன்

இனைய நாட்டினில் இனிது சென்று ... .
.... கருங்கல் ஓர் வெள்ளிடைக் கண்டார்.

அகலிகைப் : 77/13

கண்ட கல்மிசைச் காகுத்தன் ....
.... நின்றனள்; மாமுனி பணிப்பான்.

அகலிகைப் : 77,14

மா இரு விசும்பின் கங்கை ....
.... அகலிகை ஆகும் என்றான்.

அகலிகைப் : 77/15

பொன்னை ஏர் சடையான் ....
.... அடுத்தவாறு அருளுக என்றான்.

அகலிகைப் : 77/16

அவ்வுரை இராமன் கூற, ...
.... வனமுலை நணுகலுற்றான்.

அகலிகைப் : 78/17

தையலாள் நயன வேலும், ...
.... உருவமே கொண்டு புக்கான்.

அகலிகைப் : 78/18

புக்கு அவளோடும், காமப் புதுமண.........
.... முனிவனும், முடுகி வந்தான்.

அகலிகைப் : 78/19

சரம் தருசாபம் அல்லால் ....
.... ஓர் பூசை ஆய்ப் போகலுற்றான்.

அகலிகைப் : 78/20

தீ விழி சிந்த நோக்கி ....
.... இயைந்தன இமைப்பின் முன்னம்.

அகலிகைப் : 78/21

எல்லை இல் நாணம் எய்தி, ...
.........கருங்கல் ஆய், மருங்கு வீழ்வாள்.

அகலிகைப் : 78/22

பிழைத்தது பொறுத்தல் என்றும்.........
.... இந்தக் கல் உருத் தவிர்தி' என்றான்.

அகலிகைப் : 78/23

இவ்வண்ணம் நிகழ்ந்த வண்ணம்;.........
.........கால் வண்ணம் இங்குக் கண்டேன்.

அகலிகைப் : 79/24

தீது இலா உதவி செய்த.........
.... பொன் அடி வணங்கிப் போனாள்,.........

அகலிகைப் : 79/25

அருந்தவன் உறையுள் தன்னை.........
.........புனித மாதவனை நோக்கி,

அகலிகைப் : 79/26

அஞ்சன வண்ணத்தான் தன்.........
.........முனிவனும், கருத்துள் கொண்டான்.

அகலிகைப் : 79/27

குணங்களால் உயர்ந்த, வள்ளல்.........
.........மணி மதில் கிடக்கை கண்டார்.

அகலிகைப் : 79/28

மாற்றம்

1 அகலிகையின் சாபவிமோசனம் ஆகும் முன்பே, அவள் சரிதம் இராமனுக்குக் கூறப்படுகின்றது, வான்மீகத்தில்

சாப விமோசனம் நிகழ்ந்த பின், தன் எதிரில் நின்ற பெண்ணைப்பார்த்து வியந்தவனாய் இராமன் முழு வரலாற்றைக் கேட்க, கம்பனின் விசுவாமித்திரர் அவளுடைய வரலாற்றைக் கூறுகின்றார். இதுவே சிறந்த உத்தி (Technic) ஆகும்.

ஆசிரியர் கருத்து

இராமனாய்த் தோன்றியுள்ளவன் திருமால் என்ற இரகசியத்தை அறிந்திருந்த விசுவாமித்திரர் முன்னைப் பழங்கதையெல்லாம் இராமனுக்குக் கூறி, 'திட்டமிட்டபடி உன்னால் அகலிகைக்கு விமோசனம் நடைபெற வேண்டும்' என்று கூறி ஏதோ அவனுக்கு அது கடமை போன்ற உணர்வையூட்டி அழைத்துச் செல்வதினும், தன்னைத் தானே மறந்த நிலையில் திருமால் என்ற நினைவேயின்றி இராமன் கால் துகள் படவும் விமோசனம் பெற்ற பெண்ணைப் பார்த்து வியந்து வினவ, கதை சொல்லப்படுவதே, அருள் தன்மை மிளிரும் வியப்புறு வரலாறாகப் பெருமை பெறும் எனக்கருதி இம்மாற்றத்தைக் கையாண்டுள்ளான். கம்பன்! அன்றியும் மனமறியச்செய்யாத குற்றத்தை மன்னித்து அழைத்துக் கொள் என்று இராமன் கூறுவது உன்னதமாகும்.

மாற்றம்

2 அகலிகையை நாடி வந்த, கௌதமரின் வேடம் தாங்கிய இந்திரனை உய்த்துணர்ந்த அவள், ''வந்துள்ளது என் கணவரல்ல; இந்திரனைத்தவிர மற்றவர் இங்கே வரமுடியாது; அவன் என்னிடத்தில் நெடுநாளாய் ஆசை வைத்திருக்கிறான் என்று கேள்விப்பட்டிருக்கின்றேன்'' என்கின்றாள் வான்மீகியின் அகலிகை.

பெண்ணவளின் கண்ணாகிய வேலும், மன்மதனுடைய பாணமும் தாக்கிட இந்திரன் ஒரு நாள் உற்ற காம மயக்கத்தால் கௌதம முனிவரின் வேடம் தரித்து அவளிடம் வந்தணைந்தான் என்பது, கம்பன்.

ஆசிரியர் கருத்து

வான்மீகியின் அகலிகை சொல்வதைப்பார்த்தால் இந்திரன் அடிக்கடி அவ்வாசிரமச் சூழலுக்கு வருவது வழக்கம் என்பது போல் தோன்றுகின்றது. மேலும், தான் அவளைக் கூட வேண்டுமென்ற போதையில் இருப்பதைப் பிறர் அறிந்து அகலிகையிடம் சொல்லும் அளவிற்கு நடந்து கொண்டிருக்கின்றான் என்றும் தோன்றுகின்றது.

பன்னாள் அவனின் நடத்தையைக் கண்டிருந்த முனி பத்னியான அகலிகை தன் மனம் மாறுபடாமல் கற்பைக் காத்துக் கொள்ளும் திடம் கொண்டிருப்பாளேயன்றி இந்திரனுக்குப் பணிந் திருக்கமாட்டாள், முனிவன் உருவில் உள்ள அவனை அவள் சந்தேகிக்கவில்லை. புதுமையாக இருந்தாலும் தக்கதா அன்றா என்று அவளால் சிந்திக்க முடியவில்லை. எனவே தான் கம்பன் நெஞ்சினால் பிழைப்பிலாள் என்று கூறுகின்றான். இம் மாற்றம் மிகவும் பாராட்டப்படத்தக்க ஒன்றாகும்.

மாற்றம்

3 தன்னை நாடி மாற்றுருக்கொண்டு தன் கணவனாகிய கௌதம முனிவரின் வேடம் தாங்கி வந்துள்ளவன் இந்திரனே எனத் தெள்ளத் தெளிய உணர்ந்த பின்பு, ஒரு சாதாரணப்

பெண்ணைப் போலே – அற்ப ஆசைக்கும் ஆணவத்திற்கும் அடிமை யாகிடும் பெண்ணைப் போலே – அகலிகை, இந்திரன் தன் அழகிற்கு அளித்த மேன்மை எனக் காரணம் கற்பித்துக் கொண்டு அவனுடைய ஆசைக்கு அடங்கினுள்! அவனுடைய ஆசையை மட்டும் தீர்க்கவில்லை; அவனுடைய உறவால் தான் மிகுந்த ஆனந்தம் பெற்றதாகவும் அவனிடமே தெரிவிக்கின்ருள்! தன் ஆசையைத் தீர்த்த அவ்விந்திரன் ஆபத்தில் அகப்பட்டுக் கொள்ளக் கூடாது என்ற ஆதங்கத்தால் தன் கணவன் வருமுன் வெளியேறிட வும் கேட்டுக் கொண்டாள்; வான்மீகியின் அகலிகை!

வந்து தன்னை அணைந்தவன் தன் கணவனே என்று கருதி அவனின் சாதாரணமான போக்கையும் பேச்சையும் எண்ணிப் பாராதவளாய் - காம இச்சைக்கு ஆட்படுகின்ருள் அகலிகை! புணர்ச்சியின் உச்ச கட்டத்தில் புகுந்து விட்டபின், ஏதோ புதிதாக இருப்பதாக உணர்ந்தாள். ஆனுல் சரியா, தவரு, என்பதை உணரவில்லை. அதற்கு இசைந்து, தாழ்ந்து இருந்தனள். இருவரும் பிரியும் முன்னமேயே வெளிச்சென்றிருந்த கணவனுன கௌதம முனிவன் வருவதைத் தெரிந்து கொண்டனள்; அஞ்சிய அவள் ஒன்றும் சொல்லவில்லை; இந்திரன் பூனையாய் மாறி நழுவ லுற்ருன்! இது கம்பன் தரும் காட்சி.

உத்தம பத்தினி எவளும் முன்னறிந்தே வேற்ருனைத் தழுவமாட்டாள், எந்தக்காரணம் கொண்டும். ஆக்வே, வான்மீகியின் வர்ணனையின்படிப் பார்த்தால் அகலிகை உத்தம பத்தினி என்பதற்கே இடமில்லாமல் போகின்றது. கம்பன் படைத்த அகலிகையோ உண்மையறியாமல் தன் கணவன் என்றே மதிமயங்கித் தாழ்ந்தனள். எனவே தான் நெஞ்சினுல் பிழைப்பிலாள் என்று பேசுகிருன் கம்பன்.

மாற்றம்

4 ‘உன் விருஷணங்கள் போகக்கடவது’ என்று இந்திரனுக்குச் சாபமிட்டார், வான்மீகியின் கௌதமர்.

‘உன் உடலில் ஆயிரம் அல்குல் அமைவதாக’ என்பது கம்பனின் கௌதமர் இந்திரனுக்கிட்ட சாபம்.

ஆசிரியர் கருத்து

உள்ளம் காம வயப்பட்டுத் தூண்டியதால் விருக்ஷணம் வெட்கம் கெட்ட வேலையில் இறங்குகின்றதேயன்றி, விருக்ஷணத்திற்கேத் தனி உணர்வும் செய்கையும் இல்லை; எனவே, அவ் விருக்ஷணத்தைக் குறை கூறவோ சபிக்கவோ செய்தால், அதன் உண்மைப் பலனை உத்தம முனிவனேயானாலும் உணர்ந்து கொள்ளுதல் அரிது; அறிந்துக் கொண்டாலும், மனசாட்சி உறுத்த பின்னரும் அது போன்ற செய்கையில் இறங்காது இருக்கவும் ஏலாது. ஆனால் எந்தப் பெண்ணுறுப்பில் மயங்கிச் செய்கையில் ஈடுபட்டானோ அப்பெண்ணுறுப்பு, தன் உடலில் ஆயிரம் அமைந்திருந்தால், அவற்றைக் காணும் போழ்தெல்லாம் அசங்கிய உணர்வு முந்திட, தான் செய்த பிழையை உணர்த்தி நாண மடையச்செய்யும். எனவே, இம்மாற்றம் செய்தான் கம்பன்.

மாற்றம்

5 கணவன் கண்ணில் சாம்பல் தூவ நினைந்தவளை வான்மீகியின் கௌதமன் சாம்பலில் அவள் படுத்திருக்க, எவராலும் பார்க்க முடியாத நிலையில் இருக்கச் சபித்தான்.

கணவனுக்குத் துரோகம் செய்யும் அளவிற்கு மனம் கல்லாகி விட்டவளை, ''கல்லாகச்'' சபித்தார் கம்பனின் கௌதமர்.

ஆசிரியர் கருத்து

காற்றும் மழையும் கரைக்கக் கரைந்திடும் சாம்பல்மேடு; எனவே அதனில் படுத்திருப்பவள் பார்க்கப்பட்டு சாபத்தின் வேகம் குறைவாய்த் தோன்றும். கல்லோ, எல்லோராலும் வெளிப்படையாகவே, காணப்பட்டாலும் கதை வெளிப்படாது; அகலிகையின் உளம் தெரியாது. எனவேதான், இம்மாற்றம்!

மாற்றம்

6 அகலிகைக்குச் சாபமிட்ட கௌதம முனிவர் தாமாகவே அச்சாப விமோசனம் ஏற்படக்கூடிய வழி வகைகளை சாபச் சொற்களின் தொடர்ச்சியாகவே சொல்லிச் செல்கின்றார், வான்மீகத்தில்

சாபத்திற்கு விமோசனம் எப்பொழுது? என்று அகலிகை வேண்டிக் கேட்டுக் கொண்டபின் அதனைப் பற்றி கௌதமர் கூறுகின்றார், கம்பனில்.

ஆசிரியர் கருத்து

ஒருவருக்குத் தண்டனையையும் கொடுத்துவிட்டு, அத் தண்டனை தீரும் உபாயத்தையும் தொடர்ச்சியாகச் சொல்லி விட்டால், தண்டனை அனுபவிக்கப் போகின்றவருடைய அறநெறி அச்சம் குன்றி விடும். மாறாக, தண்டனை இன்னது என்று கூறியதும் தன்பிழையுணர்ந்து, தனக்குத்தானே கழிவிரக்கம் கொண்ட நிலையில் அவராக அத்தண்டனை வேகம் தணியும் வழி வகையைக் கேட்டுக் கொள்வாரேயானால் தண்டனை அனுபவிக்க நேர்ந்ததின் அவலத்தில் அவன் ஊறிப் பின்னரும் அத்தவற்றைச் செய்யார்.

அது மட்டுமல்ல; "பின் நிகழப் போவதையெல்லாம் அந்த ஆத்திரச் சூழ்நிலையிலும் காண வல்ல முனிவர், முன்னமேயே, தன் மனையாட்கு ஏற்படக் கூடிய அபவாத நிலையைக் கண்டிருக்க ஏலுமே! அதற்கேற்ப முன்னெச்சரிக்கையாக இருந்திருக்கலாமே! என்ற குற்றச்சாட்டும் இல்லாது போகும். ஆக, இந்தக் காரணங்களால் இம் மாற்றத்தைப் புகுத்தியுள்ளான், கம்பன்.

மாற்றம்

7 இந்திரன் தான் பெற்ற சாபத்தின் விபரங்களைத் தேவரிடத்தில் சொல்லி, அவர்களுடைய தூண்டுதலால் தான் அச் சாபத்திற்கு ஆளாக நேர்ந்ததே என்று நொந்து கொள்கின்றான். அவர்களும் கூடிப் பேச, அவன் பட்ட நஷ்டத்திற்கு ஈடு செய்து கொள்ளும் உபாயம் ஆலோசிக்கப்படுகின்றது, வான்மீகத்தில்.

கம்பனில், இந்திரனின் சாப விமோசனம் பற்றிய செய்தியே இல்லை.

ஆசிரியர் கருத்து

பிறர் பேச்சைக் கேட்டு தான் சாபத்திற்குள்ளானதாகச் சிறுபிள்ளைத்தனமான பேச்சிற்குக் கம்பன் இடம் கொடுக்கவில்லை. அவனுக்கு சாப விமோசனம் ஏற்பட்டால் என்ன?

இல்லையென்றால் என்ன? அஃது இராம காதைக்குத் தேவை யில்லாதது. மேலும், தெரிந்தே பெரும் பிழையைச் செய்பவர்கள் இத்தகைய நிலைக்கு ஆளாவர் என்று மட்டும் அறமுரைத்ததாக இருக்கட்டும் என்ற நிலையில் இந்திரனின் சாப விமோசனம் பற்றி ஏதும் கூறாமல் விட்டிட்டான், கம்பன்.

மாற்றம்

8 இராமன் வரவால் சாபம் நீங்கப் பெற்று, பிறர் பார்வைக்குத் தெரியலானாள் அகலிகை; இராம இலக்குவர்கள் அவளுடைய பாதங்களைக் கும்பிட்டார்கள் என்பது, வான்மீகம்.

இராமனின் பொன்னடி வணங்கிப் போயினாள் அகலிகை, அவன் அறிவுரை கேட்டு என்பது கம்பன் காட்சி.

ஆசிரியர் கருத்து

கற்பிழந்தவள் எனத்தன் கணவரான கௌதம முனிவ ராலும், அவள் கதையை எடுத்துச் சொன்ன விசுவாமித்திர ராலும் தெளிவாகக் கூறப்பட்டவளை (ஏன்? அவளே, தன் பிழையை உணர்ந்து ஒப்புக்கொண்டவள் தானே!) இராமன் தான் திருமாலின் அவதாரம் என்பதைத் தானே உணர்ந்து கொண்டு - மன்னிப்பதேயானாலும், அவளுடைய பாதங்களில் வீழ்ந்து பணிதல் என்பது மனம் ஒப்பாதது மட்டுமல்ல; தேவை யற்றதும் கூட. ஆனால், நடந்த பிழைக்காக சினவாமல் மன்னித்து, மறந்து அறிவுரை கூறுவதென்பது இயற்கையானதுவே! எனவே, இயற்கை மன நிலையை மீறிய செய்கையை மாற்றி, உலகியல் ஒப்புரவிற்கேற்பக் காட்சியை அமைத்திட்டான், கம்பன்.

மாற்றம்

9 கௌதமர் இராமனுடைய வரவை ஞானப்பார்வையால் அறிந்து, அவ்விடம் வந்து அகலிகையுடன் இராமனை விதிப்படி தொழுதார் என்பது வான்மீகம்.

கௌதமர் இருந்த இடத்தை இராமன் முதலாய அனை வரும் அணுகவும் அவர் வியந்து, வரவேற்று உபசரித்தார் என்பது கம்பன் கூற்று.

ஆசிரியர் கருத்து

என்னதான் ஞானப்பார்வையால் காணும் வல்லமை இருப்பினும் அகலிகை சாபவிமோசனம் பெற்ற சிறிது காலத் திற்குள் (இமயமலையிலிருந்து) அங்கு வந்து சேர்தல் இயலாத தொன்று,

எனவே, கௌதமர் அருகிலிருந்த ஆசிரமத்திலேயே இருந்ததாகவும், அவரிடம் சென்று அகலிகையை ஒப்படைத் ததாகவும் கம்பன் காட்டியுள்ளான்.

மாற்றம்

10 "இக்ஷ்வாகு வம்சத்து அரசனான தசரத குமாரன் ஸ்ரீ ராமச்சந்திரன் இந்த வனத்திற்கு வருவான். அவனுக்கு அதிதி பூஜை செய். நிஜ ரூபத்தை அடைந்து என்னுடன் சேர்வாய். லோபம், மோஹம் தீர்ந்து ஸந்தோஷத்துடன் என் பார்யை யாக இருக்க யோக்கியதை பெறுவாய்" எனக் கௌதமர் தாமே வலிய அனைத்தையும் கற்பிழந்த மனையாளிடம் கூறியதாக அமைந்துள்ளது, வான்மீகத்தில்.

'தசரத இராமனின் கால் தூசுபட கல் உருவம் நீங்கு வாயாக' என்பது மட்டும் கம்பனின் கௌதமர் கூற்று.

ஆசிரியர் கருத்து

மனைவியின் கற்பிழந்த செய்கையைத் தன் கண்ணுற் கண்ட கணவன், அவளைச் சபித்த நிலையில் அவளேயும் தன் பிழைக்காக வருந்தி மன்னிப்புக் கேட்டு, சாபவிமோசனம் பற்றி யும் கூட கேட்காத நிலையில், அவளை மறுபடியும் சந்தோஷமான சூழ்நிலையில் மனைவியாகக் கற்பனை செய்து கொள்ளுதல் என்பது எத்தகைய உத்தமமான மனிதனுக்கும் ஆகாததொன்று. கற்பின் கனலியென்று தன் உள் மனம் உரைத்தும், தக்க சாட்சியங்கள் இருந்தும், அவதார புருஷோத்தமனாகிய இராமனே சீதையை அக்கினிப் பிரவேசத்திற்கு ஆளாக்கினான் என்பது பின்னர் காணப்படும் காட்சியாக அமையவிருக்கும் காவியத்தில் விலைமகள் என்றே கணவனால் விளிக்கப்பட்ட ஒருத்தியை எளிதில் மன்னிப்ப தென்பது இயற்கைக்கு மாறுபட்டதாகும்.

23. மிதிலை

வான்மீகி

ஸர்க்கம் 50: பிறகு விசுவாமித்திரர் ராம லக்ஷ்மணர்களுடனும் மற்ற ரிஷிகளுடனும் அங்கிருந்து வட கிழக்காய் ஜனகருடைய யாக சாலையை நோக்கிச் செல்லும் பொழுது, ராமன், மஹரிஷே! ஜனகர் யாகத்திற்காகச் செய்திருக்கும் ஏற்பாடுகள் வெகு சிலாக்கியமானவை. வேதாத்தியயனம் செய்த பிராம்மண சிரேஷ்டர்கள் நானு தேசங்களிலிருந்து ஆயிரக்கணக்காய் வந்து இருக்கிறுர்கள். மஹரிஷிகளுடைய பர்ணசாலைகள் அநேக வண்டி களால் சூழப்பட்டு அங்கங்கே விளங்குகின்றன. நமக்கும் வஸிப் பதற்கு ஓரிடத்தை ஏற்படுத்த வேண்டும்' என்ருர். அப்படியே விசுவாமித்திரர் சுத்தமாய் ஜனக்கூட்டமில்லாமல் ஜலஸௌக்ய முள்ள ஓர் ஸ்தலத்தில் தங்கினுர். அவர் வந்திருப்பதை அறிந்து ஜனகர் தன் புரோஹிதரான சதானந்தரை முன்னிட்டுக் கொண்டு, தீக்ஷை செய்து கொண்டவர்களுக்கேற்பட்ட எல்லை யைத் தாண்டாமல் அந்த முனி சிரேஷ்டரை எதிர் கொண் டழைத்தார்; பிறகு ராமலக்ஷ்மணர்களைப் பார்த்து அளவற்ற ஆனந்தமடைந்து, மஹரிஷியை மறுபடியும் வணங்கிக் கை கூப்பி' 'பகவன்! தங்களுக்கு பரம மங்களம் உண்டாகட்டும். இந்தக் குழந்தைகள் யார்? பராக்கிரமத்தில் தேவதைகளைப் போன்ற வர்கள் கம்பீரமான நடையால் யானையையும், சத்துருக்களை அவமதிக்கக் கூடிய நடையால் ஸிம்ஹத்தையும், விரோதிகள் கண்டு நடுங்கும் நடையால் புலியையும், கர்வமுள்ள நடையால் விருஷபத்தையும் ஒத்தவர்கள். தாமரை இதழ் போன்ற விசால மான நேத்திரங்களால் பார்க்கிறவர்களின் மனத்தை அபகரிக் கிருர்கள். .... தங்களை ஆசிரயித்தவர்களுடைய கஷ்டத்தையும் துக்கத்தையும் தீர்க்க வந்திருக்கிருர்கள் என்று பொதுவாய் அறிந்தேன். ஆனுலும் இன்னும் நன்ருக அந்த விஷயங்களை அறிய விரும்புகின்றேன்!' என்ருர். அப்பொழுது விசுவாமித்திரர், அவர்கள் தசரத சக்கரவர்த்தியின் புத்திரர்கள் என்பதையும், தான் செய்யும் யாகத்தை ரக்ஷிப்பதற்காகத் தன்னுடன் வந்து ராக்ஷஸர்களை ஸம்ஹரித்ததையும் விசாலா நகரத்திற்கு வந்ததையும், கௌதமருடைய ஆசிரமத்தில் அஹல்யையின் சாபத்தைத் தீர்த்ததையும், கௌதமரை

ஸந்தித்ததையும், மிதிலையிலுள்ள சிவ த னு ஸின் ஸாரத்தைப் பரீக்ஷிப்பதற்காக அங்கே வந்ததையும் தெரிவித்தார்.

கம்பன்

மிதிலைக் காட்சி : 79 / 1 — 92 / 89, 99 / 137 & 138, 103 / 156 & 157 : 93 பாடல்கள்

1-3 : மிதிலைக் கொடிகளின் தோற்றம்.
4 : மூவரும் நகரினுள் புகுதல்.
5-7 : தெருக்களின் சிறப்பு.
8-21 : வீதிகளில் கண்ட காட்சிகள்.
22 : அரண்மனையைச்சூழ்ந்துள்ள அகழி.
23-34 : கன்னிமாடத்தில் நின்ற சீதையின் பேரெழில் சிறப்பு.
35-38 : இராமனும் சீதையும் ஒருவரை ஒருவர் கண்டு காதல் கொள்ளுதல்
39 : சிந்தையைச் சீதையிடத்து விட்டு இராமன் முனிவருடன் சேர்ந்து போதல்.
40-44 : சீதையின் காதல் நோய்.
45-46 : சோர்ந்த சீதையைத் தோழியர் மலர்ப்படுக்கையில் சேர்த்தல்.
47-50 : சீதையின் துன்பநிலை.
51 : தாதியர் செய்த பரிகாரம்.
52-56 : காதல் நோயுற்ற சீதையின் தோற்றம்.
57-60 : இராமனை நினைந்து சீதை உருகுதல்.
61-63 : கதிரவன் மறைதலும் அந்தி மாலையின் தோற்றமும்.
64-68 : மாலை வருகையும் சீதையின் புலம்பலும்.
69 : தோழியர் நெய்விளக்கு அகற்றி மணி விளக்கு அமைத்தல்.
70-74 : திங்களின் தோற்றம்.
75 : தாமரை குவிய ஆம்பல் அலர்தல்.
76-77 : சீதை திங்களைப் பழித்தல்.
78-80 : காதல் நோயால் சீதைபட்ட துன்பம்.
81-82 : மலர்ப் படுக்கை வெம்மையால் கரிந்து போதல்.
83 : விசுவாமித்திரர் முதலிய மூவரும் சனகன் எதிர் கொள்ளச் சென்று மாளிகையில் தங்குதல்.
84-86 : சதானந்த முனிவர் வந்து முகமன் உரைத்தல்.
87-88 : விசுவாமித்திரன் இராமனது பெருமை பேசுதல்.
89 : சதானந்தர் கோசிகனைப் பாராட்டுதல்.

90 : இராமனுக்குச் சதானந்தர் உரைத்த விசுவாமித்திரர் வரலாறு.

91 : விசுவாமித்திரன் அரசனுய் ஆண்டமை.

92 : வேட்டைமேற்காடு சென்ற மன்னன் வசிட்டனைச் சார்தல்.

93-94 : வசிட்டன் சுரபிமூலம் விருந்து அளித்தல்.

95-96 : சுரபியை அரசன் விரும்புதலும் முனிவர் விடையும்.

97-99 : விசுவாமித்திரன் சுரபியைப் பற்ற அதன் மேனியிலிருந்து வெளிவந்த வீரர் பொருதல்.

100 : வசிட்டன் சினத்தால் அரச குமாரர் இறப்பு.

101-103: விசுவாமித்திரன் வசிட்டன் போர்.

104 : கௌசிகன் தவம் மேற்கொள்ளல்.

105-106: இந்திரன் அவனுடைய தவத்தைக் கெடுத்தல்.

107 : விசுவாமித்திரன் தென்திசை சென்று தவம் செய்தல்.

108-111: திரிசங்கு வசிட்டனைக் கிட்டிப் பெற்ற சாபம்.

112 : கௌசிகனிடம் திரிசங்கு தன் செய்தி தெரிவித்தல்.

113-115: கௌசிகன் வேள்வி செய்து திரிசங்குவை வானுலகு ஏற்றுதல்.

116 : தேவர்கள் தள்ளிய திரிசங்குவைக் கௌசிகன் மேலேயே நிற்கச்செய்தல்.

117 : கௌசிகன் சினத்தினுல் வேறோர் உலகு படைத்தல்.

118 : தேவர்கள் கௌசிகனைச் சாந்தப்படுத்துதல்.

119 : கௌசிகன் மேலைத்திசை சென்று தவம் புரிதல்.

120-121: அம்பரீடன் நரமேதம் செய்ய மகவு பெறுதல்.

122-123: கனச்சேபனைப் பெற்ற அம்பரீடன் வழியில் கோசிகனைக் காணல்.

124 : கனச்சேபன் தன் குறையைக் கோசிக முனிக்குக் கூறல்.

125 : கோசிகன் அவனுக்குப் பதில் தன் மக்களுள் ஒருவரை ஏகுமாறு சொல்ல அவர் மறுத்தல்.

126 : மறுத்த மைந்தர்களைக் கௌசிகன் சபித்தல்.

127-128: கௌசிகன் கனச்சேபனுக்கு மந்திரம் உரைத்து விடைதரல்

129 : வேள்வி முற்றலும் கௌசிகன் வடதிசை ஏகலும்.

130-133 : கௌசிகன் தவ மகிமை.

134-136 : தேவர்கள் கௌசிகனைப் பிரம இருடியாக்கல்.

137-138 : சதானந்தர் குமாரர்களை வாழ்த்திப் பெயர்தல்.

139 : இராமன் சீதையை நினைத்தல்.

140-147 : சீதையின் உருவெளித் தோற்றம் கண்ட இராமனின் நிலை.

148-149 . திங்களின் மறைவு.
150-153 : கதிரவன் தோற்றம்.
154-155 : இராமன் துயில் நீங்கியபின் முனிவரோடும் தம்பியோடும் சனகனது வேள்விச்சாலையைச் சார்தல்.
156 : வேள்வி முற்றிய சனகன் முனிவர் முதலாயினர் புடை சூழ வீற்றிருத்தல்.
157 : சனகன் வினவும் விசுவாமித்திரன் உரையும்.

மாற்றம்

அகலிகையின் சாப விமோசனம் முடிந்தவுடன் மிதிலைக்கு விசுவாமித்திரர் இராம இலக்குவர்களுடனும், மாமுனிவர்களு டனும் வந்தார்; வந்தவுடனேயே சனகனைக் கண்டு பேசும் காட்சியை அமைத்து விட்டார், வான்மீகி.

கௌதமருடைய ஆசிரமம் விட்டகன்ற விசுவாமித்திரர் இராம இலக்குவர்களுடன் (மாமுனிவர்கள் பின் தொடர்ந்ததாக இல்லை) மிதிலை நகரினில் புகுந்தனர். அப்படிப் புகுந்தவரை மிதிலைக் கொடிகள் வரவேற்றன என்பதையும். விசுவாமித்திரர்-இராமன் இலக்குவன் ஆய மூவரும் நகரினுள் புகுந்ததையும், அவர்கள், நகரில் கண்ட தெருக்களின் சிறப்பு, வீடுகளில் நிகழ்ந்த காட்சிகள், அரண்மனையைச் சூழ்ந்துள்ள அகழி, ஆயவை பற்றியும், கன்னிமாடத்தில் நின்ற சீதையின் பேரெழில் சிறப்பு செப்பி, இராமனும் சீதையும் ஒருவரையொருவர், கண்டு காதல் கொண்டதையும் படம் பிடித்து, சிந்தையைச் சீதையிடத்து விட்டு இராமன் முனிவருடன் போந்த தன்மையைச் சுட்டிக் காட்டி, சீதையின் காதல் நோயை வெளிப்படுத்தி, சோர்ந்த சீதையைத் தோழியர் மலர்ப்படுக்கையில் சேர்த்தல், சீதையின் துன்பநிலை, தாதியர் செய்த பரிகாரம், காதல் நோயுற்ற சீதையின் தோற்றம், இராமனை நினைந்து சீதை உருகுதல், மாலை வருகையும் சீதையின் புலம்பலும், தோழியர் நெய்விளக்கு அகற்றி மணி விளக்கு அமைத்தல், திங்களின் தோற்றம், தாமரை குவிய ஆம்பல் அலர்தல், சீதை திங்களைப் பழித்தல், காதல் நோயால் சீதை பட்ட துன்பம், மலர்ப்படுக்கை வெம்மையால் கரிந்து போதல் முதலாய காட்சிகளையெல்லாம் வர்ணித்துப்பின், விசுவாமித்திரர் முதலிய மூவரும் சனகன் எதிர் கொள்ளச் சென்று மாளிகையில் தங்கியதைப் பாடுகின்றான், கம்பன்.

ஆசிரியர் கருத்து

1 கோசலநாட்டு வர்ணனையைத் தந்த கவிச்சக்கரவர்த்தி, அந்நாட்டு மன்னர் மன்னனுக்குச் சம்பந்தியாகப் போகின்ற சனக மாமன்னனின் நாட்டின் பெருமையையும் வர்ணித்தல் முறைமை யெனக்கருதினார்; ஆக அவ்வர்ணனையை — வான்மீகத்தில் இல்லாததைப் புகுத்தியுள்ளார்.

2 அடுத்து, கன்னிமாடக் காட்சியின் அவசியத்தையும் தமிழ்நாட்டு முறைப்படி எண்ணிப் பார்த்து அமைத்தார். வான்மீகத்தில் மறைவழி நின்ற திருமணத்தைத் தமிழர் முறைப்படி களவு-காதல் என்ற நிலைகளில் காட்டவே வான்மீகத்தில் இல்லாத இக்காட்சியையும் புகுத்தியுள்ளார்.

3 விசுவாமித்திரரும் இராம இலக்குவரும் நகர எல்லைக்கு அப்பால் தங்கிட, சனகன் சென்று ஓர் எல்லைக்குள் நின்று அவர்களை வரவேற்றான். தான் அங்கு செல்லும் பொழுதே தன் புரோகிதராகிய சதானந்தரையும் அழைத்துச் சென்றதாக வான்மீகம் கூறுகின்றது. நகருக்குள் வந்தவர்களை வரவேற்று மாளிகையில் தங்கவைத்துச் சென்றபின் சதானந்த முனிவர் அம்மாளிகைக்கு வந்து முகமன் கூறியதாகச் செப்புவது, கம்பன்.

4 சனகன் நகர வெளிப் புறத்தே விசுவாமித்திரரை வரவேற்றுப் பேசிய பொழுது, இராம இலக்குவர்களைப் பற்றி விசாரிக்கப் புகுந்தவன், 'பராக்கிரமத்தில் .... விருஷபத்தையும் ஒத்தவர்கள்' என்றெல்லாம் வர்ணிக்கிறது, வான்மீகம்.

வேள்வி காண வந்தவிடத்தில் இராம இலக்குவரைப் பார்த்த சனகன் விசுவாமித்திரரிடம் யார் இவர்கள்? என்று மட்டும் நிற்பது, கம்பனில்.

சனகன் காணாத நடை கம்பீரங்களை அவன் வர்ணித்து

இராம இலக்குவர்களை பாராட்டுதல் நடைமுறைக்கு ஒவ்வாதவை எனவே தான் வான்மீகியினின்றும் வேறுபட்டு நின்றிட்டான். கம்பன்.

5 வான்மீகியின் விசுவாமித்திரர் இராம இலக்குவர்கள் தசரத புத்திரர்கள் என்று தொடங்கி, மிதிலையிலுள்ள சிவதனுஷின் ஸாரத்தைப் பரீட்சிப்பதற்காக அங்கே வந்ததாய்த் தெரிவித்து முடித்தார்.

கம்பனின் விசுவாமித்திரர், 'இராம இலக்குவர் தயரதன் தன் புதல்வர், சனகனுடைய வேள்வியைக் காணும் விருந்தினராய் வந்துள்ளனர்; சிவதனுசுவாம் வில்லையும் காண்பர்' என்கின்றார்.

விசுவாமித்திரரின் யாகத்தைக் காத்தபின், அடுத்து செய்ய வேண்டுவது என்ன என்று இராமன் கேட்க (ஸர்க்கம் 31) சனகன் நடத்திக் கொண்டிருக்கும் யாகத்தின் பெருமையைச் சொல்லி அதனைக் காணச் செல்ல வேண்டுமென்றும், சென்ற இடத்தில் சிவதனுசுவையும் காணலாம் என்றும் கூறினார் வான்மீகியின் விசுவாமித்திரர். அந்த விடையில் யாகம் காண்டல் முதலிடம் பெற்று சிவதனுசுவைக் காண்டல் இரண்டாம் இடம் பெறுகின்றது. அதே விசுவாமித்திரர் சனகருக்குச் சொல்லிய பதிலில் சிவதனுசுவினைப் பரீட்சிப்பதையேக் குறிப்பிட்டது முன்னுக்குப்பின் பொருத்தம் சரியாக அமையவில்லை. இதை உணர்ந்தே கம்பன், விசுவாமித்திரர் வேள்வி முடிந்த பின் இராமன் கேட்ட 'அடுத்த பணி என்னே?' என்ற கேள்விக்கு அளித்த விடையோடு பொருந்த 'நின்னுடைய வேள்வி காணிய வந்தார்; வில்லும் காண்பர்' எனக் கூறி வான்மீகியினின்றும் வேறுபட்டு நிற்கின்றான்.

24. வஸிஷ்டரும் விசுவாமித்திரரும்.

வான்மீகி

ஸர்க்கம் 51 : இந்த ஸர்க்கத்தில் இராமனையும் விசுவாமித்திரரையும் மிக வெகுவாகப் புகழ்ந்த அகலிகையின் புதல்வனுன சதானந்தர், விசுவாமித்திரரின் பெருமையை இராமனுக்குக் கூறத் தொடங்கி அவருடைய வமிசாவளியை வரிசையாகச் சொல்லிச் செல்கின்ருர்.

கம்பன்

என்று கோசிகன் கூறிட ....
.... எனவும் விளம்பி, மேல்,

மிதிலைக்காட்சி : 92, 89

மாற்றம்

இந்த ஒரே பாடலில் விசுவாமித்திரரைச் சதானந்தர் புகழ்ந்து நிறுத்துகின்ருர்.

ஆசிரியர் கருத்து

மா காவியத்தின் நாயகனின் வமிசாவளியின் பெருமை சாலும்; பிறர் பற்றிய குறிப்புக்கள் இருந்தால் போதும் எனக் கம்பன் குறுக்கி விட்டான் போலும்!

25. விசுவாமித்திரரின் வாழ்க்கை வரலாறு.

வான்மீகி

ஸர்க்கங்கள் 51-65 = 15. மிதிலைக்காட்சி :92/90
99/136 = 47 பாடல்கள்

ஸர்க்கம் : 51 : (விசுவாமித்திரர்) ஒருக்கால் சதுரங்க ஸைன்யத்துடன் பூமியைச்சுற்றி வந்தார். நாடு, நகரம், ஆறு, ஏரி, மலை, வனம், புண்யாசிரமம் முதலியவைகளைப் பார்த்துக் கொண்டு அக்ஷௌஹிணி ஸைன்யத்துடன் வஸிஷ்ட மஹரிஷியின் ஆசிரமத்திற்குப் போனார்.

கம்பன்

அரசின் வைகி அறனின் அமைந்துழி
.... அணைந்தான் அரோ.

மிதிலைக்காட்சி : 92/92

மாற்றம்

1 விசுவாமித்திரர் பூமியைச் சுற்றி வந்தார் என்கின்றது வான்மீகம்.

கம்பனோ, அவன் வேட்டைக்குச் சென்றான் என்கின்றான்.

ஆசிரியர் கருத்து

ஒரு மன்னன், குறிப்பிட்ட தேவையேதுமின்றிப் பூமி முழுதும் மாபெரும் சைன்யத்துடன் சுற்றி வருவதென்பது வீண் கால விரயம் ஆகும். ஆனால், எந்த மன்னனும் ஒரு குறிப்பிட்ட அளவிற்கான வீரர்களுடன் வேட்டைக்குச் செல்லுதல் சாதாரண நிகழ்ச்சியாகும். எனவே, கால விரயச் செய்கையை விடுத்து, நடைமுறையிலான வேட்டைக்கு மன்னன் விசுவாமித்திரன் சென்றான் என்று மாற்றியுள்ளான்.

வான்மீகி

ஸர்க்கம் 52 : மஹா பலவானுன விசுவாமித்திரர் மிகுந்த ஸந்தோஷமடைந்து நிகரற்ற தபோ பலமுடைய வஸிஷ்டரை விதிப்படி நமஸ்கரித்தார். அந்த மஹாத்மா இவரை நல்வரவு விசாரித்து ஆஸனம் கொடுத்து, வேர் கிழங்கு பழங்களால் அதிதி பூஜை செய்தார். அதைப் பெற்றுக் கொண்டு இவர் வஸிஷ்டரையும் அவருடைய தவத்தையும் அக்னி ஹோத்திரத்தையும் சிஷ்யர்களேயும் ஆசிரமங்களேயும் மிருகங்களேயும் பற்றி க்ஷேமம் விசாரித்தார். 'எல்லாம் ஸௌக்கியம்' என்று வஸிஷ்டர் பதில் சொல்லி, அரசன் ஸுகமாய் உட்கார்ந்த பிறகு அந்த பிரஹ்மபுத்திரர் 'மஹாராஜ ! தாங்கள் க்ஷேமமா? ஜனங்களே தர்மமாய் ஆண்டு வருகிறீரா? ராஜநீதி தவருமல் தனத்தைத் தர்மமாய் ஸம்பாதித்து விருத்தி செய்து காப்பாற்றி நல்ல பாத்திரத்தில் உபயோஹித்து, ஜனங்களேத் திருப்தி செய்கிறீரா? உமது வேலேக்காரர்களே நன்ருய்ப் போஷிக்கிறீரா? அவர்கள் உமது உத்தரவுப்படி நடக்கிருர்களா? சத்துருக்களே ஜயித்தீரா? உமது ஸைன்யம் நண்பர்கள் பொக்கிஷம் புத்திர பௌத்திரர்கள் பந்து பரிவாரங்கள் குறைவின்றி க்ஷேமமாக இருக்கிருர்களா? இப்படி இருப்பதே எனக்கு மிகுந்த ஸந்தோஷத்தைக் கொடுக்கும்' என்ருர். இவர், 'மஹரிஷே ! தங்களுடைய அனுக்கிரஹத்தால் எனக்கு யாதொரு குறையும் இல்லே' என்று வணக்கமாக பதில் சொன்னுர்.

பிறகு அவ்விரு தர்மவான்களும் வெகுநேரம் புண்ணியக் கதைகளேப் பேசிக்கொண்டு அளவற்ற ஸந்தோஷமடைந்தார்கள். அது முடிந்தவுடன் வஸிஷ்டர் மலர்ந்த முகத்துடன் 'மஹாராஜ! .... உமக்கும் ஸைன்யங்களுக்கும் தகுந்தபடி அதிதிபூஜை செய்ய விரும்புகிறேன்! ....' என்ருர்.

கௌசிகர், ''ஸ்வாமி! தாங்கள் இதுவரையில் பழம், கிழங்கு, வேர்களாலும் அர்க்யம், பாத்தியம் ஆசமனீயத்தாலும் என்னே உபசரித்ததே போதும் .... உத்தரவு கொடுத் தனுப்ப வேண்டும்.............. என்ருர். அப்பொழுது மூன்று காலங்களேயும் அறிந்த வஸிஷ்டர், பிறகு நேரும் விஷயங்களேப் பார்த்து விசுவாமித்திரரைப் பல தடவை நிர்ப்பந்தித்து, தன் அதிதி பூஜையைப் பெற்றுக் கொள்ள வேண்டும்' என்ருர்,

கௌசிகர் 'ஸ்வாமி! தாங்கள் இவ்வளவு தூரம் சொல்லும் பொழுது நான் தடுப்பது உசிதமல்ல. தங்களுக்கு வீண் சிரமத்தைக் கொடுக்க வேண்டுமே என்ற கவலையைத் தவிர வேறு ஆக்ஷேபமில்லை; இஷ்டப்படியே ஆகட்டும்'' என்றார். அப்பொழுது அந்த மஹா தேஜஸ்வி விசித்திரமான நிறமுடைய 'சபலை' என்ற பசுவைப் பார்த்து, 'பெண்ணே சீக்கிரமாய் வா. நான் சொல்வதைக் கேள். இந்த ராஜரிஷிக்கும் இவருடைய ஸைன்யத்திற்கும் தகுந்தபடி விருந்து செய்ய விரும்புகிறேன். யாருக்கு எது இஷ்டமோ அந்த அன்னம், பக்ஷ்யம், பானம் ரஸம், அறுசுவை பதார்த்தங்கள், கடித்துத் தின்னக்கூடிய முறுக்கு முதலியவை, நக்கிச் சாப்பிடக்கூடிய தேன் முதலியவை, உறிஞ்சக் கூடிய தயிர் முதலியவை, பலவகை வாஸனை திரவியங்கள், புஷ்பங்கள், பூச்சுகள், தாம்பூலம் யாவும் நினைத்தவுடன் குறைவின்றிப் பொழிய வேண்டும். விரும்பின யாவற்றையும் உடனே கொடுக்கும் சக்தியுள்ள காமதேனு அல்லவா? எனக்காக இவை யாவையும் வெகு சீக்கிரத்தில் ஸித்தம் செய்'' என்றார்.

கம்பன்

'அருந்ததி கணவன் வேந்தற்கு ....
.... அருள்முறை சுரந்தது அன்றே.

மிதிலைக்காட்சி : 92/93

மாற்றம்

2 வான்மீகியின் வசிட்டர் வெகுநேரம் விசுவாமித்திர மன்னனிடம் குசலப் பிரசனம் பேசியிருந்து, பின் 'விருந்துண்ண வேண்டும்' என்றார்.

கம்பனின் வசிஷ்டரோ தன்னிடம் வந்து சேர்ந்த விசுவாமித்திரனை வரவேற்றார்; விருந்திற்கு உடனே ஏற்பாடு செய்து விட்டார்.

ஆசிரியர் கருத்து

கம்பனின் வசிட்டர் மன்னன்பால் ஏதும் க்ஷேம லாபங்களைப் பற்றியும், பிறவும் பேசவில்லையென்பதல்ல.

பூமியைச் சுற்றியோ, வேட்டையாடியோ வந்தவர்களின் களைப்பைப் போக்குவதில் வசிட்டரின் எண்ணம் முந்தியது என்னும் வேகத்தைக் காட்ட முனைந்தான், கம்பன். வந்தவுடன் கிழங்கு முதலிய சிற்றுணவு தந்தது மன்னனுக்கு மட்டும் தானே! பேச்சு வார்த்தைகள், உபசரணைகள் ஆயவற்றைச் சுருக்கமாக, 'அருங்கடன் முறையின் ஆற்றி' என்று கூறி முடித்து, காமதேனுவினிடம் விருந்திற்கு ஏற்பாடு செய்தார் என விரைவு சேர்மாற்றம் செய்தான் கம்பன், வான்மீகியினின்றும்.

மாற்றம்

3 வசிட்டர் விசுவாமித்திர மன்னனிடம், அவர்களுக்கு விருந்து ஏற்பாடு செய்வதாகச் சொல்ல, அவனே வேண்டாம் என்று முன்னம் கூறி முடிவில் 'இஷ்டப்படி செய்யுங்கள்' என்று கூறி நிற்கின்றான், வான்மீகத்தில்.

கம்பனில், விசுவாமித்திரன் மறுதளிப்புப் பேச்சுக்கள் முதலியன இல்லை.

ஆசிரியர் கருத்து

கம்பனின் விசுவாமித்திரன் உபசரணைக்காகவர்வது 'வீண் சிரமம் வேண்டாம்' என்றெல்லாம் சொல்லியிருக்க மாட்டான் என்பது அல்ல. கம்பன், இந்த சாதாரண உபசரணைக்கெல்லாம், அந்தச் சூழ்நிலையில், முக்கியத்துவம் தர விழையவில்லை; வேகமாய் விருந்தளிக்கும் காட்சியைச் செப்ப எண்ணி இந்த மாற்றம் கொண்டான்.

மாற்றம்

4 வான்மீகியின் வசிட்டர், பிறகு நேரப்போகும் செய்திகளை ஞானக் கண்ணால் பார்த்ததனால் மன்னனை விருந்தேற்கப் பல தடவைகள் கட்டாயப்படுத்திக் கேட்டுக் கொண்டார்.

கம்பனில் இந்நோக்கு இல்லை.

ஆசிரியர் கருத்து

காரணங்கள் ஏதும் இன்றியும், வந்தவர்க்கு விருந்தளித்தல் கடமை என்ற பண்பாட்டின் அடிப்படையில் கம்பன் இந்த மாற்றம் புரிந்துள்ளான்.

மாற்றம்

5 'இந்த ராஜரிஷி' என விசுவாமித்திரரைக் குறிப்பிடுகின்றார், 'சபலே' என்ற பசுவினிடத்தில், வான்மீகியின் வசிட்டர்.

'வேந்தற்கு' என்றே குறிப்பிடுகின்றான், கம்பன்.

ஆசிரியர் கருத்து

அந்த விசுவாமித்திர மன்னன் 'ரிஷி' யாவது பின் நிகழ்ச்சியேயாக, அந்த நிலையில் அவனை அறிமுகப்படுத்தும் பொழுது அந்த 'ரிஷி' என்ற சொல் பொருந்தாதெனக் கருதினான் கம்பன்.

மாற்றம்

6 'சபலே' என்னும் பசுவை, வான்மீகியின் வசிட்டர் அழைத்து, 'இன்னின்ன வகையான உணவுகள் முதலியன தருதி' எனப்பட்டியல் நீட்டிச் செல்கின்றார்.

கம்பனின் வசிட்டரோ, நீயே சுரந்தருள் அமிர்தம் என மட்டும் கூறுகின்றார், 'சுரபி'யை விளித்து,

ஆசிரியர் கருத்து

தெய்விகப் பசுவாகிய அதனிடத்தில் பட்டியலைப் பகன்றால் தான் அதற்குப் புரியும் என்ற நிலையிலான மந்தத்தை அதன் மேல் ஏற்ற, கம்பன் மனம் ஒப்பாததால் இம்மாற்றம் தோன்றியுள்ளது.

வான்மீகி

ஸர்க்கம் 53 : தங்களுடைய தபோ பலத்தையும் மஹிமையையும் பார்க்கையில் ஒரு பிரார்த்தனை செய்ய விரும்புகிறேன். ஞான நிதியும் பேசும் திறமையில் நிகரற்றவருமான தங்களிடத்தில் நான் என்ன சொல்லப் போகிறேன். அநேக லக்ஷம் பசுக்களைக் கொடுக்கிறேன். இந்த 'சபலே' யை எனக்குக் கொடுங்கள். உத்தம பதார்த்தங்கள் அரசனிடத்தில் இருக்க வேண்டுமென்பது ராஜ தர்மமல்லவா? ஆகையால், இது என்னிடத்தில் இருப்பதே நியாயம் என்றார், (விசுவாமித்திரர்).

அப்பொழுது வஸிஷ்டர், 'மஹாராஜ! பசுக்களை லக்ஷ லக்ஷமாயும் கோடி கோடியாயும் கொடுத்தாலும் சபலையைக் கொடுக்க மாட்டேன். ....! இந்தக் காரணங்களாலும் உமக்குச் சொல்ல முடியாத வேறு பல காரணங்களாலும் சபலையை உமக்குக் கொடுக்க மாட்டேன்' என்றார்.

கம்பன்

மாதவ ! எழுந்திலாய், நீ ; ....
..................வேந்தருக்கு' என்கைதன்னால்

மிதிலைக்காட்சி : 93/95

''நிற்கு இது தகுவது ....
.... கொண்டு அகல்க' என்று கூற

மிதிலைக்காட்சி : 93/96

மாற்றம்

7 விசுவாமித்திரன் விரும்பிக் கேட்டு, பண்டமாற்றுப் போலே ஈடாகப் பசுக்களும், பொன்னும் மணியும் முதலாயினவும் தருவதாக வாக்களித்தும், அரச தர்மத்தைச் சுட்டிக் காட்டியும், வான்மீகத்தில் வசிட்டர் 'சுரபி'யைத் தர மாட்டேன் என்றே பல தடவை கூறுகின்றார்.

கம்பனின் வசிட்டரோ, விசுவாமித்திரன் கேட்டதுமே 'மாட்டேன் ; இல்லை' என்னாது, ''அச்சுரபி வருவதானால் நீயே அழைத்துச்செல்'' என்று தாராளமாகக் கூறி விட்டார்.

ஆசிரியர் கருத்து

மன்னன் விரும்பிக் கேட்டதை 'இல்லை' யென்று சொல்லுதல் எவர்க்கும் ஒவ்வாதது என்ற கொள்கையின் அடிப்படையிலும், 'ராஜ தர்மம்' என்று சொன்னபின் அதற்கு மாறாக நடத்தல் எந்தக் குடிமகனுக்கும் அழகல்ல என்பதை நிலை நிறுத்தும்' கொள்கையாலும், விசுவாமித்திர மன்னன் கேட்டதற்கு வசிட்டர் எதிர்மறை மாற்றம் தரவில்லை. அது மட்டுமல்ல ; 'பிரம்மாவின் புத்திரர், பாபலேச மற்றவர், புண்ணியநிதி', என்றெல்லாம் பலபடப் போற்றப்படுகின்ற ஒரு வலிமையுள்ள முனிவனின் வாயால் 'இல்லை' என்ற சொல்லை

வைப்பது அவரின் பண்பு நலன்களுக்கு அப்பாற்பட்டு அவருக்கு இழுக்கைத் தரும் என்று கருதினன், கம்பன். பண்பின் அடிப் படையால், பண்பாட்டின் அடிப்படையால் இந்த மாற்றத்தைத் திறம்படக் கையாண்டுள்ளான்.

வான்மீகி

ஸர்க்கம் 55 : பிறகு அவருடைய (விசுவாமித்திரருடைய) நூறு புத்திரர்கள் ஆயுதங்களுடன் கோபத்தால் ஜ்வலித்துக் கொண்டு வஸிஷ்டரை எதிர்க்க ஓடி வந்தார்கள். மந்திர ஸ்வரூபியான அந்த மஹரிஷி அவர்களை 'ஹூம்' என்று அதட்டினர். உடனே அவர்கள் சாம்பலானர்கள். தன் புத்திரர்கள் ஒரு நிமிஷத்தில் மடிந்ததையும் சதுரங்க ஸைன்யம் அழிந்ததையும் கண்டு அவ் வரசனுக்குச் சொல்ல முடியாத வெட்கமும் கவலையும் உண்டாயிற்று. அலை ஓய்ந்த கடலைப் போலவும், விஷப்பற்கள் பிடுங்கப்பட்ட மஹா நாகத்தைப் போலும், ராகுவால் பிடிக்கப் பட்ட சூரியனைப் போலும் திடீரென்று காந்தியை இழந்தார். புத்திரர்களையும் ஸைன்யத்தையும் பறி கொடுத்து, கொழுப் பழிந்து உத்ஸாஹமற்று, மனந்தளர்ந்து, இறகொடிந்த பக்ஷியைப் போல் தீனரானர். மிகுந்திருந்த ஓர் புத்திரனிடத்தில் ராஜ்யத்தை ஒப்புவித்து, 'குழந்தாய் ! இதை ராஜ நீதிப்படி ஜாக்கிரதையாய் ஆளக் கடவாய்' என்று கட்டளையிட்டு, தேவ கந்தர்வகிண்ணர கணங்கள் வஸிக்கும் ஹிமயமலைச் சாரலில் வெகுகாலம் சிவ பிரானைக் குறித்துக் கடுந்தவம் செய்தார். தேவ தேவரான உமாபதி, அவருடைய தவத்தால் மகிழ்ந்து, அவருடைய இஷ்டத்தை நிறைவேற்ற பிரஸன்னமானர். 'மஹாராஜ ! எதை வேண்டித் தவம் செய்கிறீர்? கேட்ட வரங்களைக் கொடுக்கிறேன். என்ன வேண்டும்?' என்ருர்.

கௌசிகர் சிவபிரானை வணங்கிக் கைகூப்பி ஸ்வாமி ! தாங்கள் என் தவத்தால் திருப்தியடைந்தால், அங்கம், உபாங்கம், உபநிஷத் ரஹஸ்யம் முதலியவைகளுடன் தனுர் வேதத்தை எனக்கு அருள வேண்டும். தேவ வானவ கந்தர்வ யக்ஷ ராக்ஷஸர் களுக்கும் மஹரிஷிகளுக்கும் எந்த அஸ்திரங்கள் தெரியுமோ அவை யாவும் எனக்குத் தெரிய வேண்டும்' என்று பிரார்த்தித் தார். அப்படியே ஆகட்டும் என்று சிவபிரான் அனுக்கிரஹித்து, கைலாஸத்திற்குப் போனர்.

ஸர்க்கம் 56 : (விசுவாமித்திரர்) அதி வேகத்துடன் (வஸிஷ்டருடைய) ஆசிரமத்திற்குப் போய் தன் அஸ்திரபலத்தால் அதை ஒரு க்ஷணத்தில் சாம்பலாக்கினுர். (வஸிஷ்ட) ரிஷிக்குக் கோபமுண்டாயிற்று. 'உன் கெட்ட நடத்தை உன்னேயே கொல்லும்! என்று யமதண்டம் போன்றதும் புகையற்றுக் கொழுந்து விட்டெரியும் காலாக்னியைப்போல் ஜ்வலிப்பதுமான தமது பிரஹ்ம தண்டத்தைக் கையிலெடுத்தார்.

(பல வகையான அஸ்திரங்களான்) அவை பயனற்றதைக் கண்டு கௌசிகர் பிரஹ்மாஸ்திரத்தைப் பிரயோகித்தார். பிரஹ்ம வித்யையை அப்யஸித்ததாலுண்டான நிகரற்ற தேஜஸால் நிறைந்த அந்த பிரஹ்ம தண்டம், விசுவாமித்திரருடைய மஹா கோரமான பிரஹ்மாஸ்திரத்தையும் விழுங்கிற்று.

கௌசிகர் தோல்வியடைந்து வெட்கத்தாலும் வருத்தத்தாலும் பெருமூச்செறிந்து, 'க்ஷத்திரிய பலத்தைச் சுட வேண்டும். பிரஹ்ம தேஜஸின் பலமே பலம் என்ன ஆச்சரியம்! வெகு காலமாகக் கடுந்தவம் செய்து சங்கரனே ஆராதித்து அவரிடமிருந்து பெற்ற திவ்யாஸ்திரங்களே இந்தப் பிராஹ்மணன் கேவலம் தபஸ்வி, ஓர் பிரஹ்ம தண்டத்தால் க்ஷணத்தில் அழித்து விட்டாரே! க்ஷத்திரியனுக்குரிய காமக்குரோதங்களே விட்டு, கடுந்தவம் செய்து வஸிஷ்டரைப் போல் பிராம்மணனுகி பிரஹ்ம ரிஷி பதவியை அடைய வேண்டும்' என்று பிரதிக்ஞை செய்தார்.

கம்பன்

'ஐ- இருபதின் மைந்தர் ....
... . கைத்தண்டினே, 'எதிர்க' என்றுன்.
மிதிலேக்காட்சி : 94/101

கடவுளர் படைகள் ஈருக் ....
... . அன்னவன் அகன்றுன் அன்றே.
மிதிலேக்காட்சி : 94/102

விட்டனன் படையை வேந்தன் ....
.... பொருபடை முரணது இற்றே.
மிதிலேக்காட்சி : 94/103

'கண்டனன் அரசன்; காணு', ...
.... உம்பர்கோன் திசையை உற்ருன்.

மிதிலைக்காட்சி : 94/104

மாற்றம்

8 தன் பிள்ளைகளும் சேனைகளும் மாய்ந்த உடனேயே விசுவாமித்திரர் வெகுகாலம் தவம் மேற்கொண்டு சிவபிரானிடம் வரம் வேண்டி அனைத்து அஸ்திர பலங்களும் பெற்ருர். அந்த கர்வத்தோடு வசிட்டருடன் போரிட வந்தார் என்கின்ருர், வான்மீகி.

தன் பிள்ளைகள் இறந்தமை கண்டு விசுவாமித்திர மன்னன் மிகவும் கோபித்து, தொடர்ந்தாற் போல் வசிட்டருடன் பொருதான் என்றும், எல்லா கணைகளையும் வசிட்டரின் கைதண்டம் தாங்கக் கண்டு, விசுவாமித்திரன் சிவபிரானை வேண்டினன் என்றும், அவரும் தோன்றி படைக்கலங்கள் அருளிச் சென்ருர் என்றும் கூறுகின்ருன் கம்பன்.

ஆசிரியர் கருத்து

வெகுகாலம் கடுந்தவமியற்றி, சிவபிரானின் வரம் பெற்று வந்தவன் வசிட்டரிடம் தோற்ருன் என்ருல் இழுக்கு எனக் கருதினன், கம்பன். எனவே இடையில் சிவனை வேண்டித் தவமிருந்து படைபல பெற்று மீண்டும் வந்து வசிட்டருடன் பொருதினன் என்பதை கம்பன் ஏற்கவில்லை.

வான்மீகி

ஸர்க்கம் 57 : (விசுவாமித்திரர்) தன் மனைவியுடன் தெற்கே சென்று இந்திரியங்களை அடக்கி, கிழங்குவேர் பழங்களையே புஜித்துக் கொண்டு கடுந்தவம் செய்தார். பிறகு, அவருக்கு ஹவிஷ்யந்தன், மதுஷ்யந்தன், த்ருடகேந்ரன், மஹாரதனென்ற அனேக புத்திரர்கள் பிறந்தார்கள். அவர்கள் ஸத்தியத்திலும் தர்மத்திலும் மனம் நாடினவர்கள் இப்படிக் காமக் குரோதங்களை முற்றிலும் விலக்காமல் செய்த தவம் பூர்ணமாய்ப் பலிக்கவில்லை.

கம்பன்

மாண்டமா தவத்தோன் செய்த ....
.... திலோத்தமை எனும் சொல்மானே.

மிதிலைக்காட்சி : 94/105

அன்னவள் மேனி காணு, ...
.... எனக் கனன்று நக்கான்.

மிதிலைக்காட்சி : 95/106

'விண் முழுது ஆளி செய்த ....
.... யமன் திசை தன்னை உற்றான்.

மிதிலைக்காட்சி : 95/107

மாற்றம்

9 தவம் இருக்கத் தன் மனைவியுடன் தெற்கே சென்ற விசுவாமித்திரன் அங்கும் பிள்ளைப் பேற்றினைப் பெற்றார் எனக் குறிப்பிடுகின்றார். வான்மீகி.

தனியே சென்று தவம் செய்த விசுவாமித்திரனின் தவத்தைக் கலைக்கத் தேவேந்திரனின் தூண்டுதலால் வந்த திலோத்தமையின்பால் விசுவாமித்திரன் காமத் தொடர்பு கொண்டான் என்கின்றான், கம்பன்.

ஆசிரியர் கருத்து

தவம் புரியத் தன் மனைவியுடன் சென்றிட்ட விசுவாமித்திரர் பிள்ளைப் பேறுகள் பெற்றார் என்றமையின் விசுவாமித்திரர் அப்பொழுதும் காமம் விட்டாரில்லையெனக் காட்டினார், வான்மீகி. ஆனால் மனைவியின் வழி மகப்பேற்றினை அடைதல் ஓரளவிற்குக் காமத்தின் உந்துதலேயானாலும் அஃது தனக்குற்றவள்பால் ஏற்பட்டதேயாகி, பாபச்செயல் ஆகாது; ஆனாலும் தவப்பயனைப் பெறவொட்டாது. வேற்று மாதர் உறவு தவப்பயனைப் பெறவொட்டாமல் தடுப்பதுடன் உள்ள நலத்தையும் அழித்துவிடும் என்பதை உணர்த்தும் பொருட்டே விசுவாமித்திரருக்கும் திலோத்தமைக்கும் தொடர்பினைக் கூட்டி விட்டான், கம்பன்.

ஆக, விசுவாமித்திரர் காமத்தால் தவவலிமை குன்றினர் என்பதில் வான்மீகியும் கம்பனும் கருத்து வேறுபாடு கொள்ள வில்லையென்றாலும் காமத்தின் வேறுபாட்டைக் காட்ட இந்திரனால் தூண்டப் பெற்ற திலோத்தமையை இணைத்து, யாற்றம் காட்டியுள்ளான், கம்பன்.

வான்மீகி

ஸர்க்கம் 57 : (தொடர்ச்சி) அக் காலத்தில் இக்ஷ்வாகு வம்சத்தில் வந்த திரிசங்கு அயோத்யையை ஆண்டான். அவன் ஸத்தியம் தவருதவன்; இந்திரியங்களை அடக்கினவன்; தான் யாகம் செய்து அந்தச் சரீரத்துடன் ஸ்வர்க்கத்திற்குப் போக வேண்டுமென்ற எண்ணம் அவனுக்கு உண்டாயிற்று. தன் குருவான வஸிஷ்டரிடத்தில் அதைத் தெரிவிக்க, அவர் 'குழந்தாய் ! இதைச் செய்விக்க என்னுல் முடியும். பலர் இவ்வழியால் ஸ்வர்க்கமடைந் திருக்கிருர்கள். மனித ஸரீரத்துடன் ஸ்வர்க்கத்திற்குப் போகிரு னென்று சுருதி சொல்லுகிறது. ஆனல், சென்ற கல்பங்களில் நடந்த விருத்தாந்தத்தை ஆலோசித்துப் பார்க்கும் பொழுது இவ்விதமான கர்ம பலன் உனக்கும் கிடைக்காது. ஆகையால் இதைப் பற்றி நீ முயற்சி செய்ய வேண்டாம்' என்ருர்.

அவ்வரசன் அதைக் கேட்டு தெற்கே சென்று வஸிஷ்ட புத்திரர்கள் அக்னியைப் போல் ஜ்வலித்துக் கொண்டு தவம் செய்யுமிடத்திற்கு வந்தான். தன் குரு புத்திரர்களை நமஸ்கரித்துப் பூஜித்து, வஸிஷ்டரால் தான் தடுக்கப்பட்டதை நினைத்து வெட்கத்தால் சற்றுத் தலை குனிந்து அந்த மஹாத்மாக்களைக் கை கூப்பி வணங்கி, எல்லோரும் சரணமடையத் தகுந்த தங்களைச் சரணமடைகின்றேன். என்னை ரக்ஷியுங்கள். உங்கள் பிதா என் குருவாக இருந்தும் அவரை நான் சரணமடைந்தும் அவர் என்னை அங்கீகரிக்கவில்லை. மனுஷ்ய சரீரத்துடன் ஸ்வர்க்கம் போக ஒரு மஹா யக்ஞத்தைச் செய்ய விரும்புகிறேன். தாங்கள் அனுமதி கொடுத்து நடப்பித்து என்னை அனுக்ரஹிக்க வேண்டும். தாங்கள் பிராஹ்மணேத்தமர் உத்தமமான தவம் செய்கிறவர்கள் குரு புத்திரர்கள். உங்களெல்லோரையும் அடி பணிந்து தலை வணங்கி வேண்டுகிறேன். குருவால் தடுக்கப்பட்ட எனக்குக் குரு

புத்திரர்களைத் தவிர வேறு மதியில்லை. இக்ஷ்வாகு வமிசத்தரசர்களுக்கு புரோஹிதரான வஸிஷ்டரே பரகதி. அரசர்களுக்கு எவ்வித ஆபத்து நேர்ந்தாலும் தீர்த்து வைப்பார். எதைக் கோரினாலும் அதை அனுக்ரஹிப்பார். அவர் என்னை ரக்ஷிக்காவிட்டால் அதற்கடுத்த தாங்களே எனக்குப் பர தெய்வம்'' என்றான்.

ஸர்க்கம் 58 : அதைக் கேட்ட வஸிஷ்ட புத்திரர்கள் அடங்காக் கோபம் கொண்டு, அடே! துர்புத்தி பிடித்தவனே .... அவருக்கு (எங்கள் பிதாவிற்கு) விரோதமாக இந்த யாகத்தைச் செய்வித்து அவரை அவமானம் செய்ய எங்களுக்குச் சக்தியுண்டென்று எண்ணினாயோ? அந்தக் காரியத்திற்கு எங்களைத் தவிர வேறு மனுஷ்யர்கள் கிடைக்கவில்லையா? போ' என்றார்கள்.

இப்படி அவர்கள் கடுங்கோபத்துடன் சொல்லக் கேட்டு, திரிசங்கு சற்றும் கலங்காமல் என் குலகுரு என்னைக் கைவிட்டார். ரிஷி புத்திரர்களான நீங்களும் கைவிட்டீர்கள். ஆனால் இதற்காக என் எண்ணத்தை நிறைவேற்றாமல் விடுவதில்லை. வேறு யாரையாவது சரணமடைந்து என் காரியத்தை முடித்துக் கொள்ளுகிறேன். தபஸின் மஹிமையாலும் பலத்தாலும் இப்படி நீங்கள் சொல்லுவது உங்களுக்குத் தகும். போய் வருகிறேன். உங்களுக்கு ஸகல மங்களங்களும் உண்டாகட்டும் என்று அங்கிருந்து புறப்பட்டான். வஸிஷ்ட புத்திரர்கள் அந்தக் கோரமான வார்த்தையைக் கேட்டு ஆச்சரியத்தால் மெய் மறந்தார்கள். தபோநிதியும் பிரஹ்ம புத்திரரும் மஹரிஷியும் ஞானத்திலும் சக்தியிலும் நிகரற்றவருமான வஸிஷ்ட பகவானைக் குல குருவாயடைந்து, அவரை வேண்டாமென்று தள்ளிவிட்டு, வேறொருவரைச் சரணமடையப் போவதென்ற வார்த்தையே அவர்களுக்கு மஹா கோரமாய்த் தோன்றிற்று. ''அடே, துஷ்டா! சண்டாளனாகக் கடவாய்'' என்று கடுங்கோபத்துடன் சபித்தார்கள்.

கம்பன்

தென் திசை அதனை நண்ணிச் ....
.... யான் அறிந்திலன் அது' என்றான்.

மிதிலைக்காட்சி : 95/108

நினக்கு ஒவாது ஆயின் ....
.... நீசன் ஆய்விடுதி' என்ருன்.

மிதிலைக்காட்சி : 95/109

மாற்றம்

10 வேருெரு குருவை நாடித் தன் எண்ணத்தை நிறைவேற்றிக்கொள்வதாகக் கூறும் திரிசங்கு, வசிட்ட புத்திரர்களால் சபிக்கப்படுகின்ருன், வான்மீகத்தில்.

அவன் அவ்வாசகத்தை வசிட்டரிடமே கூற, அவராலேயே சபிக்கப்படுகின்ருன், கம்பனில்.

ஆசிரியர் கருத்து

காரண காரியங்களோடு விளக்கம் தந்து, திரிசங்குவைத் தன் எண்ணத்தைத் தவிர்க்கச் சொல்லியும் அவன் கேளாமையினுல், வான்மீகியின் வசிட்டர் வேண்டுமானுல் தானே நேரடியாக அவனை சபித்திருக்கலாம்; ஆனுல் அங்கு அவ்வாறில்லை!

தனக்கு, திரிசங்கு குறிப்பிட்ட வேள்வி தெரியாது என்றே சொல்லிவிட்ட கம்பனின் வசிட்டர் அவனை சபிக்க நியாயமில்லை. அவ்வாறு சபித்தது வசிட்டருக்கு அகங்காரத்தைத்தான் கற்பிக்கின்றது.

எனவே, கம்பன் செய்துள்ள இந்த மாற்றம் சிறப்புறவில்லை; தேவையற்றது.

மாற்றம்

11 பூத உடலோடு சுவர்க்கத்திற்குச் செல்லும் யாகம் செய்ய விழைந்த திரிசங்குவினிடம், வான்மீகியின் வசிட்டர், தனக்கு அது தெரியும் என்றும், ஆனுல் முன்னைப் பிறப்பின் பலன்களை அனுபவித்தலே முறை என்பதால், தான் அந்த யாகத்தைச் செய்ய விரும்பவில்லையென்றும் கூறுகின்ருர்.

கம்பனின் வசிட்டரோ, தனக்கு அந்த வேள்வியே தெரியாது என்று கூறுகின்ருர்.

ஆசிரியர் கருத்து

வசிட்டரின் வல்லமையையும், அவர், விசுவாமித்திரர் உட்பட பிறரை முறையான முனிவர்களாக ஒப்புக்கொள்ளும் தகுதி வாய்ந்த அளவிற்குச் சிறந்தவர் என்பதையும் எண்ணிச் சீர்தூக்கிப் பார்க்கும்பொழுது, சூழ்நிலை காரணமாகக் கூட அவர் தனக்கு ஒரு வேள்வி தெரியாது என்று கூறுவது சீரியதல்ல.

எனவே, இந்த வகையில் கம்பன் செய்த மாற்றம் தேவையற்றது; சிறப்பற்றது.

வான்மீகி

ஸர்க்கம் 59 : 'மஹோதயரும் வஸிஷ்ட புத்திரர்களும் மாத்திரம் கோபத்தால் மனம் கலங்கி, கண்கள் சிவக்க, வார்த்தை குளற, 'யாகம் செய்விக்க பிராம்மணனுக்கே அதிகாரம். க்ஷத்திரியனை கௌசிகன் யாகம் செய்யப் போகிறானா? சண்டாளர்களுக்கு யாகம் செய்ய அதிகாரமுண்டோ? வஸிஷ்டர் சாபத்தால் சண்டாளனான திரிசங்கு யாகம் செய்யப் போகிறானா? .... கௌசிகன் அவர்களை எவ்வளவு ரக்ஷித்தாலும், நல்ல கதி அடைவதைப் பார்ப்போம்' என்று வெகு நிஷ்டூரமாகச் சொன்னார்கள் என்றார்கள்.

கௌசிகர் அதைக் கேட்டுக் கோபத்தை அடக்க முடியாமல் நெருப்புப் பொறிகள் கண்களிலிருந்து பறக்க, 'நான் தோஷமற்றவன் .... என்னை தூஷித்த வஸிஷ்ட புத்திரர்கள் இப்பொழுதே கால பாசத்தால் கட்டுண்டு யம லோகம் போகட்டும்; எரிந்துசாம்பலாகட்டும். மஹோதய னென்ற துர்புத்தி பிடித்தவன், எல்லோராலும் தூஷிக்கப்பட்டு நிஷாதனாகட்டும்''. என்று ஸகல ரிஷிகளும் கேட்டுக் கொண்டிருக்கையில் கோரமாய்ச் சபித்தார்.

கம்பன்

''இற்றதோ?'' என நக்கு, ...
.... துறை புலையற்கு ஈவான்.

மிதிலைக்காட்சி : 96/113

'என்று உரைத்து, யாங்கள் ....
.... அடவிகள் தோறும் சென்றூர் !
மிதிலைக்காட்சி : 96/114

மாற்றம்

12 திரிசங்குவிற்காக விசுவாமித்திரர் யாகம் செய்வதை எதிர்த்தவர்கள் மகோதயரும், வசிட்ட புத்திரர்களும், வான்மீகத்தில். அவர்கள் பெற்ற சாபமோ, முறையே, நிஷாதன் ஆதலும், எரிந்து சாம்பல் ஆதலும்.

கம்பனில், விசுவாமித்திரனின் யாகத்தை எதிர்த்த மகோதயனைக் காணவில்லை ! வசிட்ட புத்திரர்கள் பெற்ற சாபமோ, கிராதர் ஆகிப் போதல் !

ஆசிரியர் கருத்து

இம் மாற்றத்தின் தேவையென்னே ?

வான்மீகி

ஸர்க்கம் 60 : பிறகு, கௌசிகர் இந்திராதி தேவதைகளை அழைத்து, ஹவிர்ப் பாகங்களைப் பெற்றுக் கொள்ளும்படி பிரார்த்தித்தார் ; அதிகாரமில்லாதவன் நியாய விரோதமாய்ச் செய்யும் கிரியைகள் செய்யப்படாதவை என்று விதிப்படி தேவதைகள் அவருடைய வார்த்தையை லக்ஷ்யம் செய்யவில்லை; வரவில்லை. மஹா தபஸ்வியான காதி புத்திரர் கடுங்கோபம் கொண்டு கையிலிருந்து, ஸ்ருவத்தைத் தூக்கி 'திரிசங்குவே ! உன்னை இந்த மனுஷ்ய சரீரத்துடன் தேவதைகள் வஸிக்கும் ஸ்வர்க்கத்திற்கு அனுப்புவதற்குச் செய்த யாகம் தேவதைகளின் பிடிவாதத்தாலும் இருமாப்பாலும் நிறைவேறவில்லை. போகட்டும். இதுவரையில் கடுந்தவம் செய்து நான் ஸம்பாதித்த விரியத்தைப்பார். மனுஷ்ய சரீரத்துடன் ஸ்வர்க்கத்தை அடைவது வெகு கஷ்டமான காரியம் இது வரையில் நான் ஸம்பாதித்த தவத்திற்குப் பயனிருந்தால், என் தபோ மஹிமையால், நீ இந்தச் சரீரத்துடன் தேவலோகம்போ' என்றூர். உடனே ரிஷிகள் யாவரும் பார்த்துக் கொண்டிருக்கையில் திரிசங்கு அந்த மனுஷ்ய சரீரத்துடன் பூமியிலிருந்து தேவலோகத்திற்குப் போனுன்.

கம்பன்

'என்று உரைத்து, ...
.... 'நிராசனர் வருக' என்றான்.

மிதிலைக்காட்சி : 96/114

''அரைசன் இப்புலையற்கு என்னே ....
.... ஓங்கினன் விமானத்து உம்பர்.

மிதிலைக்காட்சி : 96/115

மாற்றம்

13 இந்திராதி தேவர்கள் யாகத்தின் அவிர்ப் பாகங்களை ஏற்றுக் கொள்ள மறுத்ததால் திரிசங்குவை விசுவாமித்திரரால் சுவர்க்கத்திற்கு அனுப்ப முடியவில்லை; எனவே, தன்னுடைய தவத்தின் பயனால் அவனை தேவலோகத்திற்குச் செல்லும்வண்ணம் செய்தார் என்பது வான்மீகம்.

நிராசனர் வாராது சிரித்து நின்றதனால், தன் தவ வலிமையாலேயே திரிசங்குவை தேவலோகம் போகச் செய்தார் விசுவாமித்திரர் என்பது, கம்பன்.

ஆசிரியர் கருத்து

மேற் குறிப்பிட்டுள்ள மாற்றத்தின் அடிப்படைக் காரணம், வான்மீகியின்படி திரிசங்கு துவக்கத்திலேயே வசிட்டரிடம் கேட்டது, உடலுடன் சுவர்க்கத்திற்குச் செல்வதற்கான யாகம் செய்ய வேண்டி! ஆனால், கம்பனின் திரிசங்கு கேட்டதுவோ துறக்கம், அதாவது தேவலோகம் செல்லச் செய்ய வேண்டும் என்பதுவே!

சுவர்க்கமும் தேவலோகமும் வேறு வேறல்ல, ஒன்றே என்று எண்ணி கம்பன் இம் மாற்றம் செய்தானோ? சுவர்க்கமும் தேவலோகமும் வேறு வேறு என்று கம்பனும் ஒப்பியிருந்தால் இந்த மாற்றம் சிறப்புறவில்லை. காரணம், அந்த விசுவாமித்திரரை, 'பிரஹ்ம ரிஷி' என்று பின்னால் ஒப்புக் கொள்ளப் போகும், வசிட்டரினும், விசுவாமித்திரரைச் சிறக்கச் செய்வது

சரியல்ல. மேலும் விசுவாமித்திரர்க்கு ஒரு தோல்வி காட்டி, மாற்று முயற்சியில் வென்று காட்டிட்டிருந்தால் சிறந்திருக்கும்.

வான்மீகி

ஸர்க்கம் 61 : அக்காலத்தில் அம்பரீஷனென்ற அயோத்யாதிபதி ஒரு யாகம் செய்ய ஆரம்பித்தான். அதில் இந்திரன் யாக பசுவைக் கொண்டு போய் விட்டான். ரித் விக்குகள் ''மஹாராஜ! உன் அஜாக்கிரதையால் இந்தப் பசு இழக்கப்பட்டது. பிரஜைகளை அரசன் தர்மமாய் ரக்ஷிக்கா விட்டால் இவ்விதமான அபாயங்கள் நேர்ந்து நாசம் செய்யும்; இந்தப் பாபம் போக, மஹா பிராயச் சித்தம் செய்ய வேண்டும். அதே பசுவையாவது அதற்குப் பதிலாக மனுஷ்யனையாவது யாக தினத்திற்குக் கொண்டு வர வேண்டும்'' என்றார்கள்.

அம்பரீஷன் தேசங்களிலும், நகரங்களிலும், பட்டணங் களிலும், புண்ணியாசிரமங்களிலும் கிராமங்களிலும் வெகு ஜாக்கிரதையாகத் தேடினன். எண்ண முடியாத பசுக்களையும் தன தான்யங்களையும் கொடுப்பதாகச் சொன்னன். நரபசு கிடைக்கவில்லை. 'பிருகு துந்தம்' என்ற ஸ்தலத்தில் ரிசீகரென்ற ரிஷி பார்யையோடும் மூன்று புத்திரர்களோடும் வஸித்துக் கொண்டிருப்பதை ஒருநாள் கண்டு, அவரை நமஸ்கரித்துக் கை கூப்பி, வணக்கமாய் க்ஷேமம் விசாரித்து, 'ஸ்வாமி! நான் யாகம் செய்யும் பொழுது பசுவை யாரோ கொண்டு போய் விட்டான். அதற்குப் பதிலாக ஒரு நர பசுவைத் தேடிக் கொண்டு அலைகிறேன்; கிடைக்கவில்லை. முடிவில் தங்களையே சரணடைகிறேன். தங்களுடைய மூன்று புத்திரர்களில் ஒருவரை எனக்கு யாகப் பசுவாகக் கொடுத்து அதற்கு பதிலாக இஷ்டமான பசுக்களையும் தனத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள். எப்படியாவது என்னைக் கிருதார்த்தனுகச் செய்ய வேண்டும் .... '' என்முன். மஹா தேஜஸ்வியான ரிசிகர் ''மஹாராஜ! வம்சத்தை விருத்தி செய்யும் மூத்த புத்திரனை ஒரு நாளும் விற்க மாட்டேன்''. என்ருர். அவருடைய மனைவி ''மூத்த புத்திரனை விற்க மாட்டேன் என்று என் பர்த்தா சொன்னுர். இளையவனிடத்தில் எனக்கு விசேஷ பிரியம். அவனை நான் விற்க மாட்டேன். பிதாவிற்கு மூத்த புத்திரனிடத்திலும் மாதாவிற்கு இளையவனிடத் திலும் அதிக பிரியமுண்டென்று உமக்குத் தெரியாதா?'' என்ருள்.

சுனச்சேபனென்ற இரண்டாவது புத்திரன் ''மஹாராஜ! மூத்த மகனை விற்கக் கூடாதென்று என் பிதாவும் இளையவனுன சுனகனை விற்கக் கூடாதென்று என் மாதாவும் சொல்லி விட்டார்கள். நடுவிலிருக்கும் என்னை அவர்கள் ஸம்மதித்ததாகத் தோன்றுகிறது. என்னை அழைத்துக் கொண்டு போம்'' என்ருன்.

கம்பன்

குதைவரி சிலைவாள் தானைக் ....
.... அடவிகள் துருவிச் சென்ருன்.

மிதிலைக்காட்சி : 97/120

நல்தவ ரிசிகன் வைகும் ....
.... மன்னவன் தன்னை நோக்கி,

மிதிலைக்காட்சி : 97/121

''கொடுத்தருள் வெறுக்கை ....
.... அம் சூழல் புக்கான்.

மிதிலைக்காட்சி : 97/122

மாற்றம்

14 அம்பரீடனின் அஜாக்கிரதையினுல் யாகப்பசு திருட்டுப் போயிற்று என்றும், யாக தினத்திற்குள் அதே பசு திரும்ப வர வேண்டும், இன்றேல் தக்க நரபசு வேண்டும் என்ற நிலையால் அவன் நரபசு தேடலாயினுன் என்பதுவும் வான்மீகம்.

யாகம் செய்வதற்கென்று ஓர் மைந்தன் தேவையென அம்பரீடனன் தேடலானுன் என்று மட்டும் கம்பன் கூறுகின்ருன்.

ஆசிரியர் கருத்து

மாற்று யோசனையினுல் அம்பரீடன் நரபசு தேடினுன் என்பதற்கு ஏனே கம்பன் முக்கியத்துவம் காட்டவில்லை! அடிப் படைக் காரணம் எதுவானுலும் நரபசு ஒன்று தேவைப்பட்டது என்று நினைந்து விட்டிட்டான் போலும்! என்ருலும் இந்த மாற்றம் தேவையற்றது.

மாற்றம்

15 ரிசிகன் மூன்று பிள்ளைகளுள் ஒருவனை அம்பரீடனுக்கு யாக நிமித்தம் தர நேரடியாக ஒப்புக் கொண்டதாக இல்லை, வான்மீகத்தில்.

கம்பனில் மன்னன் கேட்டதும் 'இசைந்தனர்' என உள்ளது.

ஆசிரியர் கருத்து

தந்தைக்கு மூத்தவன் பேரிலும், தாய்க்குக் கடைசிக் குமரன் பேரிலும் அதிகப் பற்றுதல் இருந்தாலும், பிற பிள்ளைகளை நரபசுவாய் ஒப்படைக்க எந்தப் பெற்றோர்க்கும் மனம் ஒப்பாது எனவே, 'இசைந்தர்' என்பது மனோதத்துவ முறையில் ஏற்புடைத்தன்று!

மாற்றம்

16 வான்மீகியின்படி, ரிசிகன் தான் முதலில் மூத்தவனை விற்க மாட்டேன்' என்றான்; அதன் பின் தான், தாய் இளையவனை நான் விற்க மாட்டேன்' என்றாள்.

கம்பனிலோ, பெற்றவள் 'இளவல் எற்கே' என்ற பின் தந்தை 'முன்' என்றான் ('முன்னவன் எற்கே' என்று வழி மொழியும் முறையில்.)

ஆசிரியர் கருத்து

உலகியல் நியதிப்படி இந்த மாதிரியான இக்கட்டான நிலையில் தாய்தான் முதலில் பாசத்திற்கு அடிமையாகிப் பேச்சினை விட்டிடுவாள் என்ற காரணமோ, கம்பன் இந்த மாற்றத்தை ஏற்றதற்கு!

வான்மீகி

17 ஸர்க்கம் 63 : விசுவாமித்திரரும் மேனகையும்.
ஸர்க்கம் 64 : விசுவாமித்திரரும் ரம்பையும்.

இந்த இரண்டு ஸர்க்கங்கள் முழுவதிலும் தேவர்களால் தூண்டப்பட்டு வந்த, மேனகையின் மோக வலையில் பட்டும், ரம்பையின் சாகசத்தைப் புரிந்து கொண்டு அவளைச் சபித்தும் தம் தவ வலிமையை அவ்வப்போழ்தே விசுவாமித்திரர் இழந்ததை வான்மீகி விஸ்தாரமாகக் கூறியுள்ளார்.

கம்பன்

கம்பன், இந்த இரு தேவ கன்னிகைகளையோ அவர்களால் விசுவாமித்திரரின் நிலைகளையோ காட்டவில்லை.

மாற்றம்

மூல நூலில் இருக்கும் இரண்டு காட்சிகள் இல்லை.

ஆசிரியர் கருத்து

ஏற்கனவே, திலோத்தமையால் விசுவாமித்திரரின் தவம் வலிமை இழக்கப்பட்டது விளக்கப்பட்டுள்ளதால், திரும்பத் திரும்ப மாபெரும் முனிவர்களும் காமத்தாலும் சினத்தாலும் மாசுபடும் தன்மையை விளக்கிக் கொண்டேயிருந்தால் நீதிநெறிக் காவியத்திற்குச் சிறப்பு குன்றும் என நினைந்து, கம்பன் விட்டிட்டானோ என்னவோ! எதுவானாலும் இம் மாற்றத்தினால் குறையேதும் ஏற்படவில்லை.

வான்மீகி

18 ஸர்க்கம் 65 : ''அவர் (வசிஷ்டர்) என்னை பிரஹ்மரிஷி என்று ஒப்புக்கொள்ளட்டும். என் மனத்திலுள்ள கோரிக்கை இதே. இதை நிறைவேற்றின பிறகு நீங்கள் (தேவர்கள்) இஷ்டப் படி போகலாம். இல்லாவிட்டால் மறுபடியும் தவம் செய்வேன்', என்றார் (விசுவாமித்திரர்)

உடனே தேவர்கள் வஸிஷ்டரைப் பிரார்த்தித்து, ''ஸ்வாமி! எங்களுடைய வார்த்தையை நிஜமாக்க வேண்டும்'' என்றார்கள். அவர் ''விசுவாமித்திரரே! நீர் பிரஹ்மரிஷியே'' என்றார்.

கம்பன்

கம்பன் இச் செய்தியை எடுத்துக் காட்டவில்லை.

மாற்றம்

மூலநூலில் இருக்கும் காட்சி இல்லை.

ஆசிரியர் கருத்து

முன்னம் வசிட்டரிடத்தும் பின்னர் விசுவாமித்திரரிடத்தும் வில் வித்தைகள் இராம இலக்குவர்கள் பயின்ற காரணத்தால் வசிட்டர் வாயால் விசுவாமித்திரர் 'பிரஹ்மரிஷி' என்று போற்றப்பட்ட நிகழ்ச்சி இடம் பெறல் சிறப்புறும். எனவே, கம்பன் இக் காட்சியை விட்டிருக்கத் தேவையில்லை.

வான்மீகி

19 கீழ்க்காணும் (கம்பன் பகரும்) காட்சி வான்மீகத்தில் இல்லை.

கம்பன்

கம்பன் பாடல்கள்: 139-153. (இந்தப் பதினைந்து பாடல்களில் இராமன் சீதையை நினைந்துருகும் நிலை முதலியன வர்ணிக்கப் பட்டுள்ளன.)

மாற்றம்

மூலநூலில் இல்லாத காட்சி கம்பனில் உள்ளது.

ஆசிரியர் கருத்து

தமிழர் நாகரிகப்படி முன்னமேயே தலைவன் (இராமன்) தலைவியை (சீதையை) சந்திக்கும் காட்சியை உட்புகுத்தியதால் ஏற்பட்ட மாற்றம் இது. முதலில் கொண்ட மாற்றத்தால் இம் மாற்றமும் தேவையானதே.

26. வில்லின் கதை.

வான்மீகி

ஸர்க்கம் 66 : அப்பொழுது கௌசிகர், ''இதோ இருக்கும் ராம லக்ஷ்மணர்கள் தசரதருடைய புத்திரர்கள், க்ஷத்திரிய சிரேஷ்டர்கள்; பல பராக்கிரமத்தில் பிரஸித்தர்கள். உம்மிடத்திலிருக்கும் சிவதனுஸைப் பார்க்க வந்திருக்கிறார்கள். அதை இவர்களுக்குக் காட்டும். உமக்குப் பரம க்ஷேமமுண்டாகட்டும். அதைப் பார்த்துத் திருப்தியடைந்து திரும்பிப் போகட்டும்'' என்றார், ஜனகர், இந்த வில் எனக்குக் கிடைத்த காரணத்தையும், அது இங்கு இருப்பதற்குப் பயனையும் சொல்லுகிறேன். கேளுங்கள் .... என்றார்.

கம்பன்

இருந்த குலக் குமரர்தமை, ...
.... அவர் தகைமை பேசலுற்றான்.

மிதிலைக்காட்சி : 103/157

மாற்றம்

1 இராம இலக்குவர்கள் மிதிலைக்கு வந்ததின் முக்கிய நோக்கம் 'சிவ தனுசைப் பார்த்தல்' என்கின்றார், வான்மீகியின் விசுவாமித்திரர்.

'சனகனின் வேள்வியைக் காணல்' அவர்களின் முக்கிய நோக்கம் என்கின்றார். கம்பனின் விசுவாமித்திரர்.

ஆசிரியர் கருத்து

மிதிலைக்குப் பிரயாணம் தொடங்கியபொழுது வான்மீகியின் முனிவர்கள் ராம இலக்குவர்கள் அங்குவரின் சிறப்புமிக்க, வில்லைக் காணலாம் என்றனர் (ஸர்க்கம் 31). கம்பனின் விசுவாமித்திரரோ 'சனகன் வேள்வியைக் காண்போம்' என்றார் (75/58). எனவே, அங்கு செய்யப் பெற்ற மாற்றத்திற்கு ஏற்ப இங்கேயும் இம்மாற்றம் ஏற்பட்டுள்ளது, தேவையானதே.

மாற்றம்

2 யாக சாலையில் விசுவாமித்திரர்-சனகர் பேச்சு வார்த்தைகள் நடக்கும் பொழுது, சனகர் வில்லின் கதையை விரிவாகக் கூறுகின்றார், வான்மீகத்தில். கம்பனிலோ, விசுவாமித்திரர் இராம இலக்குவர்களின் குல முறையை விளக்கமாகக் கூறிச் செல்கின்றார்.

ஆசிரியர் கருத்து

சபைக்கு வில் வருமுன்னே அதனைப் பற்றி விளக்கிக் கொண்டிருப்பதை விட அஃது சபைக்கு வந்த பின்னே வர்ணிப்பதே மேல்; ஆனால், அவ்வில்லை ஒடித்து சீதையை மணம் புரியப் போகும் இராமனின் வரலாறும் பெருமையும் அனைவர்க்கும் அறிவித்து வைத்தால், அந் நிகழ்ச்சியின் பின் யாரும் மணமகன் குலம் குணம் முதலிய தகுதிகள் பற்றி வணக்கம் செய்ய வேண்டியதில்லை என்று இம்மாற்றத்தைப் புகுத்தியுள்ளான்.

27. வில்லொடித்த வீரன்

வான்மீகி

ஸர்க்கம் 67 : ஜனகர் இப்படிச் சொல்ல (ஸர்க்கம் 66–வில்லின் வரலாற்றைச் சொல்ல) கௌசிகர் ''மஹாராஜ ! ராமனுக்கு அந்த வில்லைக் காட்டும்'' என்ருர். .... அந்த இரும்புப் பெட்டியை (வில்லிருந்த பெட்டி) மந்திரிகள் ஜனகருக்கு முன் வைத்து, எல்லா அரசர்களாலும் பூஜிக்கப்பட்ட இந்த சிரேஷ்ட மான வில்லைப் பார்க்க வேண்டும் என்றீர்களே. இதோ கொண்டு வந்திருக்கிருேம்''. என்ருர்கள். ஜனகர் கை கூப்பிக் கௌசிகரை நமஸ்கரித்து, அவரையும் ராம லக்ஷ்மணர்களையும் பார்த்து ''மஹரிஷே! இந்தச் சிவ தனுஸை ஜனக வம்சத்தரசர்கள் வெகு காலமாய்ப் பூஜித்து வருகிருர்கள். .... இப்படி மஹா வீரியம் பொருந்திய வில்லை ராம லக்ஷ்மணர்கள் பார்க்கட்டும்'' என்ருர்.

ஜனகர் இப்படிச் சொல்ல விசுவாமித்திரர், ''குழந்தாய்! ராம! இந்த வில்லைப் பார்'' என்ருர். பிரஹ்ம ரிஷியின் உத்தரவுப் படி ராமன் பெட்டியின் மூடியைத் திறந்து வில்லைப் பார்த்து, ''ஸ்வாமி இந்த சிரேஷ்டமான தனுஸைக் கையால் தொடட்டுமா? இதை எடுத்து வளைத்து நாணேற்றலாமோ? என்ருர். ஜனகரும் கௌசிகரும் அப்படியே செய்'' என்ருர்கள்.

கம்பன்

மாற்றம் யாது உரைப்பது? ....
.... கடல் ஏற்றும்' என்றனன்.

காா்முக : 107/1

என்றனன், ஏன்று, தன் எதிர் ....
.... கார்முகச்சாலை புக்கனர்.

கார்முக : 108/2

போதகம் அனையவன் பொலிவை ....
.... காதலன் கூறஸ் மேயினுன்.

கார்முக : 109/11

நினைந்த முனி பகர்ந்த எலாம் ....
.... நெடுஞ்சிலையை நோக்கினன்.

கார்முக : 111/25

மாற்றம்

1 வில்லினைக் காட்டும் முன்பிருந்தே (ஸர்க்கம் 66 ல் தொடங்கி ஸர்க்கம் 67 பகுதி வரை) வில்லின் வரலாற்றையும் பெருமையையும் சனகரே சொல்லிக் கொண்டிருக்கிறார், வான் மீகத்தில்.

வில் வந்த பின்னே அதனைப் பற்றிச் சதானந்தர் எடுத் துரைக்கின்றார், கம்பனில்.

ஆசிரியர் கருத்து

தன் மகளின் திருமணத்திற்கு சோதனைப் பொருளாய் அமைந்துவிட்ட ஒரு வில்லைப் பற்றிப் பெண்ணின் தந்தையே பலபடப் புகழ்ந்து பேசிக் கொண்டிருத்தல் ஏதோ கர்வமும், தற் பெருமையும், மமதையும் போன்றவை கலந்த போக்காய்த் தோன்றும்; மந்திரி, புரோகிதன் வாயிலாகச் சொல்ல வைத்தல் ராஜ காம்பீர்யம் கலந்ததாக இருக்கும் என்று கருதிக் கம்பன் இந்த மாற்றம் ஏற்றான்.

மாற்றம்

2 விசுவாமித்திரர், சனகர் இருவரும் ஒப்புதல் கொடுத்த பின்னே வான்மீகியின் இராமன் நாணேற்றி வில்லொடிக்கின்றான்.

விசுவாமித்திரர் பேசிக் கொண்டிருந்ததை உணர்ந்து, அவர் முகம் நோக்கி, அதன் குறிப்பறிந்து கம்பனின் இராமன் வில்லொடிக்கின்றான்.

ஆசிரியர் கருத்து

வில்லின் வரலாறு, வில்லிற்கான பணயப் பொருள் தன்மை ஆயவற்றை அறிந்த பின்னும் இராமன் ஒப்புதல் கேட்டு நிற்றல் ஏதோ சவால் விடும் தன்மைத்தாய்த் தொனிக்கும்; எனவே, குருவின் குறிப்பறிந்து நாணேற்றல் பண்பின் அடிப் படையானதாகும் எனக் கம்பன் இம்மாற்றம் புகுத்தியுள்ளான்.

28. தயரதனுக்குத் தூதர் தந்த செய்தி

வான்மீகி

ஸர்க்கம் 67 : ''தாங்கள் உத்தரவு செய்தால் இப்பொழுதே என் மந்திரிகள் அயோத்யைக்கு அதி வேகமாய் ரதங்களில் போய், இங்கே நடந்த யாவற்றையும் தசரத மஹாராஜருக்குத் தெரிவிக்கட்டும் .... என்றார். கௌசிகர் அதற்கு ஸம்மதிக்க ஜனகர் மந்திரிகளை அழைத்து, விவாஹ பத்திரிகைகளைக் கொடுத்து, சொல்ல வேண்டியவைகளை நன்றாக எடுத்துச் சொல்லி, தசரதரை ஸகல மரியாதைகளுடன் அழைத்து வரக் கட்டளையிட்டார்.

ஸர்க்கம் 68 : ஜனகரால் அனுப்பப்பட்ட மந்திரிகள் மூன்று நாள் இரவு பகலாய் பிரயாணம் செய்து, குதிரைகள் களைத்து நான்காவது நாள் அயோத்யைக்கு வந்தார்கள் .... மதுரமான வார்த்தைகளால், ''ஸ்வாமி ! .... விசுவாமித்திர மஹரிஷியும் சதானந்த மஹரிஷியும் இப்படிச் சொல்ல அனுமதி கொடுத்தார்கள்'' என்றார்கள். தசரதருடைய பெருந்தன்மையாலும் மரியாதையாலும் பிரியத்தாலும் ...... தைரியமாய் பரபரப்பில்லாமல் அமரிக்கையாய்த் தங்களுடைய ஸமாசாரத்தைத் தசரதருக்குத் தெரிவித்து, அவருடைய மேன்மையால் கட்டுப்பட்டு, அதிகமாய்ச் சொல்லாமல் நிறுத்திக் கொண்டார்கள்.

தூதர்களின் வார்த்தையைக் கேட்டுத் தசரதர் பரமானந்தமடைந்தார்.

கம்பன்

ஆசையுற்று அயர்பவள் ....
.... சனகன் கூறுவான்.

கார்முக : 116/64

' உரை செய்எம் பெரும ! ....
.... அழைத்தல் வேட்கையோ ?

கார்முக : 116/65

மல்வலான் அவ்உரை பகர...............
.... ஓலையும் தூதும் போக்கினன்.

காrமுக : 117/66

முகந்தனர் திருவருள்,...............
.... நெடிது கூறினர்.

எழுச்சி : 117/2

கூறிய தூதரும், ...
.... 'வாசி' என்றனன்.

எழுச்சி : 117/3

மாற்றம்

1 திருமணத்தின் முன் தசரதனும் மிதிலை வந்திடல் வேண்டும் என்ற விழைவோடு சனகர் விசுவாமித்திரரின் ஒப்புதல் கேட்டார் என்பது வான்மீகம்.

உன் மைந்தன் ராமன் திருமணத்தை இன்றே நடத்திடலாமா? இல்லை, அந்த மன்னன் (தயரதன்) தன்னையும் அழைக்க வேண்டுமா? என்கின்றார், கம்பனின் சனகர்.

ஆசிரியர் கருத்து

ஏது காரணம் பற்றியானாலும், ஏது சூழ்நிலையானாலும் மணமக்களில் ஒருவரின் பெற்றோர்களும், பெரியோர்களும் இல்லாமலேயே திருமணம் செய்விக்க முடிவெடுத்தாலும், சாதாரணமாக ஆபத்துக்கால அவசரமின்றேல் – அந்தப் பெற்றோருக்கும் சொல்லியனுப்பி அவர்களுடைய சம்மதத்தையும் பெற்றுத் திருமண நடவடிக்கைகளில் இறங்குவதே நெறி முறையிலானது. ஆனால் கம்பன் இப்படி ஒரு வினவை எழுப்பியதின் மூலம் ஜனகனுடைய ஆர்வத்தையும், பல நாட்களாய் உள்ளத்தில் உறுத்திக் கொண்டிருந்த ஒன்று நீங்கியதால் ஏற்பட்ட மகிழ்ச்சியையும் காட்டும் ஒரு நாடகாலங்கார உத்தியாகும் இது.

மாற்றம்

2 மந்திரிகளையே தூதுவர்களாய் சனகர் தசரதன்பால் அனுப்பினர் என்பது வான்மீகத்தில் காண்பது. அம் மந்திரி-தூதுவர்களிடத்தில் திருமணப் பத்திரிகைகளையும் அனுப்பினர் எனப்படுகின்றது. ஆனல், அந்தப் பத்திரிகைகளைத் தசரதனிடத்தில் சேர்ப்பித்ததாகச் செய்தியில்லை.

தூதர்களை (அவர்கள் மந்திரிகள் அல்ல என்பதை அவர்களுக்கு அணிகலன் முதலியன தயரதன் வழங்கினன் என்னும் பாடல் வருவதால் தெரிகின்றது.) ஓலையுடன் சனகர் அனுப்பினர் என்பது கம்பன் வாக்கு. செய்திகள் செப்பி முடித்து ஓலையையும் தயரதனிடம் தூதர்கள் சேர்ப்பிக்க, அஃது வாசிக்கப்பட்டது எனத் தெரிகின்றது.

ஆசிரியர் கருத்து

திருமணப் பத்திரிகை என்பதனினும் அச் சந்தர்ப்பத்தில் எழுதப் பட்டிருக்கக் கூடியது திருமணம் பற்றிய செய்திகள் அடங்கிய ஓலை என்பதே சரியானது ஆகும். அதனலேயே, கம்பன் ஓலை என்று குறிப்பிட்டுள்ளான். மேலும், எடுத்துச் சென்றது எதுவானலும் அது தயரதன் கை சேர்ந்தது எனத் தெளிவித்தும் உள்ளான், கம்பன். அன்றியும் அரசர்கட்கு பெரும் ஓலையை எப்படிப் பெற வேண்டும்? யார் பெற வேண்டும்? எப்பொழுது யார் வசிக்க வேண்டும் என்ற மரபெல்லாம் இங்கு கம்பனல் தான் விளக்கப்படுகிறது.

29. வந்தான் தசரதன் திருமணத்திற்கு

வான்மீகி

ஸர்க்கம் 69 : மறுநாட் காலையில் தசரதர் பந்து மித்திர உபாத்தியாய மந்திரி வர்க்கங்கள் புடைசூழ அயோத்தியையிலிருந்து புறப்பட்டு, நான்கு தினங்கள் பிரயாணம் செய்து விதேஹ தேசத்திற்கு வந்தார்கள்.

எழுச்சி	:	118/7 — 129/81	=	75	பாடல்கள்
சந்திரசயில	:	129/1 — 134/30	=	30	,,
வரைக்காட்சி	:	134/1 — 141/47	=	47	,,
பூக்கொய்	:	141/1 — 147/39	=	39	,,
நீர் விளையாட்டு	:	147/1 — 152/33	=	33	,,
உண்டாட்டு	:	152/1 — 161/67	=	67	,,
		மொத்தம்	=	291	,,

இத் துணை பாடல்களிலும் தயரதனின் மிதிலைப் பயணத்தில் அவர்கள் கண்ட இயற்கைக் காட்சி இன்பம், கொண்ட அனுபவ உணர்ச்சிகள் முதலாயவை பற்றி மகிழ்ச்சிச் சூழல் தோன்றப் பாடியுள்ளான், கம்பன்.

மாற்றம்

1 சனகரின் தூதுவர்கள் அயோத்தி சேர வெகு வேகமாகப் பிரயாணம் செய்த அதே நாட்கள் அளவிலான பிரயாணத்தில் தசரதனும் பரிவாரங்களும் மிதிலை அடைந்ததாக வான்மீகி வேகம் காட்டுகின்றார் ஒரே வாசகத்தில்.

கம்பனே வந்த வேகத்தை மாற்றி, இன்ப உணர்வின் வேகம் காட்டுகின்றான்.

ஆசிரியர் கருத்து

வனத்திலேயே முற்றுந் துறந்த முனிவனாய் வாழ்ந்த வான்மீகியின் உணர்வுக்கு எட்டாதவைகளைக் கம்பன் (இலக்கிய இலக்கண முறைப்படி) எடுத்துக் காட்டியுள்ளது மனோதத்துவ முறையில் காணும்போழ்து தேவைப்படுவதொன்றே!

வான்மீகி

ஸர்க்கம் 69 : (தொடர்ச்சி) : அதைக் கேட்டு ஜனகர் காணிக்கைகளுடன் அவரை (தசரதரை) எதிர் கொண்டழைத்துத் தகுந்தபடி உபசரித்தார்.

அங்கே வந்திருந்த மஹரிஷிகள் ஒருவர்க்கொருவர் ஸந்தித்து பிரியத்துடன் பேசிக்கொண்டு, அன்றிரவை வெகு ஸந்தோஷமாகக் கழித்தார்கள். தசரதர் ராம லக்ஷ்மணர்களையும் விசுவாமித்திர மஹரிஷியையும் கண்டு, பரமானந்தமடைந்து ஜனகரால் உபசரிக்கப்பட்டு அங்கே வஸித்துக் கொண்டிருந்தார்.

கம்பன்

காவியும், குவளையும் கடிகொள் ....
.... அரசன் மாடு அணுகினான்.

எதிர்கொள் : 165/22

அனிகம் வந்து அடிதொழ, ...
.. ..இறந் தவழ் தடங்கிரிகளே.

எதிர்கொள் : 165/23

இளைய பைங்குரிசில் வந்து, ...
.... எவரினும் மிகுதியான்.

எதிர்கொள் : 165/24

மாற்றம்

2 சனகர் தசரதனை வரவேற்றார்; நகர் எய்திய பின் விசுவாமித்திரர், இராம இலக்குவர்களைத் தசரதன் கண்டு மகிழ்ந்தான்' என்பது வான்மீகம்.

'சனகர் வரவேற்கத் தயரதன் அவரைத் தழுவினான்; உடனே இராம இலக்குவர் தந்தையைக் கண்டு மகிழ இராமனை முன் போன உயிர் திரும்பி வந்த உணர்வோடு தயரதன் தழுவிக் கொண்டான்; பிறகு தாயர் தனயர் சந்திப்பு, தமையன்-தம்பியர் சந்திப்பு நிகழ்ந்தன; அதன் பின் அனைவரும் நகர் புக்கனர் என்பது கம்பன் நோக்கு.

ஆசிரியர் கருத்து

விசுவாமித்திரர் இராமனைத் தன்னுடன் அனுப்பும்படிக் கேட்ட பொழுதும், இராம இலக்குவர்களைப் பிரியும் பொழுதும் தசரதன் பட்ட மன வேதனையின் வேகத்தை மனத்தில் கொண்டு வான்மீகி, அவர்களை மிதிலையில் சந்திக்கச் செய்யவில்லை. ஏதோ, வந்த இடத்தில் புத்திரர்களைப் பார்த்து சந்தோஷித்தான் என்ற சாதாரண நிலையில் காட்சியை அமைத்து விட்டார் வான்மீகி. ஆனால், தயரதன் இடையறு அன்பு இராமனுக்குத் தன் ஊடகத்தே நின்றுருகும் மனோதத்துவ நிலையைப் படம் பிடித்துக் காட்சியில் மெருகுடை மாற்றம் செய்துள்ளான், கம்பன். அன்பு-பாச உணர்வோடு சுவைக்கத் தக்க மாற்றம்.

30. திருமணத்திற்கு முன்னே !

வான்மீகி

ஸர்க்கம் 69 : ஜனகர் யாக காரியங்களை விதிப்படி நடத்தி, தன் புத்திரிகளின் விவாஹத்திற்கு முன்பு நடக்க வேண்டிய அங்குரார்ப்பணம் முதலிய லௌகிக வைதிக காரியங்களில் கவலை செலுத்தினர்.

தசரதரும் மஹரிஷிகளும் மந்திரி பரிவாரங்களும் பந்துக்களும் ஜனகருடைய ஸபா மண்டபத்திற்கு வந்து அவரால் தகுந்தபடி உபசரிக்கப்பட்டார்கள். பிறகு காலதேசத்திற்கு உசிதமாகப் பேசும் திறமையுள்ள தசரதர் ஜனகரைப் பார்த்து. ' எங்களுடைய இக்ஷ்வாகு வம்சத்திற்கு வசிஷ்ட பகவான் பரமகுருவென்றும் ஸகல காரியங்களிலும் முன்னிருந்து பேசுகிறவரென்றும் உமக்குத் தெரியுமல்லவா ? விவாஹம் செய்து கொள்ளும் ஸ்த்ரீ புருஷர்களின் குலம் பத்துத் தலைமுறை வரையில் சுத்தமாயும் கீர்த்தி பெற்றதாயும் இருக்க வேண்டுமென்ற நியாயத்தால் இங்கிருக்கும் விசுவாமித்திரர் முதலிய மஹரிஷிகளின் அனுமதி பெற்று, அவர் என் வம்ச பரம்பரையை கிரமமாக எடுத்துச் சொல்வார்' என்றார்.

பிறகு வஸிஷ்டர் ஜனகரையும் சதானந்தரையும் ஸபையிலுள்ளவர்களையும் பார்த்து ''மனோவாக்கிற்கெட்டாத ஸ்வரூபத்தையுடைய மஹாவிஷ்ணுவிடத்திலிருந்து பிரஹ்மா உண்டானர்............இவர்கள் எவ்விதத்திலும் ஒருவர்க்கொருவர் தகுந்த வரன்கள். ஆகையால் இதை நீர் அங்கீகரிக்க வேண்டும்.'' என்றார்.

ஸர்க்கம் 71 : அதைக் கேட்டு ஜனகர் கைகூப்பி, ''மஹரிஷே! நல்ல குலத்தில் பிறந்தவன் விவாஹ காலத்தில் தன் வம்ச பரம்பரையை எடுத்துச் சொல்ல வேண்டும். அப்படியே என் குலக் கிரமத்தைச் சொல்லுகிறேன். .... என் புத்திரிகளுக்குப் பரம மங்களமுண்டாவதற்கு வேண்டிய வைதிகக் கிரியைகளை நானும் செய்கிறேன்'' என்றார்.

ஸர்க்கம் 72 : பின்பு விசுவாமித்திரர் வஸிஷ்டருடன் ஆலோசித்து பராக்கிரமசாலியான ஜனகரைப் பார்த்து ''ராஜ சிரேஷ்ட ! .... ராமனுக்கும் ஸீதைக்கும் லக்ஷ்மணனுக்கும் ஊர்மிளைக்கும்

நடக்கும் விவாஹம் இரண்டு வம்சங்களுக்கும் தகுந்தது. .... தர்மாத்வான குசத்வஜருக்கு இரண்டு பெண்களிருப்பதாகக் கேள்விப்படுகிறேன். ரூப லாவண்யத்தில் நிகரற்ற அந்த கன்யைகளைத் தசரத புத்திரர்களான பரதனுக்கும் சத்ருக்கனனுக்கும் விவாஹம் செய்விக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்'' என்றார்.

அங்கே (விடுதியில்) அவர் (தசரதர்) விதிப்படி நாந்தி சிராத்தம் செய்து மறுநாட் காலையில் தன் குமாரர்களுக்கு விரத ஸமாவர்த்தனத்தை முடித்தார். ஏராளமாகப் பால் கொடுக்கும் பசுக்களைக் கன்றுகளுடனும் தங்கக் கட்டுகளுடைய கொம்புகளுடனும், பால் கறக்க வெண்கலப் பாத்திரங்களுடனும் ஒவ்வொரு பிராஹ்மணருக்கும் லக்ஷ லக்ஷமாய்த் தானம் செய்து, அளவற்ற திரவியங்களையும் கொடுத்தார்.

கம்பன்

பஞ்சி சூழ் மெல் அடிப் பாவை ....
.... மாவீதி சென்று எய்தினன்.

எதிர்கொள் : 167/32

பேதைமார் முதல் கடைப் பேரிளம் ....
.... உற்றவாறு உரை செய்வாம்.

எதிர்கொள் : 167/34

உலாவியற்	—	167/1-175/54	= 54 பாடல்கள்
கோலங்காண்	—	175/1-182/43	= 43 ,,
கடிமண	—	182/1-188/38	= 38 ,,
		மொத்தம்	= 135 ,,

உள்நிறை நிமிர்செல்வம் ... .
.... ஒத்தது அம் மணநாளே.

கடிமண : 188/38

மாற்றம்

1 திருமணத்திற்கு முன் சனகர் வைதிக காரியங்களில் கவனம் செலுத்தினர் (கவலை கொண்டார்) என்று மட்டும் வான்மீகி குறிப்பிட்டுள்ளார்.

திருமணத்திற்கு முன்பு ஊரே குதூகலமாய், கோலாகல மாய் மகிழ்ச்சி பொங்க இருந்த கோலத்தை வர்ணித்துள்ளான், கம்பன்.

ஆசிரியர் கருத்து

கானகத்தில் வசித்த வான்மீகி முனிவர்க்கு அந்த அழகு நிலை தெரிவதற்கு நியாயமில்லை. எனவே உலகியற்கு ஒப்ப கம்பன் கொண்ட வர்ணனை இன்பம் பயப்பதே.

மாற்றம்

2 திருமண தினத்திற்கு முன்பே பரத சத்ருக்னருக்கு, சனகரின் தம்பி குசத்வஜரின் புத்திரிகளை திருமணம் செய்விக்க விசுவாமித்திரர் கேட்கின்றார், வான்மீகத்தில்.

இவர்களின் திருமணம் பற்றிய முன் பேச்சுக்கே இடமில்லை கம்பனில். இராமன்-சீதை திருமணம் நடந்தேறியபின், பரதன் முதலிய மூவருக்கும் திருமணம் நடந்ததாக மட்டும் கடிமணப் படலத்தில் (197/101) கம்பன் பாடுகின்றான்.

ஆசிரியர் கருத்து

என்னதான் இராமன் - சீதை திருமணத்திற்கு மிக முக்கியத்துவமும், வளமையும் காட்ட விரும்பினாலும் மற்ற மூவர் திருமணப் பேச்சுக்கள் - நிச்சயங்கள் - பற்றியும் முதலிலேயே எடுத்துக் காட்டாமல் ஒரு பாடலில் கடைசியில் பாடி முடித்த தற்குக் காரணம் கதைக்குத் தேவையில்லாத ஒன்றாதலாலேதான்.

31. சுற்றம் வந்ததோ திருமணத்திற்கு?

வான்மீகி

ஸர்க்கம் 73 : எந்தத் தினத்தில் தசரதர் தன் புத்திரர்களுக்கு விரத ஸமாவர்த்தனம் செய்தாரோ அன்று கேகய ராஜபுத்திரனும் பரதனுக்கு மாமனுமான யுதாஜித் மிதிலைக்கு வந்து தசரதரைக் கண்டு க்ஷேமம் விசாரித்து, ''மஹாராஜ! தாமும் இன்னும் யாருடைய க்ஷேமத்தைக் கோருகிறீர்களோ அவர்களும் ஸௌக்கிய மென்று கேகயாதிபதி வெகுப் பிரீதியுடன் தெரிவிக்கிருர். என் ஸஹோதரியின் மகனைப் பார்க்க விரும்பி அயோத்யைக்கு வந்தேன். நீங்களெல்லோரும் விவாஹ காரியமாய் மிதிலைக்குப் போனதாகக் கேள்விப்பட்டு இங்கே மிக வேகமாக வந்தேன்'' என்ருர். தனக்கு வெகு பிரியமான தன் மைத்துனனைக் கண்டு தசரதர் ஸந்தோஷித்துத் தகுந்தப்படி உபசரித்தார்.

கம்பன்

பரந்த தேர், களிறு, ...
.... அமரர் போன்றனர்.

கடிமண : 188/42

மாற்றம்

1 சனகருடைய சுற்றம் சூழ்ந்தது திருமணத்திற்காக என்று எடுத்துக் காட்டிய வான்மீகி, பின்னர் தசரதனுடைய மைத்துனனை அந்தச் சூழலுக்குக் கொண்டு வந்து நிறுத்தியுள்ளார்.

கம்பன் காட்சிகளில் தசரதனின் சுற்றத்தார் எவரும் காண்பிக்கப்படவில்லை.

வான்மீகி

ஸர்க்கம் 73 (தொடர்ச்சி) : இது முழுவதிலும் ராஜ மரியாதைகள் பற்றியும், வைதிகத் திருமணச் சடங்குகள் பற்றியுமே வான்மீகி எழுதியுள்ளார்.

கம்பன்

கடிமணப்படலம் : இது முழுவதிலும் ராஜ மரியாதைகள் பற்றியும், ராஜபோகத் திருமணக் கோலாகலமான, குதூகலமான சூழ்நிலை பற்றியும் கம்பன் வர்ணித்துள்ளான்.

மாற்றம்

2 வர்ணனைச் செய்திகள் மாறுபட்டுள்ளன.

ஆசிரியர் கருத்து

கம்பன் வருணனையில் வைதிக முறைப்படி திருமணம் நடைபெற்றதை நன்கு விளக்குவதுடன் தேவர்களும் அயன் அரன் முதலியவர்களும் திருமணம் காண வந்தனர் என்று பேசுகிறான்.

32. சகுனத்தடை

வான்மீகி

ஸர்க்கம் 74 : பிறகு தசரதர் புத்திரமித்திர பந்து வர்க்க பரிவார ஸைன்யங்களுடன் மஹரிஷிகளை முன்னிட்டுக் கொண்டு அயோத்யைக்குத் திரும்பும் பொழுது காக்கை முதலிய பக்ஷிகள் கடுமையாகக் கத்தின. ஆனால் மிருகங்கள் பிரதக்ஷிணமாய்ச் சென்றன. அதைக் கண்டு தசரதர் வஸிஷ்ட மஹரிஷே! பாருங்கள். பக்ஷிகள்! பயங்கரமாகக் கத்துகின்றன. மிருகங்களோ பிரதக்ஷிணமாகச் செல்கின்றன. என் தேகம் நடுங்குகிறது. மனத்தில் கவலை குடி கொண்டிருக்கிறது. இதன் பயமென்ன?'' என்று கேட்டார். அந்த முனி சிரேஷ்டர் ஸமீபத்தில் நமக்கு ஆபத்து நேருமென்பதைப் பக்ஷிகள் தெரிவிக்கின்றன. ஆனால் அது நிவர்த்தியாகுமென்பதை மிருகங்கள் குறிப்பிடுகின்றன. ஆகையால் கவலைப்பட நியாயமில்லை'' என்றார்.

கம்பன்

ஏகும் அளவையின் வந்தன, ...
.... நின்றான், நெறி வந்தான்.

பரசுராம : 198/5

நின்றே, நெறி உணர்வான், ...
.... நன்றாய் விடும்' என்றான்.

பரசுராம : 198/6

மாற்றம்

1 துர்ச் சகுனம் பட்சிகளாலும், நற்சகுனம் மிருகங்களாலும் காட்டுகின்றார், வான்மீகி.

தீச்சகுனம், நற்சகுனம் இரண்டையுமே பட்சிகளைக் கொண்டு காட்டுகின்றான், கம்பன்.

ஆசிரியர் கருத்து

காட்டுவழிப் பாதையேயென்றாலும் கூட, மிதிலையைத் தாண்டியவுடனேயே மிருகங்களின் நடமாட்டம் இருக்குமெனச்

சொல்ல முடியாது. ஆனுல், எங்குமே பறவைகளின் காட்சி விழும்; ஆகையால் கம்பன் மிருகங்களுக்கு இடம் கொடாமல் பறவைகளைக் கொண்டே சகுனக் காட்சியில் மாற்றம் செய்துள்ளான்.

மாற்றம்

2 சகுன பலன் பற்றி தசரதன் வசிட்டரைக் கேட்டான் என்பது வான்மீகம்.

கம்பனே நிமித்திகனைத் தயரதன் அழைத்துச் சகுன பலன் கேட்டான் என்கின்ருன்.

ஆசிரியர் கருத்து

நிமித்திகன் தான் தக்கவன். முடிசூட்டு நாள் பார்த்தவர்களும் கணிதர்களே அன்றி வசிட்டன் அல்லன்.

33. யாரிவன்?

வான்மீகி

ஸர்க்கம் 74: இப்படி எங்கும் பயங்கரமான இருள் சூழ்ந்த பொழுது பரசுராமர், ஜடா மண்டலத்துடன் மின்னற் கொடியைப் போன்ற வில்லையும் சிரேஷ்டமான பாணத்தையும் கையில் பிடித்துக் கொண்டு தோளில் சத்துருக்களை வேரறுக்கும் கோடரியுடன் அவர்களுக்கெதிரில் தோன்றினர். .... தசரத புத்திரனை ராமனையே லக்ஷ்யம் செய்து, இப்படிச் சொன்னர்.

ஸர்க்கம் 75: 'தசரத புத்திரனை ராம! சிவதனுஸை முறித்தது வெகு ஆச்சரியமான காரியமே. அப்படி நடக்குமென்று மனத் தாலும் நினைக்க முடியாது. ஆகையால் அதன் உண்மையை அறிய நான் இந்த வில்லுடன் வந்திருக்கிறேன். இந்த சிரேஷ்டமான ஆயுதம் ஜமதக்னி என்ற என் பிதாவால் எனக்குக் கிடைத்தது. நீ சிவதனுஸை முறித்தது உண்மையானல், இதை எடுத்து வளைத்து நாணேற்றி, இந்த சிரேஷ்டமான பாணத்தைப் பூட்டு. அதனுல் உன் பலத்தை அறிந்து உன் வீரியத்தை மெச்சி, உன்னுடன் யுத்தம் செய்வேன்' என்றார்.

கம்பன்

சையம் புக நிமிர் அக்கடல் ....
.... என வெய்துறும் வேலை.

பரசுராம: 200/15

பொங்கும் படைஇரிய, கிளர் ....
.... ஆரோ?'' எனும் அளவில்

பரசுராம: 200/16

அரைசன், அவனிடை வந்து, ...
.... நின்று, இவை மொழிவான்.

பரசுராம: 200/17

'இற்று ஒடிய சிலையின் ....
... . வரவு' என்றனன் உரவோன்.

பரசுராம : 200/18

மாற்றம்

முன் பின் அறியாத பரசுராமன், இராமன் எதிரில் வந்தவுடனேயே சவால் விடுகின்றான், தன்னிடம் இருந்த வில்லை இராமன் நாணேற்ற வேண்டும் என்று. அப்பொழுது அவ்வில் தனக்குத் தன் பிதா ஜமதக்னி முனிவரால் கொடுக்கப்பட்டது என்று சொல்கின்றான். அதிலிருந்தே 'யாரிவன்' என்பதை இராமன் ஊகித்தறிய முடியும். இது வான்மீகத்தின்படி.

'யாரிவன்?' என இராமன் தன் தந்தையைக் கேட்கிறான். இதற்குப் பதில் வரும் முன்னே பரசுராமன் முந்திக் கொண்டு சவால் விடுகின்றான். அப்பொழுதும் தான் யாரென மறைமுகமாகவும் குறிப்பாகவும் கூட அறிமுகப்படுத்திக் கொள்ளவில்லை. அவன் தன் வில்லிற்கே முக்கியத்துவம் காட்டுகின்றான். இது கம்பனின்படி.

ஆசிரியர் கருத்து

இராமன் ஒடித்த வில்லிற்கு இணையான வில்லை வைத்திருந்த வீரன் தணியாச் சீற்றத்துடன் வந்த சூழ்நிலையில் வீரனிடம் வீரன் பேசும் வேகத்தைக் காட்டக் கருதித் துவக்கத்தில் 'யாரிவன்?' என இராமன் கேட்ட கேள்விக்கு உடனடி பதிலைக் குறிக்காது விட்டான் கம்பன்.

34. வில்லிற்கு இலக்கு

வான்மீகி

ஸர்க்கம் : 76 ராமன் தன் பிதாவிற்கெதிரில் உரக்கப் பேசக் கூடாதென்ற மரியாதையை அனுஸரித்துப் பரசுராமரைப் பார்த்து மெதுவாய் ''பிருகு குல திலக ! ....'' என்று அதிகக் கோபத்துடன் பரசுராமருடைய கையிலிருந்து வில்லையும் பாணத்தையும் வெகு லாவகமாக வாங்கி, வில்லை வளைத்து நாணேற்றிப் பாணத்தைப் பூட்டி, ''தாங்கள் சொன்னபடி செய்தேன். தாங்கள் பிருகு வம்சத்தில் பிறந்த பிராம்மண சிரேஷ்டர். என் குருவான விசுவாமித்திரருடைய ஸகோதரி தங்களுடைய பிதாவைப் பெற்றவள். ஆகையால் தங்களுடைய உயிரை வாங்கும் இந்தப் பாணத்தை பிரயோகிக்க முடியாமலிருக்கிறேன். இந்தப் பாணமோ விஷ்ணுவைச் சேர்ந்தது. சத்துருவை ஜயிக்காமல் திரும்பாது; பலத்தையும் கர்வத்தையும் அழிக்கும். வீண் போகாதது. தங்களுடைய தபோ பலத்தால் ஸம்பாதித்த உத்தம லோகங்களை அடையாமல் செய்யட்டுமா? அந்தத் தவத்தின் பயனை இதற்குப் பலி கொடுக்கிறீர்களா? அல்லது நினைத்த லோகங்களுக்குப் போகும் தங்களுடைய சக்தியை அழிக்கட்டுமா'' என்றார்.

''என் தவத்தால் ஸம்பாதித்த உத்தம லோகங்களை நான் அடையாமல் செய்'' என்றான் (பரசுராமன்).

கம்பன்

என்றனன் என்ன, நின்ற ....
.... தோளுற வாங்கி, சொல்லும்.

பரசுராம : 203/35

பூதலத்து அரசை எல்லாம் ....
.... 'இயம்புதி விரைவின்!' என்றான்.

பரசுராம : 203/36

எய்த அம்பு இடை பழுது ....
.... எலாம் வாரி, மீண்டதே.

பரசுராம : 203/39

மாற்றம்

1 சினத்தோடு பேசி நின்ற பரசுராமனிடத்திலிருந்து இராமன் அதிகக் கோபத்துடன் வில்லை வாங்கினான் என்கின்றார், வான்மீகி.

முறுவலோடு, ஒளி வீசும் முகம் கொண்டு இராமன் பரசுராமனிடமிருந்து வில்லை வாங்கினான் என்கின்றான், கம்பன்.

ஆசிரியர் கருத்து

இராமனுடைய இனிய பண்புகளையும், வீரத்தின் ஒப்புமை இன்மையையும் காணும் பொழுது, அவன் பால் சினத்தின் அறிகுறியும் தோன்றக் கூடாது - தோன்றத் தேவையில்லை - என்ற மனோதத்துவ அடிப்படையில் இந்த மாற்றம் அமைந்துள்ளது.

மாற்றம்

2 பாணத்திற்கு இலக்காக எதனைக் கொள்வது என்று மூன்று மாற்று யோசனைகளைக் கூறி வான்மீகியின் இராமன் பரசுராமனைக் கேட்கின்றான்.

கம்பனின் இராமனோ 'யாது இதற்கு இலக்கம்?' என்று கேட்கின்றான்; பரசுராமனும் இன்னது என்கின்றான்.

ஆசிரியர் கருத்து

வில் வளைத்து நாணேற்றி பாணத்தைப்பூட்டி விட்டதால் அகம்பாவம் கொண்டு விட்ட தொனி தோன்றுகிறது வான்மீகியின் இராமனிடத்தில். அந்த கர்வம் இடம் பெறக் கூடாது என்று கருதி, கம்பன் எளியதான கேள்வியை இராமன் வாயால் அமைத்து மாற்றம் செய்துள்ளான்.

35. பாட்டன் வீடு போனுன் பரதன் !

வான்மீகி

ஸர்க்கம் 77 : இப்படிச் சில காலம் சென்ற பிறகு தசரதர் 'பரத' உன் மாமன் உன்னைக் கேகய தேசத்திற்கு அழைத்துப்போக வெகு நாளாகக் காத்துக் கொண்டிருக்கிருர். மிதிலையில் ரிஷிகளுக் கெதிரில் அப்படியே செய்வதாகச் சொல்லியிருக்கிறேன். அவருடைய இஷ்டத்தைப் பூர்த்தி செய்' என்ருர். 'என்னிடத் திலுள்ள பிரியத்தால் என்னை விட்டுப் பிரிய மனமில்லாமல் 'போ' என்று நேரில் சொல்லவில்லை. தன் எண்ணத்தை இப்படி வெளியிடுகிருர்' என்று அறிந்த பரதன், தகப்பனையும் ராஜ பத்தினிகளையும் ராமனையும் நமஸ்கரித்து, லக்ஷ்மணனை ஆலிங்கனம் செய்து அவர்களிடத்தில் சொல்லிக் கொண்டு மாமனுடன் கேகய தேசத்திற்குப் போனுர்.

கம்பன்

நண்ணினர், இன்பத்து வைகும் ....
.... ஓர் பொருள் இயம்புவான்.

பரசுராம : 204/46

'ஆணையின் நினது முதாதை, ...
.... மொய்ம்பினுய் ! போதி' என்றனன்.

பரசுராம : 205/47

உளை விரி புரவித் தேர் உதாசித்து ....
.... கேகய நாடு நண்ணினுன்.

பரசுராம : 205/49

மாற்றம்

'உன் மாமன் உன்னை அழைத்துச் செல்ல காத்துள்ளார்' என்று தசரதன் கூற, தன்னைப் பிரிய மனமில்லை தந்தைக்கு என்ற அளவிற்குப் பாசத்தின் உச்சத்தில் நிற்பதாய்க் கருதிக் கொள்கின்ருன், வான்மீகியின் பரதன்.

கம்பனின் தயரதனே 'போதி' என்றே கூறுகின்ருன். பரதனும் உதாசித்தோடு போகின்ருன். இங்கு பரதனுக்குப் பாசத்தின் எண்ணமே தோன்றுவதில்லே, பிரிவுத் துயர் தோன்ற !

ஆசிரியர் கருத்து

திருமணச் சூழலில் உதாசித்தைக் கம்பன் மிதிலேக்குக் கொணரவில்லே. அதனுல், இங்கும் அவனேக் காரணம் காட்டித் தயரதன் பரதனிடம் கூறவில்லே என்ற நிலே ஏற்படுகின்றது, இந்த மாற்றத்திற்கு. என்ருலும், பின்னர் சர்ச்சைக்குரிய செயலாகவே மாறிவிடுகின்றது இம்மாற்றம் !

ஆசிரியரைப் பற்றி



பி. சி. சிதாபதி—'குறளடிமை' சேலம் மாவட்டம் சங்ககிரி துர்கத்தில் (25-4-1926) பிறந்தவர். தந்தையார், காலம் சென்ற கிருஷ்ணசாமி நாயுடு அவர்களும், தாயார் திருமதி. அங்கம்மா அவர்களும் பள்ளி ஆசிரியர்கள்.

இவர் சேலம் சந்திப்பில் தென்பிராந்திய இரயில்வேயின் நிர்மாணப் பிரிவின் பொறிஇயல் வல்லுனர் அலுவலக மேற் பார்வையாளராக (Office Supdt, Executive Engineers Office, S. Rly., Construction, Salem Jn.) பணியாற்றி வருகின்றார்.

கடந்த சுமார் பதினைந்து ஆண்டுகளாக காரைக்குடி கம்பன் விழா உட்படப் பல்வேறு தமிழ் விழாக்களில் பங்கேற்று வருகின்றார். இவருடைய ஆய்வுக் கட்டுரைகள் அவ்வப் போழ்து பல்வேறு விழா மலர்களில் இடம் பெற்றுள்ளன.

இவருடைய திருக்குறள் தொண்டினைப் பாராட்டி ஆனந்தவிகடனில் சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன் 'சைக்கிளில் திருக்குறள்' என்ற தலைப்பில் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளார்.

ஆசிரியரின் பிற நூல்கள் :—

1. கம்பன் சொல்லும் பொருளும் — பால காண்டம்.
2. ,, ,, அயோத்தியா காண்டம்.
3. வாலி வழக்கில் தீர்ப்பு.